
கல்கி
KALKI ஜூன் 24. 1956
4 அணா


'ஹா! லைப்பாய் சோப்
உபயோகித்துக்குளிக்க
வேண்டிய நேரம் இதுதான்!'
—அது சரீரத்தை
சுத்தமாக்குவதுடன்
புத்துணர்ச்சியைத்
தருகிறது!
LIFEBUOY
SOAP
LIFEBUOY
SOAP

கல்கி
பொருளடக்கம்

ஜூன் 24, 1956

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

அரசாங்கம் என்ன செய்கிறது?



நாட்டு மக்களிடையே நடைபெற்று வரும் துவேஷப் பிரசாரத்தைக் குறித்துச் சர்க்கார் எவ்விதக் கவலையுமில்லாமல் உட்கார்ந்து கொண்டிருப்பது பற்றி ராஜாஜி ஆச்சரியம் தெரிவிக்கிறார்



மலர் 15 | தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற | துன்முகி ௵
இதழ் 47 | தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | ஆனி 11

ஒன்று பட்டால் உண்டு வாழ்வே

சென்ற வாரம் இரண்டு குரல்கள் - மிக வன்மையான குரல்கள் – காதில் விழுந்தன. அவற்றின் பொருளைப் பாரத மக்கள், முக்கியமாகத் தமிழக மக்கள் மனத்தில் நன்றாக வாங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக நினைவு கூறுகிறோம்.

வடக்கே ரோதாக் என்ற ஊரிலே பாரதப் பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேரு நிகழ்த்திய பேருரையை முதலில் எடுத்துக்கொள்ள விரும்புகிறோம்.

பாரத நாட்டில் நிர்வாக வசதிக்காக ராஜ்ய எல்லைகளை வகுக்க ஆரம்பிக்கப் போய் அது அர்த்தமற்ற மொழி துவேஷத்தை வளர்த்து, பாரதத்தின் ஐக்கியத்தையே சிதறடித்து வருகிறது. நமது ஐக்கியத்தையும் வளர்ச்சியையும், உலக அரங்கில் நமக்கு ஏற்பட்டுள்ள தார்மீக செல்வாக்கையும் பொறாமைக் கண்ணோடு பார்த்து வந்தவர்கள் இந்தியாவில் மொழியின் அடிப்படையில் நடைபெற்று வரும் சண்டைகளையும் பூசல்களையும் இன்னும் தூபம் போட்டு வளர்த்து நமது முன்னேற்றத்தைத் தடுக்கப் பார்க்கின்றனர் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்.

பழைய சரித்திரத்தையும் நமக்கு நினைவுபடுத்தியிருக்கிறார் பாரதப் பிரதமர் நேரு. ரஜபுத்திரர்களின் குடும்பச் சண்டை பாரதம் முஸ்லிம் ஆட்சிக்கு அடிமையாக்கியது. பின்னர் முஸ்லிம் மன்னர்களிடையே ஏற்பட்ட குடும்பச் சண்டை பாரதம் ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட வழி செய்தது. அப்படியே இந்த அர்த்தமற்ற மொழிச் சண்டையை வளரவிட்டால் மீண்டும் பழைய சரித்திரம் நடைபெறக் கூடும் என்பதுபோல் எச்சரிக்கை செய்திருக்கிறார். அதனால் மொழி வெறிக்கு அடிமைப்பட்டு அரும் பாடு பட்டுப் பெற்ற பாரத சுதந்திரத்துக்கு ஊறு விளைவிக்காதீர்கள் என்று நெஞ்சுருகிப் பேசியிருக்கிறார்.

மொழி வெறிக்கு இடம் கொடுத்தால் பாரதத்தின் பொருளாதார வளர்ச்சி தடைப்பட்டு, வறுமையினின்று நீங்கவே வழியில்லாமல் போகும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார். மொத்தத்தில் பாரதப் பிரதமரின் அந்தப் பேச்சைப் பாரத மக்கள் நன்றாக மனத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டியதாகும்.

"மொழி யுணர்ச்சி மட்டும் அல்ல. நமது முன்னேற்றத்தைத் தடுக்கக் கூடியது. நடைபெற்று வரும் ஜாதித் துவேஷப் பிரசாரமும் நமது முன்னேற்றத்தைத் தடுத்து விடக் கூடியதுதான். இந்தத் துவேஷப் பிரசாரம் தமிழ் நாட்டில் பகிரங்கமாக நடைபெற்று வருகிறது. இதை ஒழித்து மக்கள் ஒத்து வாழ்ந்தாலன்றி நாம் முன்னேற முடியாது!" என்று சென்ற வாரம் ராஜாஜி மயிலாப்பூரில் நிகழ்த்திய சொற்பொழிவில் வற்புறுத்தினார்.


"பிரிட்டிஷ் ஆட்சியில் பகிரங்கமாகத் துவேஷப் பிரசாரம் நடைபெறவில்லை. இப்போது இந்தத் துவேஷப் பிரசாரம் அரசாங்கத்தால் தடைபடாமல் நடைபெற்று வருகிறது. பிரிட்டிஷ் ஆட்சியில் இத்தகைய இனத்துவேஷப் பிரசாரங்களை ஒடுக்க இருந்த சட்ட திட்டங்கள் இன்றைக்கும் இருக்கின்றன. அதை அமுல் நடத்தும் ஆட்சியாளர்கள், பார்த்தும் பார்க்காதது போலிருக்கிறார்கள். இந்தத் துவேஷப் பிரசாரம் ஒழிந்து மக்கள் ஒருவருக்கொருவர் ஒத்து வாழ வேண்டும்! ஒப்புரவு

பாரத நாட்டுக்கு நன்றி

சர்வதேச அரங்கில் பாரதநாடு செய்துள்ள அரும்பெரும் தொண்டுகள் பிரமிக்கத்தக்கவை. நேருஜியின் தலைமையில் இந்தியா பல்வேறு உலகப் பிரச்னைகள் தீருவதற்கு உதவி புரிந்திருக்கிறது. இந்தோனேஷ்யாவில் ஏழு வருஷ காலம் நடந்து வந்த பயங்கர யுத்தம் நின்று, அந்த நாடு சுதந்திரம் பெற ஐ. நா. சபையின் மூலம் உதவி புரிந்த பெருமை இந்தியாவுக்கே உரியது. கொரியாப் போர் சீன எல்லையைக் கடந்து போகாமல் தடுத்ததும் இந்தியாதான். இந்தோசீனப் போர் நின்று சமரசம் ஏற்படுவதற்கும் பாரத நாடு துணைபுரிந்ததை இதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது. போர் நின்று உலகில் அமைதி நிலவுவதற்கான மணி மந்திரமான பஞ்ச சீலக் கொள்கையை உருவாக்கிய பெருமையும் இந்தியாவைச் சேர்ந்ததுதான். இவையெல்லாம் உலக மக்கள் அறிந்தவையே. ஆனால், உலகத்துக்கு இதுவரையில் தெரியாமல் இருந்த ஓர் இரகசியம் இப்போது வெளியாகியிருக்கிறது. பர்மா நாட்டின் பிரதமரான ஸ்ரீ நூ அதை வெளியிட்டிருக்கிறார்.

"பர்மாவைப் பயங்கரமான இருள் சூழ்ந்து கொண்டிருந்தபோது, அதன் எல்லையற்ற சோகத்தை ஆனந்தமாக மாற்றியது இந்தியாதான். பர்மா கலகக்காரர்களிடம் சிக்கியதால் எல்லோரும் கை விட்டுவிட்டனர். அச் சமயத்தில் கொடிய கலகத்தை அடக்க இந்தியா ஆயிரக்கணக்கான பெரிய துப்பாக்கிகள் கொடுத்து உதவி செய்தது" என்று கூறி, நூ பாரத நாட்டுக்குத் தமது நன்றியை உலகம் அறியப் பிரகடனப்படுத்தியிருக்கிறார். புதிதாகச் சுதந்திரம் பெற்ற அண்டை நாடு அராஜகச் சுழலில் சிக்கிச் சீர்குலைந்து விடாமல் காப்பாற்றியதன் மூலம், உலக சரித்திரத்தின் மற்றொரு பொன் ஏட்டில் பாரதநாடு இடம் பெற்றிருக்கிறது என்பதில் ஐயம் என்ன!

ஐந்து மணிப் படிப்பு!



"ஒரு மணி நேரம் படிப்பு என்று வைத்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் பள்ளிக்கூடம் பள்ளி-கூடமாகவே போய் விடும்" (பள்ளி-படுத்துத் தூங்கும் இடம்) என்றார் விநோபாஜி. தமிழில் சிலேடையாகச் சொல்லவும் விநோபாஜிக்குத் தெரியும்.

என்ன சேதி?

இந்தியா அங்கீகரிக்காததேன்?

அல்ஜீரியப் பிரச்னையை ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் பரிசிலனைக்கு அனுப்ப வேண்டும் என்னும் ஆசிய-அரபு நாடுகள் கோஷ்டியின் தீர்மானத்தை இந்தியா அங்கீகரிக்கவில்லை. இதைக் குறித்துச் சிலர் தவறான வியாக்கியானம் செய்ய முற்படலாம். சர்வதேச விஷயங்களில் இந்தியாவின் பொறுப்பு அதிகமாயிருப்பதனால் நாம் மிகவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. காஷ்மீர் பிரச்னையை இந்தியா பல்லாண்டுகளுக்கு முன் ஐ. நா. சபையில் சமர்ப்பித்தும் இதுவரை அவ் விஷயமாக எவ்வித முடிவும் ஏற்படவில்லை. எனவே அவசரப்பட்டு, அல்ஜீரியா விஷயத்தில் ஆசிய — அரபு நாடுகள் கோஷ்டியின் முடிவை ஆதரிக்க இந்தியப் பிரதிநிதிகள் விரும்பாமல் இருக்கலாம்.

இந்தத் தகராறைத் தீர்ப்பதற்கு நேருஜி ஏற்கனவே ஐந்து அம்சத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்திருப்பதனால், இப்போது ஒரு கட்சியை ஆதரிப்பது இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கைக்கு முரணானது என்று சிலர் வாதிக்க இடம் உண்டாகலாம்.

"அல்ஜீரியா பிரஞ்சு உடைமையுமல்ல, அரபு ராஜ்யமுமல்ல, இந்தப் பிரச்னையைத் தனி முறையில் தீர்க்க வேண்டும். மூன்று மாதத்தில் அங்கு சண்டை நின்றால் சுதந்திரமாகத் தேர்தல் நடத்தத் தயார்" என்று பிரஞ்சு பிரதமர் கூறியிருக்கும் இச் சமயத்தில் இந்தப் பிரச்னையை அவசரமாக ஐ. நா. சபையின் தீர்ப்புக்கு விடுவதால் யாதொரு நன்மையும் ஏற்படாது.

நியாயம் வழங்க வேண்டும்

சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியாக இருக்க வேண்டும் என்ற மசோதா இலங்கைப் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மேற்படி மசோதாவுக்குச் சாதகமாக 66 வோட்டுக்களும் பாதகமாக 29 வோட்டுக்களும் பதிவாகியிருக்கின்றன. இருபத்தொன்பது பேர் எதிர்த்து வோட்டளித்திருப்பது சாதாரண எதிர்ப்பு அல்ல; அலட்சியம் செய்யக்கூடிய எண்ணிக்கையும் அல்ல. தமிழ் அங்கத்தினர்களோடு பல இடதுசாரிக் கட்சியினரும் சேர்ந்து வாதாடி எதிர்த்திருக்கின்றனர் என்பது தான் இதில் முக்கியமாகும். இலங்கை சர்க்காரின் தமிழ் மொழி அலட்சியத்தை ஆரம்பத்திலிருந்தே தமிழ் மக்கள் எதிர்த்து வருகின்றனர். அரசாங்க மொழி பற்றிய விவகாரத்தில் எல்லா மக்களின் சம்மதத்தையும் பெறுவதுதான் நியாயம் என்பதை இலங்கையின் எதிர்கால வளர்ச்சியில் ஆவல் உள்ளவர்கள் அனைவரும் ஸ்ரீ பண்டாரநாயகாவிடம் வற்புறுத்தி வந்தார்கள். இந்த யோசனைகளை ஸ்ரீ பண்டாரநாயகா காதில் போட்டுக் கொள்ளவில்லையா? அல்லது சிங்கள வெறியர்களின் கூச்சல் அவர் காதை அடைத்து விட்டதா?

சிங்களம்தான் அரசியல் மொழி என்று மசோதா நிறைவேற்றப்பட்டு விட்டதால் இனிமேல் அதை அமுல் நடத்துவதில் தமிழ் மொழிக்கு அநீதி ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அதற்கு ஒரு வட்டமேஜை கூட்டி ஆலோசிக்கத் தாம் தயாராக இருப்பதாகவும் ஸ்ரீ பண்டாரநாயகா கூறுகிறார்.

தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் நியாயம் வழங்க வேண்டும் என்று உண்மையாக நினைத்தால் அவர் செய்ய வேண்டிய காரியம் வட்டமேஜை கூட்டுவதல்ல; சிங்களத்தைப் போலவே தமிழுக்கும் சம அந்தஸ்து கொடுத்து விடுவதுதான்!

சிங்கள மொழிச் சட்ட அமுலை எதிர்ப்பதற்காக இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து விட்டதுடன் தமிழ் அங்கத்தினர்கள் இலங்கைப் பார்லிமெண்டைப் பகிஷ்கரிக்கப் போகிறார்கள் என்றும் செய்தி வெளியாகியிருக்கிறது. இதற்கு ஆதரவாகப் பதினையாயிரம் சர்க்கார் குமாஸ்தாக்கள் குரல் கொடுத்திருக்கிறார்கள். இந்த எதிர்ப்பை, மனக் கசப்பை, உள்ளக் குமுறலை அலட்சியப்படுத்துவது ராஜதந்திரமாகாது. மேலும் மேலும் இந்த எதிர்ப்பு உணர்ச்சியை வளர விடாமல் தடுப்பதற்கு, தமிழுக்கு உடனே அரசாங்க மொழி அந்தஸ்தைக் கொடுத்து இலங்கையின் சரித்திரத்தில் புகழ்பெற்ற சரித்திர நாயகராக ஸ்ரீ பண்டாரநாயகா விளங்குவார் என்று எதிர்பார்க்கிறோம்.

கலா க்ஷேத்திரத்தில்

கலையுலகிலே ஸ்ரீமதி ருக்மணி தேவி அவர்களுக்குத் தனிப் பெருமையுண்டு. காலத்தின் நவநாகரிக கோலத்தில் சிக்கிக் கொள்ளாமல் தூர விலகியிருந்து, உண்மையான பக்தியோடும் பழைய லட்சியங்களுக்கு ஏற்பவும் கலைத்தேவிக்கு அஞ்சலி செலுத்தி, குடத்து விளக்குபோல் வாழும் பெரும் கலைஞர்களைப் பொது மக்கள் அறிந்து போற்றும் வண்ணம் செய்யும் பெருமை ஸ்ரீமதி ருக்மணி தேவிக்கே உண்டு. அம் முறையில் லட்சிய சாஸ்திர சங்கீதத்துக்குச் சேவை செய்து தனித்து ஒதுங்கி இருந்த முதுபெரும் சங்கீதக்கலைஞர் சங்கீத சாஸ்திர விசாரத ஸ்ரீ கே. வாசுதேவாச்சார்யா அவர்களைச் சென்னைவாசி

களுக்குக் கலாக்ஷேத்திரத்தின் மூலம் அறிமுகப்படுத்தி வைத்தார். இப்பொழுது ஸ்ரீமான் வாசுதேவாச்சார்யா அவர்களின் சாகித்தியங்களைத் தொகுத்து, **நவரத்ன ராகமாலிகா** என்ற பெயரில் அவருடைய பிறந்த நாளான வருகிற ஞாயிற்றுக் கிழமை (ஜூன் 24) வெளியிடுகிறார். கலாக்ஷேத்திரத்தில் நடக்கும் பிறந்த தின வைபவத்துக்கு டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீ டி. எல். வெங்கடராமய்யர் தலைமை தாங்குகிறார்.

சேக்கிழார் திருநாள்

தமிழ் நாட்டுப் பெரியார்களையும் தமிழுக்குப் பணி செய்தவர்களையும் போற்றிப் பாராட்டுவது என்பது தமிழ் நாட்டில் பரவித் தழைத்து வருகிறது. பெரிய புராணம் இயற்றித் தெய்வத் திருத்தமிழை வளர்த்த சேக்கிழார் திருநாளை அவர் பிறந்த குன்றத்தூரில் சென்ற மாதம் கொண்டாடினார்கள். மறைமலை அடிகளின் குமாரரான திரு மறை திருநாவுக்கரசு அவர்களின் முயற்சியினால் ஆண்டுதோறும் குன்றத்தூரில் சேக்கிழார் திருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டு சென்னையிலும் சேக்கிழார் திருநாள் கொண்டாடினார்கள்.

சேக்கிழார் சோழப் பேரரசில் அமைச்சராக இருந்து அருந் தொண்டாற்றியவர். சரித்திரப் போக்கில் சமுதாய வளர்ச்சியைக் காவிய யுத்தியோடு எடுத்துக் காட்டிய பெரியார். அவர் இயற்றிய பெரிய புராணத்தில் பொங்கித் ததும்பும் பக்தி ரஸத்தையும், தமிழ்ச் சுவையையும் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

தமிழ் நாட்டின் வரலாறும், தெய்வப் பண்பும் கலந்து நிற்கும் சக்தி வாய்ந்த பக்தியுடைய பெருநூலை இயற்றிய சேக்கிழார் திருநாளைக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்த சேக்கிழார் திருப்பணிக் கழகக் காரியதரிசியான திரு மறை திருநாவுக்கரசு அவர்களைப் பாராட்டுகிறோம். சேக்கிழார் திருநாளில் பங்கெடுத்துக் கொண்டு சிறப்பித்த தமிழ் அறிஞர்கள் அனைவருக்கும் வாழ்த்துக் கூறுகிறோம்.

பனித்துளி

"அரசியல் வாழ்க்கை பிடிக்காததால் தாம் பார்லிமெண்டு வாழ்க்கையிலிருந்து விலகி பூதான இயக்கத்தில் சேரப் போவதாக ஒரிஸ்ஸா முதல் மந்திரி அறிவித்திருக்கிறார்." —செய்தி

அரசியல் வாழ்க்கையை விட்டு விட மனமின்றி, வரப்போகும் பொதுத் தேர்தலை மனத்தில் கொண்டு, பூதான இயக்கத்தில் உழைப்பது போல் மக்களிடையே பாசாங்கு செய்பவர்களும் உண்டு.

★

"நியாய விலைக் கடைகளில் இப்போதைக்குப் பச்சரிசி மட்டுமே விற்பதற்குச் சர்க்கார் ஏற்பாடு செய்துள்ளனர்." —செய்தி

நியாயவிலைக் கடைகளில் கிடைப்பது பச்சரிசி மட்டுமே என்பதோடு அது மட்டமே என்பதையும் சர்க்கார் அறிந்திருப்பது விசேஷந்தான்!

★

"ஒரு வர்த்தகக் கம்பெனி சிப்பந்தி ஒருவருக்கு அவரது உறவினர் ஒருவர் 14 வருடங்களுக்கு முன் எழுதிப் போட்ட கார்டு நேற்றுத்தான் வந்து சேர்ந்தது." —செய்தி

தபால் கார்டு வந்து சேர்ந்ததென்று அந்தச் சிப்பந்தி தம் நண்பருக்கு உடனே பதில் எழுதிப் போட்டிருப்பார் என்று நம்புகிறோம்.

"கருவலூரில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் அவர்களுக்கு வாசித்து அளிக்கப்பட்ட வரவேற்புப் பத்திரத்தில் வழக்கத்துக்கு விரோதமாகக் குறையோ கோரிக்கையோ எதுவும் அடங்கியிருக்கவில்லை." —செய்தி

கருவலூர் வாசிகள் புத்திசாலிகளாயிருக்க வேண்டும். குறைகளைத் தெரிவித்தாலும் பலன் ஒன்றுதான் என்பதை அறிந்து கொண்டிருக்கிறார்களல்லவா!

★

"கருங்கல்லால் செய்யப்பட்ட விஷ்ணு சிலை ஒன்று, ஒரு பெரிய ஆலமரத்துக் கடியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வெளி வந்து கொண்டிருக்கிறது. பாதி



அளவு சிலைதான் இதுவரை வெளிவந்திருக்கிறது. முற்றும் வந்தபாடில்லை." —செய்தி

அக்கம் பக்கத்தில் ராமசாமி நாயக்கர் இருப்பாரோ என்ற பயத்தில் சிலை வெளி வருவதற்குத் தயங்குகிறதோ என்னவோ?

வட்ட மேஜை

சென்ற சில தினங்களுக்கு முன் திரு காமராஜர் தட்சிணப் பிரதேசம் பற்றிக் கோப்பம் பட்டியில் பேசி இருப்பதைப் பத்திரிகை வாயிலாகப் பார்த்தேன். பொறுப்புள்ள ஒரு தலைவர், இன்று முதன் மந்திரியாக இருக்கும் ஒரு தலைவர், இப்படி நேர்மைக்கு விளக்கம் கோரும் விதமாகப் பேசி இருப்பது என் போன்ற லட்சக்கணக்கான தேச பக்தர்களை அவமதிக்கும் முறையில் இருக்கிறது. திரு காமராஜர் கோஷ்டி மனப்பான்மையில் பேசினாரா! அல்லது தமிழகத்தில் தமக்கிருக்கும் செல்வாக்கின் காரணமாகப் பேசினாரா என்பது தெரியவில்லை. ஒரு கட்சியின் மேலிடத்துத் தீர்மானத்துக்குப் பணியாமல் தான்தோன்றித் தனமாகப் பேசுவது, ஸ்டாலின் ருஷ்யாவில் தன் செல்வாக்கைச் செலவழித்ததுபோல் இருக்கிறது. அமிர்தசரஸில் நடந்த மகா சபையில் இத் தீர்மானத்தை எதிர்த்திருந்தால், ஒரு தலைவரின் தகுதியைத் திரு காமராஜர் பெற்றிருப்பார். அங்கு வாய்மூடி மௌனியாக இருந்து விட்டு, அதுவும் ஆறு மாதங்களுக்குப் பிறகு தம் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பது அரசியல் அநாகரிகம். தட்சிணப் பிரதேசத்தை ஆதரிப்பவர்கள் தி. மு. க. என்றால், அன்று தம் வாழ்நாளெல்லாம் தேச விடுதலையே மூச்சாகக் கொண்ட வ. வே. சு, சிவா, பாரதி, இவர்களும் தி. மு. க. வா! காமராஜர் பேசிய அதே நேரத்தில் அ. இ. கா. தலைவர் திரு தேபர் அவர்கள் ஹைதராபாத்தில் சிறு சிறு ராஜ்யங்களாகப் பிரிந்து போவது தேச ஐக்கியத்துக்கு ஆபத்தானது என்று பேசியிருக்கிறார். திரு தேபரும் தி. மு. க. வா! ஆச்சாரிய வினோபாஜி, நேருஜி, பந்த் போன்ற தலைவர்களையும் திரு காமராஜர் தன் சொல்லால் தேசத் துரோகக் கும்பலில் சேர்க்கிறார். காமராஜின் சொற்பொழிவு தமிழ் நாட்டில் காங்கிரஸையே குழி தோண்டிப் புதைக்கும் அளவுக்கு விஷம் கலந்து இருக்கிறது. இனி திரு காமராஜர் பேசுவதாக இருந்தால், கட்சியில் இருக்கும் சகல பதவிகளையும் விட்டு விட்டுச் சாதாரண ஒரு காங்கிரஸ்காரர் என்ற நிலையில் தான் தட்சிணப் பிரதேசத்தை எதிர்க்க முடியுமே தவிர, காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினராக இருந்துகொண்டு அல்ல.

ஜெயங்கொண்டம் — எம். கிருஷ்ணமூர்த்தி
14—6—56 — எம். கே. ஜெயராமன்

★

சேலம் ஜில்லாவில் உள்ள பொத்தனூர், வேலூர், பாண்டமங்கலம் பகுதிகள் வெற்றிலை உற்பத்திக்குப் பன்னெடுங் காலமாகவே பெயர் பெற்ற செழிப்பான பகுதியாகும்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக இப்புனிதமான வெற்றிலைக் கொடி, பூச்சி விழுந்து ஒருவிதத் தொத்து வியாதியால் பீடிக்கப்பட்டுப் பாழாகி வருகின்றது. இதையே நம்பி வாழ்ந்த ஏராளமான விவசாயக் குடும்பத்தினர் வீழ்ச்சியுற்றதோடு அல்லாமல் பெரிதும் தொல்லைக்கு ஆளாகியிருக்கின்றனர். இது குறித்து இவ் வட்டாரத்திலிருந்து சில பிரமுகர்கள் சென்னை சென்று மந்திரிகள் பலரையும் நேரில் பார்த்து நிலைமையை விளக்கினார்கள். மேலும் இப் பகுதிக்கு விவசாய அமைச்சர் கனம் பக்தவத்சலமும், முதலமைச்சர் கனம் காமராஜரும் வந்திருந்த பொழுது வாழ்விழந்து, துயரிருந்த விவசாயிகள், பூச்சிகளை அழிக்கவும், மாதிரிப் பண்ணை அமைக்கவும் உதவி புரிய வேண்டுமென்ற வேண்டுகோளையும் நேரில் கேட்டுக் கொண்டார்கள். அமைச்சர்களும் ஆவன செய்வதாக வாக்குறுதி அளித்தார்களே தவிர, நடைமுறையில் எந்த விதமான பரிகாரம் செய்ததாகத் தெரியவில்லை.

ஒரே தொழிலை நம்பி வாழ்ந்து வந்தவர்கள் இன்று நாசமடைய வேண்டியவர்களாக ஆக்கப்படுகிறார்கள். அவசியமும், அவசரமுமான இந்தப் பாதுகாப்பைத் தருவதைவிட முக்கிய வேலை விவசாய மந்திரிக்கு வேறு என்ன இருக்க முடியும்! எனவே, வாழ்விழந்து பாழ்பட்டு நிற்கும் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட வெற்றிலை விவசாயிகளுக்கு, வெற்றிலைக்கு மாதிரிப் பண்ணை அமைத்துப் புது வாழ்வு தரக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொத்தனூர் — ஓ. எம். சுப்பிரமணியன்
12-6-56

★

அன்பு மதம் போதித்த அண்ணல் வழி வந்த இந்திய தேசத்தினர் முக்கியமாக விரும்புவது சமாதானம்; வெறுப்பது போர்.

ராணுவ முஸ்தீபுப் போட்டிகள் உலகத்துக்கு நன்மையல்ல. ஒரு தேசம் அதன் சேனை பலத்தை அதிகரிக்க அதிகரிக்க அதன் அருகிலுள்ள மற்றொரு தேசத்துக்குச் சந்தேகம் ஏற்பட்டு விடுகிறது. ராணுவ சக்தி அதிகரித்து விட்டால், தன் நாட்டின் மேல் என்றாவது ஒரு நாள் படை யெடுத்துவிடும் என்ற பீதி ஏற்படும் பொழுது, அந்த நாடும் ராணுவ பலத்தை அதிகரிக்க முற்படுகிறது. இப்படியே தேசத்துக்குத் தேசம் பயமும், பீதியும், வெறுப்பும், கடைசியாகப் போரும் ஏற்பட்டுவிடுகின்றன.

இவைகளைத் தடுக்கத் தமிழ் நாட்டுத் தவப் புதல்வர் ராஜாஜி அவர்கள் அடிக்கடி கூறி வரும் யோசனைகள் போற்றுதற்குரியதாகும்.

"நம் ராணுவ பலத்தைப் பாகிஸ்தானோடு போட்டி யிட்டுப் பெருக்கவில்லை என்பதை உலகத்துக்குக் காட்டினோமானால், எந்த ராணுவ பலத்தினால் அடையும் பயனைக்காட்டிலும் சிறந்த பயனை அடைவோம். ஊராருக்கு நற்புத்தி சொல்லி, நாம் மட்டும் அதைச் செய்யப் பயப்படுவது பாரத நாட்டுக்கு மதிப்பு தராது" என்று ஆணித்தரமாக, தைரியமாக எந்தத் தலைவரும் சொன்னதில்லை.

ராஜாஜி அவர்கள் வெளியிடும் யோசனைகளை இன்று ஒப்புக்கொள்ளாதவர்கள் கூட ஒரு நாள் ஒப்புக் கொண்டுதான் தீருவார்கள். சான்று, தமிழ் நாட்டு அரசியல் சரித்திரமே!

பம்பாய் — கல்கிதாஸன்
18-6-56


கி.ரா.கோபாலன்
எழுதும்
அபலை
அஞ்சுகம்
ஜூலை 8உ
கல்கி
சமூகத் தொடர் கதை
இதழில் ஆரம்பமாகிறது

உங்கள் கேசத்தை அதிக கருமையுடனும் பகட்டுடனும் வைக்க குளிர்ச்சியான வெண்ணிற

ப்ரில்க்ரீம் உபயோகியுங்கள்



கீர்த்திபெற்ற மற்றவர்களைப்போல் வினு மான்காடும் ப்ரில்க்ரீம் உபயோகிக்கிறார்



* ப்ரில்க்ரீமின் சுத்தமான க்ரீமாக்கப்பட்ட எண்ணெய்கள் உங்கள் கேசத்தின் இயற்கை கருமை நிறத்தை சோபிக்கச் செய்கின்றன. சுத்தமான வெண்ணிற ப்ரில்க்ரீமை உங்கள் தலையில் தினந்தோறும் அழுத்தித் தேயுங்கள். பொடுகுகள் ஏற்படுவதை இது தடுத்து உங்கள் கேசத்தை சுத்தமாயும் ஆரோக்கியத்துடனும் வைக்கிறது.

* எந்தளவு ப்ரில்க்ரீம் நீடித்த உபயோகத்திற்கு வருகிறது! இன்றே ஒரு ப்ரில்க்ரீம் ஜாடியை வாங்கி எவ்வளவு காலம் அது நீடித்த உபயோகத்திற்கு வருகிறதென்று பாருங்கள்.

வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்கள்

ப்ரில்க்ரீம் BRYLCREEM

உபயோகிக்கிறார்கள்

BRL. 2968 (a) Tam

கடல் கண்ட கனவு



பதினொன்றும் அத்தியாயம்

இருளிலே சூழ்ச்சி

கொடும்பாளூரைச் சுற்றிச் சில காத தூரங்களிலே அடர்த்தியாக மரமும் செடியும் கொடியுமாக நெருங்கிப் பின்னிக் கொண்டிருந்த கானகத்தில், மலைகள் சிறு சிறு குன்றுகளாகவும் சில இடங்களில் சற்றுப் பெரியனவாகவும் நின்றன. இந்தப் பயங்கரமான கானகத்தில் எங்கோ ஒரு மூலையில், வெளிர் தலைவர்கள் வகுத்து ஓடவிட்ட ஒரு சிற்றோடை, வளைந்து வளைந்து மரங்களுக்கு மத்தியிலே பாதையை நிர்ணயித்துக் கொண்டு குதித்துக் குதித்துச் சென்று கொண்டிருந்தது. அந்த ஓடையின் கரையிலே மதகுகள் அமைந்த ஒரு கால்வாய்ப் பகுதியிலே, மரங்களின் அடர்த்தி சற்றுக் குறைந்து காணப்பட்டது. இந்தச் சூழல் ஏற்கனவே நாம் பார்த்த ஓர் இடந்தான்.

குங்கும மாளிகைக்குள்ளே சிக்கிவிட்ட பூபதி, கண்ணும் கைகால்களும் கட்டப்பட்டு மயக்கம் போட்டு விழுந்தவன், மறுபடியும் கண்ணை விழித்துப் பார்த்தான் அல்லவா. அதே இடந்தான் இந்தக் கானகச் சூழல்! அதில் அதே பழைய கல்லாலான கட்டில் இப்பொழுது சூன்யமாகக் காட்சி தருகிறது. அந்தக் கட்டிலுக்குச் சற்றுத் தொலைவிலே முயல் குட்டிகள் துள்ளிக் கொண்டிருக்கின்றன. இன்னும் சற்றுத் தொலைவிலே ஒரு சிறிய கோவில்—அன்று தெரிந்த அதே கோவில்தான்.

நரபலியைநாடி, தன் வாயைத் திறந்து நிற்கும் ஒரு பெரிய



மணியம்

சோமு

பூதத்தைப் போலக் கோவிலின் வாயில் பயங்கரமாகத் திறந்து கிடக்கிறது. அந்தக் கோவிலின் இடிந்த சுவர்கள் எல்லாம் பயங்கரத்தை அதிகப்படுத்துகின்றன. முண்டும் முடிச்சுக்களுமாக முகப்பிலே நீட்டிக் கொண்டு தோற்றம் தருகிற கற்கள் எல்லாம், வாயைத் திறந்து நிற்கும் பூதத்தின் பயங்கரமான கோரப் பற்களைப் போல் அச்சம் உறுத்துகின்றன. கோவிலின் சுவர் மழை நீர் படிந்து படிந்து கறுப்புக் கறையேறி, பள்ளமும் குழிகளுமாகக் கண் முன்னே நின்று பூதாகாரமாக எச்சரிக்கை செய்கிறது. கோவிலுக்கு எதிரில் வழவழப்பான ஒரு பாறை பலிபீடமாகத் தோன்றுகிறது. அந்தப் பாறையைச் சுற்றி ஏதேதோ சிவப்பும் மஞ்சளுமாகப் பல காட்டுப் பூக்கள் சிதறியிருக்கின்றன. அந்தப் பலி பீடத்துக்கு அருகே ஒரு பெரிய சூலாயுதம் நட்டிருக்கிறது. எத்தனை மனித உடல்களை அது பலி வாங்கிற்றோ என்று. பார்ப்பவர்கள் மனம் பதறும்படியாக மிகக் கூர்மையாக இருக்கிறது. அந்தச் சூலத்தின் மூன்று நுனிகள்! முயல்கள் துள்ளிக் கொண்டு ஓடுவதைப் பார்த்தால்,





இந்தத் திரிசூலத்தைக் கண்டுதான் அப்படி அஞ்சி ஓடுகின்றனவோ என்று சொல்லத் தோன்றுகிறது!

அமாவாசையின் பயங்கரமான இருள், இந்தக் கானகச் சூழ்நிலையின் இயற்கையான பயங்கரத்தைப் பன்மடங்கு அதிகமாக்குகிறது. ஒரே அமைதியான அந்த மௌனம், வஞ்சக நெஞ்சத்தின் ஆழமான மௌனத்தைப் போல, பார்ப்பவரின் உள்ளத்தைத் துன்புறுத்துகிறது. இடையிடையே கேட்கும் ஓடையின் சலசலப்பும், ஆந்தை, கோட்டான், கழுகு, வல்லூறு போன்ற கொடிய பறவைகளின் சிறகடிப்பும், ஓசையும் கானகத்தின் பைசாசத் தன்மையை உறுதிப்படுத்துகின்றன.

இப்படிப்பட்ட மனிதசஞ்சாரமற்ற அடர்த்தியான பூதப் பெருங் காட்டின் அமாவாசை இருட்டிலே, தீவட்டிகள் தெரிகின்றன. ஓடையின் கரையோரமாகப் பத்துப் பதினைந்து தீவட்டிகள் திடீரென்று தெரிகின்றன. அந்தத் தீவட்டிகளின் வெளிச்சத்தில் ஐந்தாறு மனிதர்கள் முக்கியமாகத் தெரிகிறார்கள்.

கானகத்தின் மத்தியில் ஓடையின் கரையோரமாகச் செல்லும் அந்தத் தீவட்டிக் கூட்டத்தின் மத்தியில், எல்லாருக்கும் தலைவனையும் வழிகாட்டியையும் போல, நமக்கு நன்கு அறிமுகமான மாமல்லபுரம் விடுதித் தலைவன் செல்கிறான்.

அவனுடைய கையில் கட்டுவாங்கம் என்று சொல்லப்படுகிற கூர்மையான ஆயுதம் தீவட்டியின் வெளிச்சத்தில் மின்னிக் கொண்டிருக்கிறது.

தீவட்டிக் கூட்டம் இப்பொழுது ஓடையின் கரையோரமாக நடந்து வந்து, அந்தக் கோவிலுக்குள்ளே நுழைகிறது. எல்லாருக்கும் முன்பாக ஒரு மனித பூதம் பெரிய பெரிய கைகால்களோடு நடந்து செல்கிறது. அந்தப் பெரிய மனித பூதத்தைத் தொடர்ந்து நாலைந்து சிறிய மனித பூதங்கள் செல்கின்றன. இவர்களுக்கு அடுத்தாற் போல விடுதித் தலைவன் செல்கிறான். அவனைத் தொடர்ந்து இன்னும் நாலைந்து முக்கிய மனிதர்கள். இவர்களுக்குப் பின்னால் தீவட்டி தாங்கிய மனித பூதங்கள் இன்னும் நாலைந்து!

இந்தக் கூட்டம் கோவிலுக்குள்ளே நுழைந்து வலது சுற்றிலே வந்து, அதன் சுவரிலே தெரிகிற துவாரத்தில் தலையை நீட்டுகின்றன. உள்ளே இவர்களின் வரவை எதிர்பார்த்து நின்றவர்களைப் போல இரண்டு மிகப் பெருந்தடியர்கள் தீவட்டிக் கையோடு காத்து நிற்கிறார்கள்.

எல்லாரும் அந்தச் சுவரின் இரகசிய வாசல் வழியாக நுழைந்து, சுரங்கப் பாதையிலே நடக்கிறார்கள். கொஞ்ச தூரம் நடந்து சென்றதும், அந்தச் சுரங்கச் சுவர்களில் வலது பக்கம் மற்றொரு வாசல் தெரிகிறது. அந்த வாசலிலே நுழைகிறார்கள்.

இப்பொழுது விசாலமான குகை போன்ற சிறு மண்டபச் சுவர்கள், பாறையைக் குடைந்து அமைத்தவை, தெரிகின்றன. அங்கே பத்துப் பதினைந்து பேர் உட்கார்ந்து பேசுவதற்கு இடம் இருக்கிறது. ஓரத்தில் ஒரு பெரிய தகளிகை, பிரகாசமான சுடரோடு எரிந்து கொண்டிருக்கிறது.

"எல்லாரும் அமரலாம்!" என்கிறான் விடுதித் தலைவன்.

தீவட்டி மனிதர்களைத் தவிர மற்ற ஐந்து மனிதர்களும் அந்த இரகசிய குகையிலே உட்காருகிறார்கள்.

"இந்தத் தகளிகை விளக்கு எங்களுக்குப் போதும். நீங்கள் எல்லாரும் வெளியே போய் இரண்டு இரகசிய வாசல்களிலும் காவல் இருங்கள்!" என்று, தலைவன் அந்தத் தீவட்டி மனிதர்களுக்குக் கட்டளையிடுகிறான். உடனே தீவட்டிகள் நகருகின்றன.

இரகசிய குகையின் மண்டபத்தில் இப்பொழுது வெளிச்சம் குறைகிறது. தகளிகை விளக்கின் ஒளி மட்டும் தனக்கு உரிய பிரகாசத்தை வீசுகிறது. தீவட்டிகள் சுரங்கப் பாதையிலே வெளிச்சம் போடுகின்றன!

"தீவட்டிகளில் ஒன்றைத் தவிர மற்றவைகளை எல்லாம் அணைத்து விடுங்கள்!" என்று கதறுகிறான் விடுதித் தலைவன்.

அந்தக் கட்டளை வந்த மறுவினாடி மண்ணும் கற்களும் பொடியுமாக வந்து தீவட்டிகள் அணைகின்றன. ஒரே ஒரு தீவட்டி மட்டும் இப்பொழுது சுரங்கப் பாதைக்கு, அடையாள வெளிச்சம் தருகிறது.

இருள் அதிகமாகி விட்டது. சூழ்நிலையின் சூழ்ச்சியும் வஞ்சகமும் இருளோடு இருளாக ஐக்கியப்பட்டு நெளிய ஆரம்பிக்கின்றன.

மண்டபத்தில் உட்கார்ந்திருந்த ஐந்து மனிதர்களுக்கும் அருகிலே ஓர் இளைஞன் நிற்கிறான்.

"இப்படி இரு தம்பி!" என்கிறான் விடுதித் தலைவன், அவனைப் பார்த்து.

"இல்லை! நிற்கிறேன்!" என்கிறான் அவன் பயத்தோடு.


"சரியாய்ப் போயிற்று! இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் அமர வேண்டிய அரசனையிற்றே நீ! நிற்கலாமா! உன்னை நிறுத்தி வைத்தால் அது மன்னிக்க முடியாத ராஜத்துரோகம் தம்பீ!" என்கிறான் தலைவன். மற்ற ஐந்து மனிதர்களும் சிரிக்கிறார்கள்.

"சிரிக்கிறீர்களா! நண்பர்களே! இந்தச் சிரிப்புத்தான் வேண்டாம் என்கிறேன். இந்தச் சித்திர மாயனை நோக்கி இப்படி ஒரு சிரிப்புச் சிரித்துத்தான், இன்று பல்லவ சிம்மாசனத்தை அன்னியனுக்குப் பறி கொடுத்து விட்டு நிற்கிறோம். தெரிந்ததா? சிரிக்காதீர்கள் தயவு செய்து. எதிர்காலத்தில் நாம் நிர்மாணிக்கப் போகும் புதிய சாம்ராஜ்யத்தின் பெயரால் உங்களை வேண்டிக் கொள்கிறேன். தயவு செய்து சிரிக்காதீர்கள். தம்பி, நீ தயவுசெய்து இந்த இடத்திலே எங்களுக்கு அருகிலே அமர்ந்து கொள்வாயாக!"



Yesterday's Glory–

To-day's Pride!



அழகிய அமைப்பும் சித்திர வேலைப்பாடும் கொண்ட பித்தளை பாத்திரங்களுக்கு இந்தியா வெகு காலமாகவே புகழ் பெற்றுள்ளது. காரணம் அவைகளை உருவாக்கியவர்களின் அரிய வேலைத்திறனும், அபார மேதையுமே. இதுபோலவே நன்கு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களால், மிக்க கவனமான மேற்பார்வையில் தயாரிக்கப்படும் வெஸ்ட்–எண்ட் கடிகாரங்களும் குன்றாப் புகழுடன் இருக்கின்றன. ஏனெனில் ஒவ்வொரு கடிகாரமும் சரியான நேரத்தைக் காட்டுவதுடன் அதன் சொந்தக்காரருக்கு பெருமையையும் அளிக்கிறது. வெஸ்ட்–எண்ட் கம்பெனி இந்தியாவில் மூக்கால் நூற்றுண்டுக்கு மேல் இருந்து வருவதுடன் இந்திய மக்களுக்கு ஒவ்வொரு கெடிகாரத்தை விற்பதின் மூலம் அரிய சேவை செய்து வருகிறது.

SOWAR PRIMA THIN
Centre-Second
Everbright Steel — Rs. 176

WEST END WATCH CO.

BOMBAY CALCUTTA


எக்லா
தென் இந்தியா
விரும்பும் டால்க்!
தெம்பூட்ட, மணமளிக்க
தனிப்பட்ட தயாரிப்பு
இந்த பரத நாட்டியக்காரியைப்போல், நீங்களும் தென்னாட்டின் அதி உஷ்ண கால நிலையிலும்கூட குளுமையும் இதமும் பெறலாம். மனோரம்மிய மணம் பெற்ற எக்லா டால்க் உபயோகித்தால் குளுமையான நுண்ணிய சுகந்தத்திற்கு இந்த ஒப்புயர்வற்ற டால்க்கை அடிக்கடி தாராளமாக உபயோகியுங்கள்
மெல்லிய எக்லா ஒரு லட்சிய முகப்பவுடரும் கூட
கால்கேட்
எக்லா
டால்க் பவுடர்
ECLAT
TALC POWDER
COLGATE
cc/6/2

ஒரே உணர்ச்சி வேகத்தில், உள்ளத்தின் சூழ்ச்சியிலிருந்து பொங்கி வரும் வஞ்சகச் சாயலில், தலைவனுக்கு வார்த்தைகள் தட்டுத் தடையின்றி வருகின்றன. சித்திரமாயன் என்ற அந்த இளைஞன் இப்பொழுது உட்கார்ந்து கொண்டான்.

"நண்பர்களே! இனி அவரவர் அவரவருடைய கருத்தைச் சொல்லலாம்!" என்கிறான் தலைவன். இப்படி அவன் சொல்லி முடித்ததும் ஐந்து பேரில் ஒருவர் எழுந்து பேசுகிறார்:

"தலைவரே! நாங்கள் பேசுவது இருக்கட்டும். என்னோடு இங்கே வந்துள்ள இந்த நான்கு நண்பர்களுக்கும் நாட்டின் இன்றையச் சூழ்நிலை விவரமாகத் தெரியாது. எங்கெங்கோ மறைந்து கிடந்த மனிதர்களை ஒன்று சேர்த்துக் கொண்டு வந்திருக்கிறேன். ஆகையினால் முதலில் நீங்களே இன்றையச் சூழ்நிலையை முதலில் இவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்!"

இவ்வாறு அந்த மனிதர் சொல்லி விட்டுக் கீழே உட்கார்ந்தார்.

விடுதித் தலைவன் எழுந்து நின்று பேச ஆரம்பித்தான்.

"நண்பர்களே! முதன் முதல் நான் பேசுவதற்கு முன்னால், நமக்குள் ஒரு ஐக்கியப்பாடு நிலைபெறுவதற்கான உறுதியைச் செய்து கொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய உறுதி மொழியைச் செய்து கொள்வோம். அதாவது இங்கே இனிமேல் நாம் அடிக்கடி சந்திக்கப் போகிறோம். நமக்குள் அந்தரங்கமான அரசியற் பேச்சுக்கள் எத்தனையோ நடக்கப் போகின்றன. இவற்றையெல்லாம் அன்னிய மனிதர் யாராவது கேட்டாலோ, அல்லது இப்படி ஒரு கூட்டம் இங்கே நடக்கிறது என்று யாருக்காவது தெரிந்தாலோ, நமது திட்டங்கள் எல்லாம் குட்டிச்சுவராகி விடும். அதிலும் அந்த உதய சந்திரன் என்ற குள்ளநரிக்கு விஷயம் எட்டி விட்டதோ, தொலைந்தது காரியம். ஆகவே நாம் ஆறு பேரும் இப்பொழுது இந்தச் சக்தி பீடத்தின் தலைவாசலிலே நின்று, உறுதிப் பிரமாணம் எடுக்கிறோம்! சரிதானா?"

இவ்வாறு தலைவன் கேட்டதும் ஏககாலத்தில் மற்ற ஐந்து பேரும் "சரி" என்று சொன்னார்கள். தலைவன் தொடர்ந்து பேச ஆரம்பித்தான்.

"நண்பர்களே! நமக்குள் நடக்கும் இந்த ஐக்கியத் திட்டங்கள் எல்லாம் மிகவும் இரகசியமானவை — சொல்லுங்கள், நான் சொல்லுவதைத் திருப்பிச் சொல்லுங்கள்."

இதன் பிறகு தலைவன் ஒவ்வொரு வாக்கியமாகச் சொல்லிக் கொண்டு வந்தான். மற்றவர்கள் அந்த வாக்கியத்தைத் திருப்பிச் சொன்னார்கள். தலைவன் சொன்ன உறுதி மொழிகள் வருமாறு:—

"நமக்குள் நடக்கும் இந்த ஐக்கியத் திட்டங்கள் எல்லாம் மிகவும் இரகசியமானவை. இந்தத் திட்டங்கள் நிறைவேறுமட்டும் நாம் ஆறுபேரும் ஆறுடலும் ஒருயிருமாக நிற்போம். இந்த ஆறு மனிதர்களுக்கும் ஆறு இதயங்கள் என்பது பொய். அறுவருக்கும் இதயம் ஒன்றே. நோக்கம் ஒன்றே. கருத்து செயல் அனைத்தும் ஒன்றே. நம்முடைய இலட்சியம் ஈடேறுவதற்காக நமது உடல், பொருள், ஆவி இந்த மூன்றையும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறோம். உலகமே புரண்டாலும் சரி, வானமே இடிந்து விழுந்தாலும் சரி, கடலே கொந்தளித்து வந்தாலும் சரி, நாம் நமக்குள் உள்ள உறவையும் நம்மிடையே நடக்கும் பேச்சு வார்த்தைகளையும், பரம இரகசியமாக வைத்துக் கொள்ளுவோம். அப்படி நம்மில் யாராவது ஒருவர், நம்மையே காட்டிக் கொடுத்து விட்டால், மற்ற ஐந்து பேரும் சேர்ந்து அவரை இந்தச் சக்தி பீடத்தின் பலி வாசலிலேயே உயிரை வாங்கி விடுவோம். இது உறுதி, உறுதி, உறுதி!"

இவ்வாறு சபதம் எடுத்தார்கள் அந்த ஆறு பேரும். இதைப் பார்த்துக் கொண்டேயிருந்த சித்திரமாயனுக்கு உடம்பெல்லாம் பதறியது. இயற்கையில் அவன் ஒரு கோழை. சண்டை, பலி, சிம்மாசனம், சாம்ராஜ்யம் என்ற வார்த்தைகளைக் கேட்டாலே அவனுக்குக் கையும் காலும் வெடவெடத்தன. என்றாலும் உள்ளத்தின் அந்தரங்கத்தில் மட்டும் ஒரு தீவிரமான, நியாயமற்ற பேராசை— தான் எப்படியாவது அந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் அரியணையிலே ஏறி அமர்ந்துவிட வேண்டும் என்று!

தலைவன் மௌனமாயிருந்த சித்திர மாயனைப் பார்த்து, ஒரு சுடக்குப் போட்டுக் கொண்டே சொன்னான் :

"தம்பீ! இந்த வினாடியிலிருந்து உன்னைத் தம்பி என்று அழைப்பதை நிறுத்தி விட்டோம். தெரிந்ததா தம்பீ—ஓ, மறந்து விட்டேனே, மறுபடியும் தம்பி என்கிறேனே—இல்லை, இளவரசே! இனிமேல் நீ—இல்லை இல்லை—நீங்கள் நமது அரசர். நம் சம்பந்தப்பட்டவரை இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் அரசன் நீதான் தம்பீ. இல்லை, நீங்கள்தான் இளவரசே! ஆகையினால் நிமிர்ந்து உட்காருங்கள். இனி, நண்பர்களே, உங்களில் அரசியல் விவரங்கள் முழுதும் தெரியாத நான்கு பேருக்காகச் சுருக்கமாய்த் தமிழ் நாட்டின் இன்றைய நிலைமையை எடுத்துச் சொல்கிறேன். கவனமாகக் கேளுங்கள்.

"நண்பர்களே, இன்று தமிழ் நாடு ஒரு பெரிய கொந்தளிப்பிலே சிக்கிக் கொண்டு நிற்கிறது. அந்தச் சிக்கலை எடுத்துவிட வேண்டிய மகத்தான பணி, நம்முடைய கையிலே இருக்கிறது. அந்தப் புண்ணியப் பணியிலே ஈடுபடுகிறோம் என்ற பெருமை உணர்ச்சியோடு, என் வார்த்தைகளுக்குச் செவி சாயுங்கள்.

நண்பர்களே, பல்லவப் பேரரசு என்பது இந்த உலகிலேயே மிகவும் புகழ்பெற்ற அரச பரம்பரை. மிக மிகப் பூர்வமான இந்தப் பரம்பரை களப்பிரருக்கு அடிமைப்பட்டிருந்தது. அந்த அடிமைத் தளையிலிருந்து இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தப் பரம்பரை விடுபட்டுத் தலை தூக்கி நின்றது. சுமார் நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்பு, சிம்மவிஷ்ணு என்ற பல்லவப் பேரரசர் களப்பிரரையும், மழவர்களையும், சேர சோழ பாண்டியர்களையும் வென்று, மகத்தானதோர் சாம்ராஜ்யத்தை நிறுவினார். அந்த மாபெரும் மன்னருக்குப் பின்னர், மகேந்திர வர்மர் தோன்றி மேலைச் சளுக்கிய மன்னன் புலிகேசியையும், சேர சோழ பாண்டியர்களையும் கதிகலங்கச் செய்தார். அவருக்குப் பின்வந்த அவரது புதல்வர் நரசிம்மவர்மரோ, புலிகேசியையும் முறியடித்து வாதாபியைக் கொண்டதோடு, சேர சோழ பாண்டியர்களையன்றிக் கடல் கடந்த நாடுகளிலும் தமது ஆட்சியைக் கண்டு மன்னாதி மன்னர்கள் எல்லாம் தலைவணங்கும் படியாக வெற்றிக் கொடி நாட்டினார். அப்படி அவர் வீரத்தோடு செய்த போர்களிலெல்லாம் அவருக்கு வலக் கரமாக நின்ற பரம்பரைதான் இன்று கொடும்பாளூரில் ஆட்சிபுரியும் வேளிர் பரம்பரை. அந்தப் பரம்பரையைச் சேர்ந்த ஒருவன் என்று என்னைச் சொல்லிக் கொள்வதில், நான் பெருமைப்படுகிறேன். இன்று அந்த வேளிர் பரம்பரையில் ஆதிரையன் ஒரு கைப் பொம்மையாக இருக்கலாம். உலகம் தெரியாத பிள்ளையாக, ஊர் சுற்றும் யாத்திரிகனாக அவன் இருக்கலாம். ஆனால் அவனுடைய பரம்பரை இந்தத் தமிழ் நாட்டின் சரித்திரத்தில் அழியாப் புகழ் வாய்ந்ததாகும்—"

இந்த இடத்தில் அந்த ஐந்து மனிதர்களில் ஒருவர் எழுந்தார்.

"ஆதிரையனைப் பற்றி உயர்வாக அல்லவா நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் ஒரு சுத்த வீரன் என்றும், உத்தமமான அரசகுமாரன் என்றும் அல்லவா நான் கேள்விப்பட்—"

"நண்பரே நிறுத்தும்" என்றான் தலைவன்.

"சற்று நேரத்துக்கு முன்பு நான் என்ன சொன்னேன் என்பதை அதற்குள் மறந்து விட்டீரே! நாம் ஆறு பேரும் ஆறு உடல், ஆனால் ஒருயிர். நம் அனைவருக்கும் ஒரே இதயம்—"

இப்படித் தலைவன் சொன்னபோது அவனுடைய மீசை துடித்தது. இதைக் கண்ட அந்த மனிதர் நடுங்கினார்.

"தவறு. மன்னிக்க வேண்டும் என்று சொல்லுமையா!" என்றார்கள் அவரோடு இருந்த மற்ற நால்வரும். அதன்பேரில் இவர் அப்படியே சொன்னார்.

"மூன்று தரம் சொல்லும் நண்பரே!" என்றான் தலைவன். மூன்று தரம் தயங்கிக் கொண்டே கூறினார் அவர். இதன் பிறகு தலைவனுடைய பேச்சு தொடர்ந்தது.

"நண்பர்களே! அந்த மகா பராக்கிரமசாலியான நரசிம்ம வர்மருக்குப் பிறகு, இரண்டாம் மகேந்திர வர்மர் தோன்றித் தமது கீர்த்தியை நிலை நாட்டினார். அவருக்குப் பிறகு சாளுக்கியரைப் பெருவளநல்லூரில் வென்ற

FBY-32-TAM




இவன் யெளவன சக்தியையும் வாழ்க்கையில் வெற்றியையும் அனுபவிக்கிருன்

காரணம் இவன் சாப்பிடும்

பைல் பீன்ஸ்

உபரி குண மலசுத்தி மாத்திரை

அசல் பைல் பீன்ஸ் டாக்டர்களால் அங்கீகரிக்கப்பட்டு, உலகப் பிரசித்தி பெற்று விளங்குகிறது. பைல் பீன்ஸ் மலச்சிக்கல், சுறுசுறுப்பின்மை, அஜீர்ணம், பித்தநீர் சுரப்பு இவைகளை அகற்றுகிறது. இது மட்டுமல்ல, சுறுசுறுப்புத் தன்மையையும், இழந்த சக்தியையும் மீண்டும் பெற, பைல் பீன்ஸில் மதிப்புள்ள மருந்து உபகரணங்கள் சேர்ந்துள்ளன. தற்காலத்திய வாழ்க்கையின் வெற்றிக்குத் தேவையான அளவு ஜீவ சக்தியை இது அளிக்கிறது. இப்பொழுதே பைல் பீன்ஸை தவருமல் சாப்பிட ஆரம்பித்து எப்பொழுதும் மிகுந்த சுறுசுறுப்புடன் விளங்குங்கள்.



அசல்

பைல் பீன்ஸை

பார்த்து வாங்குங்கள்.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

சோல் ஏஜண்டுகள் : தாதா அண்டு கம்பெனி
86, லைனியப்ப நாயக் தெரு, சென்னை-3

கெமிகல் டெஸ்டிங் அண்டு அனலிடிகல் லேபரடரி

(இரசாயன பரிசோதனை நிலையம்)

(சென்னை அரசாங்க. கைத்தொழில் & வர்த்தக இலாகா)

கவர்ன்மெண்டு டெக்ஸ்டைல் இன்ஸ்டிடியூட் கட்டிடம் வண்ணாரப்பேட்டை, சென்னை

இந் நிலையத்தில் உலோகங்கள், தாதுப் பொருள்கள், மற்றும் இரசாயனப் பொருள்கள் முதலியவைகளைப் பரிசோதனை செய்து அரசாங்க இலாகாக்களுக்கும் மற்றவர்களுக்கும் பத்திரங்களும் அபிப்பிராயங்களும் வழங்கப்படுகின்றன.

மேற்கூறிய பொருள்களை, அவைக்ள் கிடைக்கும் இடங்களிலும், துறைமுகங்களிலும், மற்றும் எவ்விடங்களிலும் சாம்பிள் செய்து அதற்குகந்த பத்திரங்களும் வழங்கப்படுகின்றன.

விவரங்களுக்கு :

லேபாரடரி சீப் கெமிஸ்டு

அவர்களுக்கு எழுதவும்

வில்லி வில்ஸன் சொல்லுகிறார்

ஒவ்வொன்றுக்கும் உட்கொள்ளும் எல்லை உண்டு!

ஒரு பவுண்டன் பேனாவின் உபயோகம் அநேகமாக அது உட்கொள்ளும் மையின் அளவைப் பொருத்ததாகும் — அதிக மையை உட்கொண்டால், அது அதிக காலம் எழுதும்.



ஆகையால், நீங்கள் ஒரு பேனா வாங்கும்பொழுது தாராளமாக மையை உட்கொள்ளக்கூடிய பேனாவையே வாங்குங்கள். அதுதான் வில்ஸன்!



வில்ஸன்
ரிஜிஸ்டர்டு.

கீழ்க்கண்ட திணுசுகளில் கிடைக்கின்றன:

ட்ராப்பர் பில்லர் செல்ப் பில்லர் வேகோபில் மற்றும் ஏரோபில்

விலைகள்: ஒவ்வொன்றும் ரூ. 3/12 லிருந்து ரூ. 15/- வரை

இந்தியாவுக்கு பிரத்யேக வினியோகஸ்தர்கள்:

கிரன் & கோ ப்ரைவேட் லிட்.,
73-75, சிப்பி சால், ஜாவேரி பஜார் சமீபம்,
பம்பாய்-2.


கிளைகள்: கல்கத்தா, மதராஸ்

W-1-TAM.


எப்பொழுதுமே வில்ஸன் பேனாவுக்கு வில்ஸன் மசியையே உபயோகியுங்கள்

பரமேசுவர வர்மர் ஆட்சிக்கு வந்தார். அவருடைய கீர்த்தியைச் சொல்லிக் கொண்டு நிற்கிற எண்ணற்ற கோயில்களே அவருடைய பெருமைக்குச்சான்று. நண்பர்களே, அவருக்குப் பிறகு இரண்டாம் நரசிம்ம வர்மர் என்ற ராஜஸிம்மர் தோன்றினர். காஞ்சிக் கைலாசநாதர்கோவில் எழுந்தது. வடமொழியும் தென்மொழியும், வாத்திய சங்கீதமும் ஓங்கி நின்றன! பிறகு தான் இரண்டாம் பரமேசுவர வர்மர்—பட்டம் சூடுவதற்குரிய இளவரசை நிச்சயம் செய்யாத இரண்டாம் பரமேசுவர வர்மர் தோன்றினர்.

அவர் என்றைக்குத் தோன்றினரோ அன்றே இந்தச் சூழ்நிலையும் தோன்றிவிட்டது! என்ன செய்ய! அவருக்குப் பின் ராஜ்யத்தை ஆள இளவரசன் இல்லை. அவருடைய பரம்பரையிலே தாயாதியாகத் தோன்றியவர்—புகழ்பெற்ற சிம்ம விஷ்ணுவின் பரம்பரையிலே வந்தவர்—இதோ நம்மோடு இருக்கிறாரே இந்தச் சித்திர மாய இளவரசர் தான்! தகுதியும் உரிமையும் உடையவர். இவரை விட்டுவிட்டு, எங்கோ இனந் தெரியாத ஒரு கிராமத்திலிருந்து, இனந்தெரியாத சிறுவனைக் கூட்டி வந்து இந்தக் குள்ளநரி உதயசந்திரன் அவனுக்குப் பட்டம் சூட்டியிருக்



டி. ஏ. டெய்லர் அண்டு கம்பெனியின் டைரக்டர் ஸ்ரீ ஆர். நடராஜன் அவர்களின் புதல்வி சௌ சுசீலாவுக்கும், பம்பாய் டாக்டர் எஸ். எஸ். கிருஷ்ணன் அவர்களின் புதல்வன் சிரஞ்சீவி ராமமூர்த்திக்கும் ஜூன் 11-ம் தேதி சென்னை மோகன விலாஸில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கு ஏராளமான நண்பர்களும், உறவினர்களும் திரளாக விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசி கூறினர்கள். வாழ்க, மணமக்கள்!



கொச்சித் துறைமுகத்தின் நிர்வாக அதிகாரி ஸ்ரீ எம். எஸ். வேங்கடராமன் அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி வி. வேங்கடசுப்பிரமணியத்துக்கும் சென்னை வர்த்தகப் பிரமுகர் ஸ்ரீ ஆர். வி. சுப்பிரமணியம் அவர்களின் புதல்வி சௌ சரோஜாவுக்கும் மே 31-ம் தேதி சென்னை மோகன விலாஸில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.. மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துக்களும், அன்பளிப்புகளும் வந்து குவிந்தன. வாழ்க, மணமக்கள்!

கிறான். அந்தச் சிறுவனுக்கு நந்திவர்மன் என்று அபிஷேகத் திருநாமம் வேறு வழங்கி யிருக்கிறான்!

நண்பர்களே, இந்தச் சிறுவன் நந்திவர்மனுடைய வரலாறு ஒரு வேடிக்கை. அதை நினைக்க நினைக்க எனக்குச் சிரிப்பே வருகிறது. இரணியவர்மன் ஒரு கையாலாகாத மனிதன். இவனைப்போய் உதயசந்திரன் கேட்டபோது, தனக்கு அரசாட்சி வேண்டாம் என்று மறுத்து விட்டானாம் அந்த மகாப் பிரபு! அதன் பேரில் எத்தனை கேலிக் கூத்து நடந்தது என்கிறீர்கள்! இந்த இரணியவர்மனுக்கு நான்கு திருக் குமாரர்கள்! மூத்தவன் பெயர் ஸ்ரீ மல்லன். அடுத்தவன் ரணமல்லன். மூன்றாவது புத்திர பாக்கியம் சங்கராமமல்லன். அடாடா! எத்தனை அழகான திருநாமங்கள் பாருங்கள்! பெயரெல்லாம் பெரும் பெயர்தான்! இந்தப் பெயரைக் கேட்டு விட்டுக் கிறங்கிப் போய் விடாதீர்கள்! உதய சந்திரன் இந்த மூன்று புதல்வர்களையும் போய் 'ராஜா ஆகிறாயா?' என்று நாடகத்திலே கேட்பது போல் கேட்டானாம்! இந்தப் பயங்கொள்ளிப் பேதைகள் வேண்டாம் என்று சொல்லி விட்டார்களாம். அதன் பிறகுதான் மாந்தோப்புக்குப் போனாராம் மகாராஜாவைத் தேடி! மகாராஜா என்றால் அவர் மாமரத்திலே காய்த்துத் தொங்குவாரா என்று உங்களை நான் கேட்கிறேன்! நண்பர்களே! மாந்தோப்பிலே விளையாடிக் கொண்டிருந்த நான்காவது புதல்வனாகிய சிறுவனை அழைத்து வந்து, மகாராஜா என்று சிம்மாசனத்திலே வீற்றிருக்கும்படி செய்த அந்த உதய சந்திரனின் தந்திரத்தை நினைக்க நினைக்க என் நெஞ்சம் துடிக்கிறது! தானே அரச பீடத்தில் அமர்வதற்குப் பதிலாக இப்படி ஒரு பாவையை அரியணையில் அமர்த்தியிருக்கிறான் உதய சந்திரன். அதுவும் ஒரு சூழ்ச்சி. ஆனால் அந்தச் சூழ்ச்சி இனிநெடுநாள் ஓடாது! நாம் ஆறு பேரும் அறுபதினாயிரம் வீரர்களுக்குச் சமானம். இந்த விநாடி முதல், நாம் ஒவ்வொருவரும் பதினாயிரம் பேரைப் போல் வேலை செய்து படை திரட்டுவோம்! இனி நமக்கு ஓய்வு இல்லை; உறக்கம் இல்லை. இந்தச் சித்திர மாயனை என்றைக்குச் சிம்மாசனத்திலே அமர்த்துகிறோமோ அன்றுதான் நம்முடைய மன வேகமும் அமரும். என்ன சொல்கிறீர்கள்?"— இப்படிக் கேட்டான் விடுதித் தலைவன்.

"அப்படியே! அப்படியே செய்வோம்!" என்றார்கள் நான்கு மனிதர்கள். முதலிலேயே ஒரு மாதிரி வட்டம் சுற்றிய அந்த ஐந்தாவது மனிதர் மட்டும், மௌனமாக இருந்து, வார்த்தை பேசாமல் தலையை மட்டும் 'சரி' என்ற பாவனையில் ஆட்டினார். இதைத் தலைவன் கவனித்தாலும், பொருட்படுத்தாதவன் போல் சித்திர மாயனைப் பார்த்துக் கேட்டான்:—

"என்ன தம்பி! நான் சொன்னது சரிதானே?"

தம்பி என்று கூப்பிட்டதனால் சித்திரமாயன் முகத்தில் ஒரு கலவரம் உண்டாயிற்று. இதைப் பார்த்ததும் தான் தலைவனுக்கு நினைவு வந்தது.

"ஓ! மறந்தே விட்டேன்! நான் சொன்னது சரிதானே, இளவரசே!" என்று கேட்டான் தலைவன்.


"மிகவும் சரி" என்று ஆட்டுக் குட்டியைப் போலக் குரலோசையை உதட்டின் ஓரமாக ஒதுக்கி வெளியிட்டான் சித்திரமாயன். பயம் அவனுக்கு அடங்கவில்லை! உண்மையில் தலைவனுடைய பேச்சைக் கேட்டதும் அந்தப் பயம் இன்னும் அதிகமாயிற்று. — அரசன் ஆகுவது, என்றால் இத்தனை இருக்கிறதா என்று எண்ணிப் பார்ப்பது போல!

"நீங்கள் எல்லாரும் நான் சொன்ன வார்த்தைகளை ஒப்புக் கொண்டு விட்டதால், இனிமேல் இந்தச் சபை கலையலாம் என்று நினைக்கிறேன். எப்பொழுது நாம் இந்தப் பலி பீடத்திலே உறுதி யெடுத்து விட்டோமோ, அப்பொழுதே நமக்குள் அபிப்பிராய பேதம் அடிபட்டுப் போயிற்று!"

இவ்வாறு தலைவன் சொல்லி நிறுத்தியதும், இதுவரை மௌனமாக இருந்த ஐந்தாவது மனிதர் இப்பொழுது எழுந்து நின்றார். தான் பேச நினைத்த விஷயத்தை ஒரு தடவைக்கு இரண்டு தடவை மனத்துக்குள்ளேயே சொல்லிப் பார்த்துக் கொள்வது போலச் சற்று நேரம் மௌனமாக இருந்து விட்டுப் பிறகு பேச ஆரம்பித்தார்.

தலைவன் சினத்தை அடக்கிக் கொண்டு, தன்னுடைய செவிப் புலனை நன்றாகக் கூர்மைப் படுத்திக் கொண்டான்! (தொடரும்)

உங்கள் கார்களுக்கு மார்பக் லூபிரிடெக்ஷன் வழங்கினால்



உங்களுக்கு ஆகாயத்தில் மிதந்து செல்லுவது போல் தோன்றும்

மார்பக் உபயோகிக்க ஆரம்பித்தால், 1000 மைல்கள் ஓட்டத்திற்குப் பின்பும், புறப்படும் பொழுது இருந்த அதே சவாரி சுகத்தையும், ஓட்டுமின்பத்தையும் அனுபவிக்கலாம். ஆயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட மைல்கள் சுகமான ஓட்டத்தை அளிப்பதற்கென்றே பிரத்தியேகமாக மார்பக் தயாரிக்கப்பட்டுள்ளது. மார்பக் வழிந்து ஓடவோ, இறுகி வெளிவரவோ, ததும்பவோ செய்யாது; கால்டெக்ஸ் ஸர்வீஸ் ஸ்டேஷன்களில், இதன் அளவு உத்தேசமாக நிர்ணயிக்கப்படாமல், குறிப்பிட்ட அட்டவணைப்படி வழங்கப்படும். உங்கள் காருக்கு இப்பொழுதே "மார்பக் உணர்ச்சி" ஊட்டுங்கள்

MARFAK

Lubritection

கால்டெக்ஸ் பெட்ரோலியம் பிராடக்ட்ஸ்

M 54



[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

32

நம்முடைய சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் உபவாச விரதத்தைப் பல இடங்களில் காணலாம். ஹிந்து சமுதாயத்தில் இன்றுகூட சாதாரண காரணங்களுக்காகவும் ஆயிரக் கணக்கில் உபவாசமிருந்து வருகிறார்கள். பல விரதங்களுக்குள் உபவாச விரதம் மிக சாத்விகமானதென்றே சொல்லலாம்.

எதுவுமே நன்மைக்கும் தீமைக்கும் பயன்படும். உபவாசமும் அவ்வாறே. இதற்கு நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. சிலர் கெட்ட வழியில் பயன்படுத்துகிறார்கள் என்ற காரணத்தினால் ஒரு நல்ல விஷயத்தை நாம் விட்டுவிட முடியாது.

எனக்குப் பல கிறிஸ்தவ ப்ராடஸ்டண்ட் நண்பர்கள் உண்டு. அவர்களுடைய அன்பை நான் பெரிதும் பாராட்டி வருகிறேன். அவர்களிடத்தில் எனக்கு அளவற்ற மதிப்பு. உண்ணாவிரதங்கள் அவர்களுக்குப் பிடிக்காது என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் எனக்குப் புரியவில்லை.

ஊனை வருத்தும் தவ முறைகளை எந்தக் காலத்திலுமே உலகில் மக்கள் கையாண்டு வந்திருக்கிறார்கள். உபவாசமின்றி அதாவது தேகம் வேண்டுவதை ஓரளவு தள்ளி வைப்பது இன்றி எந்தப் பிரார்த்தனையும் செல்லாது. பிரார்த்தனைக்கு நோன்பு இன்றியமையாத அவயவம். உணவு ஏற்காமலிருப்பதை விட ஒருவன் வேறு என்ன செய்ய முடியும், தான் என்கிற உணர்ச்சியை நீப்பதற்கு? உபவாசமே உண்மையான ஜபமாகும்.

"என்னுடைய ஆவியும் உனதேயாகக் கடவது; அது எப்போதும் முற்றிலும் உனதே" என்று கிறிஸ்தவர்கள் சொல்வது வெறும் வாய்ப்பேச்சாக விட்டு விடலாமா? மகிழ்ச்சியுடன் கவலையும் கஷ்டமுமின்றி எடுத்துக் கொள் என்று உயிரைக் கொடுத்து விடுவது நியாயந்தானே? உண்ணாமலிருப்பதும், நீரும்கூட அருந்தாமலிருப்பதும் அந்த அர்ப்பணத்துக்கு முதல் படியே யாகுமல்லவா?

என் கருத்துக்களை இவ்வாறு நான் எழுதிக் கொண்டிருக்கும்போது ஒரு புஸ்தகம் என் கைக்கு வந்து சேர்ந்தது. ஜோனா மூன்றாவது அத்தியாயத்திலிருந்து ஒரு மேற்கோள் அந்தப் புஸ்தகத்திலிருந்து எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. அதில் ஒரு உண்ணாவிரதம் வெற்றிகரமாக நடந்ததைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. நயினீவா என்கிற பெரிய நகரம், அழிந்து போகாமலிருப்பதற்காக ஒரு பூரண உண்ணாவிரதம் மக்கள் பூண்டார்கள் என்றும் அதைக் கண்டு ஆண்டவன் நகரம் அழிந்து போகாமல் காத்தான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. உயிர் நீங்கும் வரையில் உண்ணாவிரதம் இருப்பது கிறிஸ்தவ சாஸ்திரத்திலும் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. எல்லா உண்ணாவிரதமும் தற்கொலையாகாது. நயினீவா மக்களும் அந்த நகரத்து அரசனும் இருந்த உண்ணாவிரதம் ஒரு நல்ல தவமேயாகும். என்னுடைய உண்ணாவிரதமும் ஒரு தவம் என்றே அடக்கத்துடன் சொல்வேன். ஜோனா அத்தியாயத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கும் பெரிய உண்ணாவிரதம் ராமாயணத்தில் நாம் படிக்கும் புனிதக் கதை யொன்றைப் போலவே இருக்கிறது. [ஹரிஜன் 15—4—33]



ஸாரிடான் இந்த
வலிகளை எல்லாம் போக்குகிறது
தலைவலி
"கஷ்ட நாட்கள்"
முதுகுவலி
பல்வலி
நிவாரணமளிக்கிறது:
விச்ராந்தி அளிக்கிறது:
தெம்பூட்டுகிறது:
ஸாரிடான் உபயோகித்து பலனை அனுபவத்தில் காணுங்கள்!



காஞ்சி சர்வோதய மகாநாடு

சுரேஷ்ராம்

பூதான இயக்கம் ஆரம்பமாகி ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த ஐந்தாண்டு அனுபவத்தில், சமுதாயத்தில் பெரும் புரட்சியை அஹிம்ஸா முறையில் சாதிக்கும் சக்தி இந்த இயக்கத்துக்கு இருக்கிறது என்பதைக் கண்டு கொண்டோம். இனி இந்த இயக்கத்தைத் துரிதமாக நடத்த வேண்டும். ஏனெனில் இது விஞ்ஞான யுகம். அவசர யுகம். இந்த யுகத்தில் நிதானத்துக்கே இடமில்லை. செய்யும் நல்ல காரியத்தை, பெருவாரியான மக்களுக்கு நல்ல பயன்தரக் கூடியது என்று தெரிந்து கொண்டு விட்ட பிறகு காரியத்தை உடனுக்குடனே செய்து முடித்து விடவேண்டும். சற்றுத் தாமதித்தால் தீங்குகள் விளையலாம். இதை யுணர்ந்தே பகவான் புத்தர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மிக அற்புதமாக எச்சரிக்கை செய்தார்.

"மனிதன் நல்ல காரியங்களை உடனுக்குடன் செய்ய வேண்டும். அதற்கு எப்போதுமே அவசரப்பட வேண்டும். பாவ எண்ணங்களுக்கு மனத்தில் இடம் தரக்கூடாது. நல்ல காரியம் செய்வதில் கொஞ்சம் காலதாமதமானால் அவ்வளவுதான், மனம் பாவ எண்ணங்களில் திளைக்கத் தொடங்கி விடும்."



இந்த எச்சரிக்கையை மனத்தில் கொண்டு தேசமெங்கிலுமுள்ள பூதான ஊழியர்கள் மே 27, 28, 29 தேதிகளில் காஞ்சிபுரத்தில் கூடத் திர்மானித்தார்கள். "1957 க்குள் நிலமில்லாத விவசாயி இந்தப் பாரத நாட்டில் கிடையாது" என்ற லட்சியத்தைச் சாதித்து விடப் பிரதிக்ஞை செய்துகொள்ளக் கூடினார்கள்.

பாரத தேசத்தின் ஒவ்வொரு ஜில்லாவிலுமிருந்து பிரதிநிதிகள் இம் மகாநாட்டுக்கு வந்திருந்தார்கள். சுமார் எண்ணாயிரம் பேர் வந்திருந்தார்கள். தமது வாழ்வை காந்தி மகான் வகுத்த நிர்மாண திட்டத்துக்கு அர்ப்பணித்து அரும் பணிகள் பல புரிந்துள்ள ஸ்ரீ அப்பா ஸாஹேப் பட்டவர்த்தன் இந்த மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

27-ம் தேதி பிற்பகல் அரைமணி நேர நூற்பு யக்ஞத்துடன் மகாநாடு தொடங்கியது. பிறகு கடவுள் வாழ்த்து. இம் மகாநாட்டின் வரவேற்புக் குழுவின் தலைவர் ஸ்ரீ ஜகந்நாதன், மகாநாட்டுக்கு விஜயம் செய்துள்ள தலைவர்களையும், பிரதிநிதிகளையும், சபையோர்களையும் வரவேற்றார். ராஜாஜியைச் சில வார்த்தைகள் கூறுமாறு கேட்டுக் கொண்டார்.

ராஜாஜி, "நான் கிழவர்களின் சார்பில் இம்மகாநாட்டுக்கு ஆசி கூறுகிறேன்" என்று நகைச்சுவையுடன் தமது பிரசங்கத்தை ஆரம்பித்தார். அன்றையப் பிரசங்கத்தில் மக்கள் ஆடம்பரத்துக்காக வீண் செலவு செய்யும் பழக்கத்தைக் கண்டித்தார். இந்த வீண் செலவுகளுக்காக அதிகமாகப் பணம் சம்பாதிக்க வேண்டியிருக்கிறது. இந்தப் பணத்தை எப்படிச் சம்பாதித்தாலும் பரவாயில்லை என்று தோன்றுகிறது. அதன் விளைவாகப் பொய், ஏமாற்று, சூதாட்டம் முதலிய காரியங்களில் ஈடுபட நேர்கிறது. இக்கெட்ட வழக்கங்கள் போக ஒரே ஒரு வழி தான் உண்டு. அதுதான் சிக்கனமாக வாழ்வது என்றார். மேலும், தமிழ் நாட்டில் நாஸ்திகம் பரவி வருகிறது, விநோபா அடிகளின் விஜயத்தினால் சங்கரர், ராமானுஜர் முதலிய மகான்கள் தோன்றிய இந்நாட்டில் மீண்டும் தெய்வ பக்தி பெருகும் என்று தாம் நம்புவதாகக் குறிப்பிட்டார். கடைசியாக இந்திய சர்க்கார் ராணுவச் செலவைக் குறைத்துக் கொள்ளவேண்டும். பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ராணுவ உதவி யளிப்பதைக் கண்டு பயப்படக் கூடாது. பாகிஸ்தானின் ராணுவ பலத்துக்கு ஏற்றபடி நம் ராணுவ பலத்தையும் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு, சர்வோதய சமுதாயம் ஏற்ற இடம் அல்ல என்று கூறி விட்டார்.

மறுநாள் 28ம் தேதி காலை விநோபா அடிகள் சென்ற பன்னிரண்டு மாதங்களில் இந்தப் பூதான இயக்கத்தின் லாபநஷ்டக் கணக்கை எடுத்துக் கூறினார். "நாம் எதிர்பார்த்ததை விட, நம் தகுதியை விட அதிகமாகச் சென்ற ஓர் ஆண்டில் வெற்றி கிடைத்திருக்கிறது. இதற்குக் காரணம், சமீபத்தில் 2500-வது பரி நிர்வாண தினம் கொண்டாடப்பட்ட புத்த பகவானின் அருள்தான். இப்பொழுதெல்லாம் அதிகமாகக் கிராமதானம் கிடைத்து வருகிறது. ஒரிஸ்ஸாவில் பல கிராமங்கள் கிடைத்துள்ளன. இவற்றின் பயனாக அங்கே கிராம

ராஜ்யங்கள் ஏற்படுத்துவது சாத்தியமாயிற்று. சென்ற ஆண்டில் நில விநியோகமும் உடனுக்குடன் செய்ய முடிந்தது. நல்ல சூழ்நிலை கிராமங்களில் நிலவினால் நிலம் பெற்ற அன்றே விநியோகிக்க முடியும் என்று கண்டு கொண்டோம். மத்தியப் பிரதேசத்தில் ஒரு புது அனுபவத்தைக் கண்டோம். பூதானத் தொண்டர்கள் பாத யாத்திரை மேற்கொண்டு நல்ல காரியங்கள் செய்திருக்கின்றனர். புகழ் பெற்ற தலைவர்கள், அறிமுகமான பிரமுகர்கள் யாருடைய உதவியு மில்லாமலே, சாதாரணத் தொண்டர்கள் கூட்டமாகப் பாத யாத்திரையாகச் சென்று, பூதானப் பிரசாரம் செய்து வெற்றி யடைந்திருக்கிறார்கள். இது ஒரு நல்ல அம்சம்."



வினோபா பாவே

இவ்வளவும் கூறிவிட்டுக் கடைசியாக அன்று வினோபா பின்வருமாறு சொன்னார் :

"பாரத நாட்டின் தென்கோடிக்கு வந்திருக்கிறேன். இங்கு பூதானத்தின் பூரண தேஜசைக் காண விரும்புகிறேன். இந்தப் பகுதியில் இவ்வியக்கத்துடன் காந்தி மகானின் கதர், குடிசைத் தொழில் முதலிய நிர்மாண வேலைகளையும் இணைத்து, ஒவ்வொரு கிராமத்தையும் சுயதேவை பெற்ற கிராமமாகக் காண விரும்புகிறேன். இக் காரியங்கள் எல்லாம் சாதிக்க என் உள்ளம் இன்னும் தூய்மை பெற வேண்டும். இதற்கு அதிக தவம் செய்ய வேண்டும். இறைவனை இறைஞ்சிப் பிரார்த்திக்க வேண்டும். இதற்காக ஜூன் முதல் தேதி காலை எட்டு மணிக்கு உண்ணாவிரதம் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளேன். மூன்று நாள் உண்ணாவிரத மிருந்து, ஜூன் நான்காம் தேதி காலை எட்டு மணிக்கு முடிக்க விரும்புகிறேன்" என்றார்.

அவ்வளவுதான் ; சபையோர்கள் அப்படியே பிரமைபிடித்தாற்போலாகி விட்டார்கள். அடிகளின் இம்மொழிகள் கேட்டவர்களின் உள்ளத்தைத் தொட்டுவிட்டன. சம்மேளனத்தின் சூழ்நிலை புனிதமடைந்துவிட்டது. தொண்டர்கள் அனைவரும் இவ்வியக்கத்தில் இன்னும் தீவிரமாக ஈடுபட்டு வேலை செய்ய வேண்டுமென்று மனத்தில் உறுதி செய்து கொண்டனர்.

* * *

அன்று பிற்பகல் பூதான இயக்கத்தில் ஈடுபாடுடன் நல்ல வேலை செய்து வரும் பல பெரியோர்கள் பேசினார்கள். அவர்களுள் ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயணர் பேச்சைக் குறிப்பிட வேண்டும். வினோபா அடிகள் உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்து விட்டதைக் குறிப்பிட்டபோது அவர் கண்களில் தாரை தாரையாக நீர் சொரியத் தொடங்கி விட்டது. அந்தக் கண்ணீரிடையே நாத் தழுதழுக்க "நாம் இந்த பூதான இயக்கத்தில் பூரண நம்பிக்கை கொண்டு வேலை செய்வோம். அப்பழுக்கில்லாத குணம் படைத்தவர்களாவோம். நாம் எல்லோருடனும் இனிமையாகப் பேசிப் பழகக் கற்றுக் கொள்வோம். நமக்கு எவனும் பகைவன் அல்ல. அநியாயம், சுரண்டல், அக்கிரமம், அட்டூழியம் ஆகியவைகள்தாம் நமக்குப் பகை" என்றார்.


பிறகு வாழ்க்கையை பூதான வேலைக்கென்றே அர்ப்பணித்த ஜீவன் தானிகள் கடைப்பிடிக்க வேண்டிய பதினான்கு அம்சங்கள் கொண்ட ஒரு திட்டத்தை வெளியிட்டார்.

மே 27-ம் தேதி நிகழ்ச்சிகளில் நிர்மாண வேலைகளே சிறப்புப் பெற்று விளங்கின. மே 25-ம் தேதி முதலே நிர்மாண வேலைத் தொண்டர்கள் தனித் தனிக் குழுக்களாக அமர்ந்து, கிராம தானம், சம்பத்தி தானம், கிராமக் கைத்தொழில்வளர்ச்சி, தொழிலாளர், நகரவாசிகள், மாணவர்கள் ஆகியவர்களிடையே வேலை செய்வது ஆகியவை பற்றிச் சர்ச்சை செய்து வந்தார்கள். அந்தச் சர்ச்சைகளில் கண்ட முடிவுகளைப் பற்றி 27-ம் தேதி காலை விரிவாக விவாதித்தார்கள்.

ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் 763 கிராமங்கள் கிராமதானமாகக் கிடைத்துள்ளன. இவைகளில் 400 கிராமங்களில் நில விநியோகம் ஆகியிருக்கிறது. இந்தக் கிராமங்களில் எப்படி பூதானத் தொண்டர்கள் வேலை செய்கிறார்கள் என்பதை சர்வ சேவா சங்கத்தின் பொதுக் காரியதரிசி ஸ்ரீ அண்ணாஸாஹேப் ஸஹஸ்ரபுத்தே அன்று பிற்பகல் விளக்கினார். ஒரிஸ்ஸாவில் இப்பொழுது 27 முகாம்களாக சர்வ சேவா சங்க ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். நூற்று எண்பது பேர் ஆண்களும் பெண்களுமாக வேலை செய்கிறார்கள். புதிதாக நிலம் பெற்றவர்களுக்கு நிலத்தில் வேலை செய்ய 600 ஜோடி எருதுகள் வழங்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசனம் முதலிய வசதிகளைக் கிராம ஜனங்



அப்பா ஸாஹேப் பட்டவர்த்தன்



உங்களுக்கு
ரூ. 88/-லேயே
விலை மலிவான கடிகாரங்களை விரும்புவோர் இங்குள்ள இரண்டு சிறந்த மாடல் கடிகாரங்களிலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இரண்டும் நேர்த்தியும் நம்பகமுமானவை. முழுவதும் ஜுவல்கள் பதித்த லிவர் இயக்கம் கொண்டவை.
ஜெண்ட்ஸ் வாட்ச்
6024
லேடிஸ் வாட்ச்
6224
முகப்பு குரோமியமும் பின்புறம் ஸ்டீலுடனும் ஒவ்வொன்று ரூ. 88/-
JOHN BARREL
ஜான் பாரல்
FAVRE-LEUBA
FAVRE-LEUBA
AND COMPANY PRIVATE LIMITED
பேவர்லூபா & கோ., பிரைவேட் லிட்.
த. பெ. 845, பம்பாய் - த. பெ. 474, கல்கத்தா

களை ஒன்றுபட்டுக் கூட்டு முயற்சியில் செய்து கொள்கிறார்கள். இதற்கு சர்வ சங்கத்தினர் பெருதவியாக இருக்கிறார்கள். விவசாயிகளில் பெரும்பாலோர், கடன் தொல்லைகளில் அவதிப்படுபவர்கள். அவர்கள் வாங்கிய கடனுக்கு மேலேயே வட்டி செலுத்தியும் கடன் பளு நீங்காமல் தொல்லையுற்று வருகிறார்கள். அதனால் சர்வ சேவா சங்கத்தினர் கடன் கொடுத்தவர்களிடம் போய் விவசாயிகளைக் கடன் தொல்லைகளிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றனர். இல்லையேல் கடன் பட்டவர்களை, சிறுகச் சிறுகப் பணம் கொடுத்துக் கடனை அடைக்க வழி செய்கின்றனர். கிராமக் கைத்தொழில்களுக்குப் புது ஊக்கம் அளிக்கப்படுகிறது. இக்காரியங்கள் எல்லாம் கிராம மக்கள் தாங்களே செய்து கொள்ளவும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் படுகிறது என்று கூறினார்.



ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்

காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ யு. என். தேபர், "பூதான இயக்கம் மக்களின் மனத்தை மாற்றும் இயக்கம். ஆயினும் இன்றையச் சமுதாயம் ஓரளவுக்குத்தான் மாறும். இந்த நிலையை மறந்து விடக் கூடாது. தேச மக்களைக் கொள்ளை, கொலை முதலிய கொடுமைகளிலிருந்து பாதுகாக்கவும் தேசத்தின் ஐக்கியத்தை நிலை நாட்டவும் ராணுவம் தேவைப் படுகிறது. பூதான இயக்கத்துக்குக் காங்கிரஸின் பூரண ஆதரவு என்றும் உண்டு" என்று கூறினார்.

சர்வ சேவாசங்கத்தின் தலைவர் ஸ்ரீ திரேந்திர மஜும்தார் உலக அமைதியை வற்புறுத்தும் ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்தார். இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் அற்ப காரணங்களுக்காக மக்கள் அராஜக முறையில் இறங்குவதைக் கண்டித்தார்.

நமது ஜனாதிபதி ராஜன் பாபு பேசினார்: "பூதான இயக்கம் ஒரு புரட்சிகரமான இயக்கம். அதன் லட்சியம் மட்டும் புரட்சிகரமானதல்ல; அந்த லட்சியத்தை அடைய மேற்கொண்டிருக்கும் முறையும் புரட்சிகரமானது. இன்று உலக மக்களின் உள்ளத்தில் நிரம்பிக் கிடக்கும் துவேஷம், பகை முதலிய அக்னி ஜுவாலையை அணைக்கக் கூடியது பூதான இயக்கம் தான். அதனால் பூதானத் தொண்டர்கள் இப் பணியில் அதிக உற்சாகத்தோடும் ஆர்வத்தோடும் வேலை செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

பிறகு திரு அப்பா ஸாஹேப் பட்டவர்த்தன் முடிவுரை வழங்கினார். மக்கள் தேக உழைப்பை மேற்கொள்ள வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தினார்.

இப்பொழுது மணி ஐந்தரையாகிக் கொண்டிருந்தது. அதாவது பிரார்த்தனை சமயம். பிரார்த்தனைக்குப் பிறகு விநோபா அடிகள் காஞ்சி சர்வோதய மகாநாட்டுக்கு ஓர் அரிய மங்கள உரை வழங்கினார்.

"மக்கள் உலகில் சாந்தியும் சமாதானமும் நிலவ வேண்டுமென விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் சாந்தியிலும் சமாதானத்திலும் நம்பிக்கை கொள்ள மறுக்கிறார்கள். இது எனக்கு விந்தையாக இருக்கிறது. தங்களைத் தாங்கள் பாதுகாத்துக் கொள்ள ஆயுதங்கள் வேண்டும் என்று நினைக்கிறார்கள். என்னை நான் பாதுகாத்துக் கொள்வதற்காகவே ஆயுதங்கள் வேண்டாம் என்று சொல்லுகிறேன். ஆயுதங்களைப் பகிஷ்கரிக்கிறேன். இது என் துணிச்சலைத்தான் காட்டுகிறது. தைரியத்தைத் தான் குறிக்கிறது என்று நீங்கள் நினைக்கலாம். அப்படியல்ல, இதுதான் புத்திசாலித்தனமான காரியம்; தீர்க்க தரிசனம் வாய்ந்த காரியம்.



யு. என். தேபர்

"இப்பொழுது எதற்கெடுத்தாலும் காந்தி மகானை மேற்கோள் காட்டுகிறார்கள். இந்தியப் படையைக் காஷ்மீருக்கு காந்தி மகானின் ஆசி பெற்றே அனுப்பப்பட்டது என்று கூறுகிறார்கள். இதற்கு காந்தி மகானைச் சொல்வானேன்! காந்தி மகான் ஓயாமல் ஆதாரம்காட்டிச் சொல்லி வந்த கீதையைச் சொல்வதுதானே. கீதை கூடத்தான் போர் தொடுக்கலாம் என்று கூறுகிறது. ஆனால், அவர்கள் கீதையைச் சொல்ல மாட்டார்கள். ஏனெனில்கீதையைச் சொன்னால் 'இந்தக்காலத்துக்கு ஏற்காது' என்பது அவர்கள் நினைப்பு. இந்தக்

காலத்துக்கு ஏற்பது 'காந்தி சொன்னார்' என்பது. ஆனால் காந்தி மகானின் வார்த்தைகளும், இக் காலத்துக்கு ஏற்க முடியாமல் பழையனவாகி விட்டன என்று பணிவுடன் சொல்லிக் கொள்கிறேன். காந்திஜி புதுப் புது சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது அதற்கேற்ப, புதுப்புது உண்மைகள் காண்பார்; அதற்கேற்பத் தமது நிலையை மாற்றிக் கொள்வார். அதனால் அன்று காந்தி மகான் கூறிய வார்த்தைகளை இன்று மேற்கோளாகச் சொல்வதற்குப் பொருளே இல்லை. இன்றையப் பல தரப்பட்ட பிரச்னைகளைத் தீர்க்க, காந்தி மகான் பெற்றிருந்த சக்தியைப் போன்றதோர் சக்தியை நம்முள் உண்டாக்கிக் கொள்ள வேண்டும். பூதான வேள்வி இதற்கு ஒரு சிறு சாதனம் என்று எனக்குப் படுகிறது. இதில் எல்லோரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று கூறினார்.



ஜெயப்பிரகாச் நாராயண்

கடைசியாக எல்லோரும் நூல் நூற்று காந்தி மகானுக்கு அஞ்சலி செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு சர்வோதய மகாநாடு முடிவுற்றது. பூதான இயக்கம் வெற்றிப் பாதையில் முக்கியமான கட்டத்தை அடைந்து விட்டது என்பதையே இது குறிக்கிறது. சோர்ந்து கிடந்த பாரத மக்கள், தன்னம்பிக்கை பெற்று தார்மீக முறையில் தங்களைத் தாங்களே ஆண்டவன் பெயரால் ஆண்டு கொள்ளும் அபாரமான சக்தியைப் பெற்று வருகிறார்கள் என்பதையே தான் குறிக்கிறது.


இந்தச் சக்திக்கு, ஒரு தீவிர முனைப்பு உண்டாக்கி விட்டது விநோபா அடிகளின் உண்ணாவிரதம். அத்துடன் தமிழகத்தில் பூதானத் தொண்டர்களுக்கு, சகோதரர்களுக்கு அதிகப்படியான பொறுப்பும் உண்டாக்கி விட்டது. விநோபாஜியின் கனவை நனவாக்கத் தமிழக மக்கள் முனைந்து எழுவார்களாக!

கனவு பலித்தது! கட்டடம் எழுந்தது!

பம்பாய் நகர நிர்வாகத்தை யாரிடம் ஒப்படைப்பது என்ற கேள்வி ஒரு பக்கம் இருந்து கொண்டே இருக்கும்போது மறு பக்கம் பம்பாயில் உள்ள தமிழ் மக்கள் இந்தக் கேள்விக்கு இடமில்லாமல் ஒரு காரியத்தைச் சாதித்து விட்டார்கள். சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் தமிழுக்கு ஒரு மணி மண்டபம் கட்டி ஜூன் மாதம் இரண்டாம் தேதி கோலாகலமாகத் திறப்பு விழா நடத்தி பம்பாய் நகரைத் திணற அடித்து விட்டார்கள்.

பம்பாய் கவர்னர் கனம் ஹரிகிருஷ்ண மேதாப் தலைமை தாங்க, சென்னை முதன் மந்திரி தமிழ்ச் சங்க மணி மண்டபத்தைத் திறந்து வைத்தார். சென்னை ராஜ்ய மந்திரிகள் ஸ்ரீ சி. சுப்பிரமணியமும், ஸ்ரீ எம். பக்தவத்ஸலமும் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் நல்ல பணியை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டி ஆசி கூறினார்கள்.

இந்தப் பெரு விழாவில், ஸ்ரீ பி. ஜி. கேர், டாக்டர் பி. சுப்பராயன், சென்னை மந்திரிகள் ஸ்ரீ பரமேசுவரன், ஸ்ரீ ஷண்முக ராஜேசுவர சேதுபதி ஆகியவர்களும், பன்மொழிப் புலவர் திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ கக்கன் முதலியவர்களும் கலந்து கொண்டு சிறப்பளித்தார்கள்.




திரு அனந்தராமகிருஷ்ணன்

தமிழ்ச் சங்கத் தலைவர் ஸ்ரீ வி. ஆர். சுப்பிரமணியம், கட்டடக் கமிட்டித் தலைவர் எஸ். எஸ். கிருஷ்ணன், உபதலைவர் ஸ்ரீ சி. வி. சுப்பிரமணியம் ஆகியவர்களும், தமிழ்ச் சங்கத்தின் மணி மண்டபத் தோற்றத்துக்குக் காரணமாயிருந்த தமிழ்ச் சங்க அங்கத்தினர்கள் அனைவரும் அகமும் முகமும் மலர மணி மண்டபம் எழும்புவதற்குத் துணைபுரிந்த அத்தனை பேரையும் பாராட்டிக்கொண்டிருந்தனர்.

மணிமண்டபத்துக்குப் பலர் பலவிதங்களில் உதவி புரிந்திருக்கின்றனர். ஆனாலும் ஸிம்சன் கம்பெனி போன்ற பல தொழில் ஸ்தாபனங்களின் அதிபர் ஸ்ரீ அனந்த ராமகிருஷ்ணன் அளித்த பத்தாயிரம் ரூபாய் தான் தமிழ்ச் சங்க அங்கத்தினர்கள் நீண்ட நாட்களாகக் கண்டு வந்த கனவு பலிக்க உதவியது. சங்கக் கட்டடம் எழுவதற்கு முடிந்தது!

எட்டே மாதங்களில் பூர்த்தியடைந்துவிட்ட தமிழ்ச் சங்க மணி மண்டபம், அகத்தே கனன்று ஒளி வீசும் மொழி அபிமானத்தின் புறச்சின்னமாய், தமிழர்களுக்குப் பெருமை தேடித் தரும் வகையிலே காட்சி அளிக்கிறது. கலை துலங்கும் அம் மண்டபத்தின் கம்பீரமான காட்சியையும், அதன் திறப்பு விழா நிகழ்ச்சிகள் சிலவற்றையும் எதிர்ப் பக்கத்தில் உள்ள படங்களில் காணலாம்.

மணி மண்டபத் திறப்புவிழா



● 1. தமிழ்ச் சங்க மணி மண்டபம். 2. மண்டபத் திறப்பு விழாவில் பரத நாட்டியம் நடைபெறுகிறது. 3. விழாவில் கலந்து கொண்ட ஸ்ரீ காமராஜ், ஸ்ரீ ஹரிகிருஷ்ண மேதாப், சங்கத் தலைவர் ஸ்ரீ வி. ஆர். சுப்பிரமணியம், ஸ்ரீ பி. ஜி. கேர், ஆகிய தலைவர்கள் கடவுள் வணக்கத்தின்போது எழுந்து நின்று அஞ்சலி செய்கின்றனர். 4. ஸ்ரீ சுப்பிரமணியம் ஆசி கூறுகிறார். 5—6. விழாவின்போது சபையில் ஒரு தோற்றம். 7. ஸ்ரீ பக்தவத்ஸலம் சங்கத்துக்கு வாழ்த்துக் கூறுகிறார்.

தந்தையின் பெருமை

— சரஸன் —

"வக்கீல் ஐயா! நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். நான் பரம ஏழை. என் திக்கற்ற நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கிறார் ஒருவர். விஷயம் இதுதான். நான் அந்த நபரிடம் ஆயிரம் ரூபாய் சொத்தின் பேரில் கடன் வாங்கியதுண்டு. அதில் ஐந்நூறு ரூபாய் அசலுக்காகக் கொடுத்து விட்டேன். தவிர வட்டியும் அவ்வப்போது கொடுத்து வந்திருக்கிறேன். மனிதர் இப்போது என்ன சொல்கிறார் தெரியுமா! 'நீ வட்டி மட்டும் தான் கொடுத்திருக்கிறாய். அசலுக்காகக் காலணாக்கூடத் தரவில்லை' என்று சாதிக்கிறார். பெரிய மனிதர் ஆயிற்றே என்று நம்பி, நான் பத்திரத்தில் செல் வைக்கும்படி உடன் இருந்து வற்புறுத்தவில்லை. நான் மீண்டும் பணத்துக்கு எங்கு போவேன்! மனிதர் என் சொத்தை ஏலத்துக்குக் கொண்டு வருவேன் என்று கண்டிப்புடன் கூறுகிறார். நான் அவருக்குச் செலுத்திய ஐந்நூறு ரூபாய்க்குக் கடவுளைத் தவிர வேறு யாரைச் சாட்சியாய்க் குறிப்பிட முடியும்! நீங்கள்தான் பெரிய மனசு செய்து இந்த ஏழையைக் காப்பாற்ற வேண்டும்" என்றார் அந்தப் பெரியவர்.

வக்கீல் வரதராஜன் கருணை ததும்பும் முகத்துடன் அவரை நோக்கினான்.

"சரி, நீங்கள் போய் வாருங்கள். நான் கவனிக்கிறேன்" என்று கூறி அந்தப் பெரியவரை அனுப்பி விட்டுத் தன் அலுவலைக் கவனிக்கலானான் வரதராஜன்.

அப்போது உள்ளே வந்தாள் அவனுடைய மனைவி மங்களம். "ஆமாம். இப்போது வந்து விட்டுப் போனாரே, அவரை மோசம் செய்த அந்த நபர் யார் என்று உங்களுக்குத் தெரியுமா!" என்று கேட்டாள்.

"யாராயிருந்தால் நமக்கென்ன, மங்களம்! என் தொழிலுக்கு ஆள் முக்கியமல்ல; விஷயம் தான் முக்கியம்! பரவாயில்லை. யார் என்று உனக்குத் தெரியும் போலிருக்கிறது. சொல்."

"உங்கள் தந்தைதான்!"



வரதராஜன் ஒரு கணம் அயர்ந்து போனான்.

"மங்களம், இதை நான் எதிர்பார்க்கவில்லை. ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நான் அந்தப் பெரியவருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றத் தவறிவிட மாட்டேன். மோசம் செய்பவர் யாராயினும் தாட்சண்யத்துக்கு இடமின்றி என் கடமையைச் செய்வேன். அது போகட்டும். எனக்குக்கூடத் தெரியாத இந்த விஷயம் உனக்கு எப்படித் தெரிந்தது!" என்று மங்களத்தை வியப்புடன் பார்த்தான் வரதராஜன்.

"அந்தப் பெரியவர் என் ஊர்க்காரர். நான் தான் அவரை உங்களை அணுகுமாறு தூண்டினேன்!" என்றாள் மங்களம்.

சில தினங்களுக்கு முன்பு மங்களம் தன் பிறந்தகத்துக்குச் சென்றிருந்தபோது, அந்தப் பெரியவர் அவளுடைய தந்தையிடம் இந்த விஷயமாய்ப் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்தாள். இந்த விவகாரத்தில் மங்களத்தின் தந்தை சம்பந்தப்பட விரும்பவில்லை. ஏனெனில், 'சம்பந்தம் செய்துகொண்ட இடத்திலே நமக்கு ஏன் பொல்லாப்பு!' என்று இருந்து விட்டார்.

ஆனால், மங்களம் தன் தந்தைக்குத் தெரியா வண்ணம், வேணுகோபாலனிடம் (அந்தப் பெரியவரின் பெயர் இதுதான்!) "ஐயா! நீங்கள் கவலைப்படவேண்டாம். எங்கள் ஊரில் ஒரு உத்தமமான வக்கீல் இருக்கிறார். அவரிடம் வந்து விவரத்தைச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு உதவுவார்" என்றாள்.

மங்களம் கூறிய யோசனையின்படி, வேணுகோபாலன் வரதராஜனைக் காண வந்தார். அவன் உதவி செய்கிறேன் என்று கொடுத்த வாக்கு வேணுகோபாலனுக்குச் சற்றுத் தைரியமளித்தது.

இரண்டு தினங்களுக்குப் பின்பு, வரதராஜனுடைய தந்தை ராமச்சந்திரன் ஊரிலிருந்து வந்தார். அவரைக் காணவே மங்களத்துக்கு வேம்பாயிருந்தது. ஓர் ஏழையை மோசம் செய்யும் மனிதர் தன் மாமனார் ஸ்தானத்தில் இருக்கிறாரே! அதுவே தன் தந்தையாக இருந்தால், தன் ஆத்திரம் தீரக் கேட்டிருப்பாள்.

வேணுகோபாலன் விஷயமாய்த் தன் தந்தை ஏதாவது தன்னைக் கேட்பார் என்று வரதராஜன், எதிர்பார்த்தான். ஆனால் அவர் ஒன்றும் அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவில்லை. "தன் சுபாவத்தை அறிந்துதான் தன்னிடம் இந்த அநியாய வழக்கைப் பற்றிக் கூறவில்லை" என்ற முடிவுக்கு வந்தான் அவன்.

"வரதா! நான் கொஞ்சம் வெளியே போய் விட்டு வருகிறேன்!" என்று கூறி விட்டுப் போய் விட்டார் ராமச்சந்திரன்.

அவர் வெளியேறிய சிறிது நேரத்துக்கெல்லாம் வேணுகோபாலன் வந்து சேர்ந்தார்.

"வக்கீல் ஐயா! ஒரு விஷயம் இப்போது தான் கேள்விப்பட்டேன். நீங்கள் யார் என்பது இத்தனை நாள் தெரியாமற் போய்விட்டது. என்னிடம் வழக்காடப்போகும் ராமச்சந்திரனின் மகனும் நீங்கள். உங்களை நான் பார்த்

ததே இல்லை. நீங்கள் ஊருக்கு வந்த சமயங்களில் நான் ஊரில் இருந்ததே இல்லை, என் நண்பரின் குழந்தை மங்களமும் இதைப் பற்றிச் சொன்னதில்லை. உங்கள் தந்தைக்கு எதிராக எனக்கு நீங்கள் வக்காலத்து வாங்கச் சம்மதந்தானா !'' என்றார் வேணு.

"உமக்கு ஏன் ஐயா, வீண் சந்தேகம்! நான் சொன்ன சொல் மாறுவதில்லை. நீங்கள் சிறிதும் கவலைப் படவேண்டாம்'' என்று கூறி அனுப்பினான் வரதராஜன்.

மங்களத்துக்குக் கவலை அதிகமாயிற்று. காரணம் என்ன வென்றால், ராமச்சந்திரன் எப்போதும் போலில்லாமல், முகத்தை ஒரு மாதிரியாய் வைத்துக் கொண்டு, யாருடனும் கலகலப்புடன் பேசாமல் உட்கார்ந்திருந்தார். அவர் போக்கு அவளுக்கு வியப்பை அளித்தது. அவர் எப்போது சென்னைக்கு வந்தாலும், உற்சாகத்துடன் பேசிப் பழகுவது வழக்கம். வழக்கத்துக்கு மாறாக அவர் 'உம்மணா மூஞ்சி'யுடன் காணப்பட்டது, அவளுக்கு வேதனையைத் தந்தது. ஒரு வேளை தம் பிள்ளை தமக்கெதிராய் வழக்காடத் தீர்மானித்துவிட்டதால், இம்மாதிரி அவர் காணப்படுகிறாரோ என்று எண்ணினாள்.

அவர் ஊருக்குத் திரும்பியதும், மங்களம் தன் கணவனைப் பார்த்து, "இந்த வழக்கை நடத்த வேண்டாம். தந்தையை விரோதித்துக் கொண்டு எதற்காக இந்த வழக்கு! அந்தப் பெரியவரிடம் முடியாது என்று கூறிவிடுங்கள்'' என்று மிகுந்த கவலையுடன் கெஞ்சினாள்.

வரதராஜனுக்குக் கோபம் வந்து விட்டது.

"மங்களம்! உன் யோசனையை நான் இங்கு கேட்கவில்லை. உன் வேலையைப் பார்!'' என்று கடிந்து கொண்டான்.

வரதராஜன் தந்தைக்கு எதிராக வழக்காடப் போகிறான் என்னும் விவரம் அவனுடைய நண்பர்களிடையேயும், தந்தையின் ஊரிலும் பரவி, எல்லாரும் வியப்படைந்தார்கள். எந்த விஷயத்திலேயும் இரண்டு அபிப்பிராயங்கள் வெளியாவதுண்டல்லவா! வரதராஜனைப் பற்றியும் அத்தகைய இருவித அபிப்பிராயங்கள் உலாவின.

வேணுகோபாலன் மீது ராமச்சந்திரன் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு வரும் தினத்துக்கு முன்தினம், ராமச்சந்திரன் மீண்டும் சென்னைக்கு வந்தார்.

வரதராஜன் விஷயம் ஒன்றுமறியாதவன் போல, "அப்பா, தாங்கள் ஏதோ வழக்கு விஷயமாய் வந்திருப்பதாகத் தெரிகிறது. என்ன விஷயம்! என்னிடம் ஏன் அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவில்லை !'' என்று கேட்டான்.

ராமச்சந்திரன் கூறினார்: "வரதா! அதற்கும் உனக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. அதனால் தான் சொல்லவில்லை.''

"ஏன் சம்பந்தமில்லை! உங்களுக் கெதிராய் நானல்லவா வழக்காடப் போகிறேன், தங்கள் பிரதிவாதியின் கட்சியில் !''

"அந்த வழக்கு சம்பந்தமாய் நீ வேணுகோபாலனுக்காக வக்காலத்து வாங்க வேண்டிய அவசியமே இல்லையடா !''

"ஏன் அப்பா !''

"நான் அந்த வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டேன்.''

வரதராஜனுக்கு ஆச்சரியமாயிருந்தது. "ஏன் வாபஸ் பெற்றீர்கள்! அப்போது வேணுகோபாலன் விஷயத்தில் நீங்கள் நடந்து கொண்டது முறையல்ல என்று ஒப்புக் கொண்டு விட்டீர்கள். அப்படித்தானே !''

"அப்படிப் பகிரங்கமாகக் கோர்ட்டில் ஒப்புக் கொள்ள முடியுமா! 'என் பணம் பூராவும் கட்டிவிட்டார் பிரதிவாதி. எனவே, வழக்கை வாபஸ் பெறுகிறேன்' என்று கூறி விட்டேன். ஆனால் சம்பந்தப்பட்ட வேணுகோபாலனிடம் மட்டும் உண்மையை ஒப்புக் கொண்டேன்'' என்றார் ராமச்சந்திரன்.

தன் தந்தையின் கூற்று வரதராஜனுக்கு விந்தையாய்த் தானிருந்தது. தனக்குப் பயந்து தான் தன் தந்தை கடைசி நேரத்திலே வழக்கை வாபஸ் பெற்று விட்டார் என்று எண்ணிப் பெருமையுடன் அவரை நோக்கினான்.


ராமச்சந்திரன் மீண்டும் தொடர்ந்தார். "வரதா! நான் இந்த வழக்கைத் தொடர்ந்ததும், அதை மீண்டும் வாபஸ் பெற்றதும் உனக்கு வேடிக்கையாயிருக்கிறதல்லவா! கேவலம் ஒரு நூற்றுக்கு ரூபாய் பணத்தை நான் மோசம் செய்து விட்டேன் என்று வேணு எண்ணி விட்டார். நீயும் எண்ணினாய். ஏன், மங்களமும் அப்படித்தான் நினைத்திருப்பாள். ஆனால் என் கருத்து நான் சொன்னாலொழிய உங்களில் யாருக்கும் புரியாது. சொல்லுகிறேன் கேள். உன் மாமனார் தம் பெண்ணை உனக்குத் தரப் பேச்சு வார்த்தை நடத்தியபோது, உன்னுடைய தொழிலைப் பற்றி என்னிடம் சிறிது கேவலமாய்ப் பேசி விட்டார்.

'என்ன வக்கீல் தொழில், ஸ்வாமி! மெய்யைப் பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும் திரிக்கும் தொழில்தானே! தாட்சண்யமற்ற முறையில் அவன் தொழில் நடத்தினால் சரி' என்றார். அப்போது திட்டம் போட்டேன். அதற்காகத்தான் இப்படி ஒரு நாடகம் நடத்தினேன். நீயே எனக்கு எதிராய் நியாயமாடப் போகிறாய் என்று இப்போது பகிரங்கமாகிவிட்டதல்லவா! உன் மாமனாரின் காதில் இவ்விஷயம் விழுந்து விட்டது. என்னிடம் ஓடி வந்து, தம் கூற்றை நான் பொய்ப்பித்து விட்டேன் என்பதை ஒப்புக் கொண்டு விட்டார். எனக்கு வேண்டியது அதுதானே! என் மைந்தன் உற்றார் உறவினர் என்று பாராமல், தன் கடமையை நிறைவேற்றத் தயங்க மாட்டான் என்று உன் மாமனாரும், ஊராரும் அறிந்து கொண்டார்கள் அல்லவா! அதைவிடப் பெருமைப்பட ஒரு தந்தைக்கு வேறென்ன வேண்டும், சொல்!'' என்று முகத்திலே மகிழ்ச்சி பொங்கக் கூறினார்.

தன் தந்தையின் திட்டத்தைக் கேட்டு மைந்தன் அடைந்த வியப்பு விவரிக்க இயலாது. "அப்பா! நீங்கள் அடையக் கூடிய பெருமை நீடித்திருக்க ஆண்டவன் எனக்கு வழி காட்ட வேண்டும், இன்னொன்று கேட்கட்டுமா?" என்றான் வரதராஜன்.

"நீ எதைக் கேட்கப் போகிறாய் என்பதை நான் அறிவேன். வேணுகோபாலன் எனக்குத் தரவேண்டிய பாக்கி ஐந்நூறையும் நான் வஜா செய்து விட்டேன்" என்றார்.





தமிழ்ப் படங்களில் பல ரகம். சில படங்கள் அடுக்கடுக்கான நிகழ்ச்சிகளை விசேஷமாகக் கொண்டிருக்கும்; சில படங்கள் பல ஊர்க் காட்சிகளையும் கோவில்களையும் விசேஷமாகக் கொண்டிருக்கும்; சில படங்களில் உணர்ச்சி மட்டும் உரை நடை வேகமாக ஓடும்; சில படங்களில் கதைக்குச் சம்பந்தமில்லாமல் அங்கங்கே நடனங்கள் புகுத்தப் பட்டிருக்கும்; இன்னும் சில படங்களில் ஹாஸ்யம் என்ற பெயரில் சில வேண்டாத சம்பவங்கள் வந்து நம்மை வேதனைப் படுத்தும்; சில படங்களில் ஆரம்பத்திலிருந்து முடிவு வரையில் ஒரே சோகம் என்று யாராவது கண்ணீர் விட்டுக் கொண்டே படம் பார்ப்பவர்களைக் கதற அடித்துக் கொண்டிருப்பார்கள்; சில படங்களில் வீரம் ததும்புவதற்காக வாள்கள் 'டணார்', டணார்' என்று மோதும் ஒலிதான் விசேஷமா யிருக்கும்; பல படங்களில் காதல் என்ற பெயரில் எத்தனையோ காட்சிகள் வந்து வந்து போகும்; ஆனால் உருக்கமான கதையை அடிப்படையாகக் கொண்ட உருப்படியான படங்கள் மிகவும் அருமை. "டாக்டர் கோட்னிஸ்", "தஹேஜ்", "பங்காரு பாப்பா" போன்ற அழுத்தமான

இதை விளக்குவதற்காகத்தானே என்னவோ கஷ்டப் பிரசவத்தில் ஆரம்பமாகிறது கதை. பிரசவித்ததும் தாய் இறந்து விடுகிறாள்; தாயை அறியாத சேய் கதறுகிறது; தாயை அறிந்த சிறுமி லக்ஷ்மியும், சிறுவன் ராமுவும் விம்முகின்றனர்; மனைவியை இழந்த துக்கத்தோடு, தாயைப் பிரிந்த குழந்தைகளின் தீனக் கதறலையும் கேட்டுக் கணவன் ரங்கண்ணா (ஏழைத் தொழிலாளி) அயர்ந்து விடுகிறான். துன்பம் இத்துடன் முடியவில்லை. இப்பொழுது தானே ஆரம்பமாகிறது! ரங்கண்ணா தொழிற்சாலையில் வேலை செய்யும்போது தீப்பொறி தெறித்துக் கண்ணை இழந்து, அவதிப்பட்டு ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வர மனம் இல்லாமல் கால் போன போக்கில் சென்று விடுகிறான். தாயை இழந்து, தந்தையையும் பிரிந்த குழந்தைகள் வீட்டை விட்டு வெளியேற்றப் படுகின்றனர். சிறுமி லக்ஷ்மி, தம்பி ராமுவையும், குழந்தை பாபுவையும் எடுத்துக் கொண்டு ரயிலேறி விடுகிறாள். ரயிலிலும் கஷ்டம் தொடருகிறது. டிக்கெட் பரிசோதகர் வந்து லக்ஷ்மியையும் குழந்தையையும் கீழே இறக்கி விடுகிறார். சிறுவன் ராமு, ரயிலில் தூங்கிக் கொண்டிருந்தவன் ரயிலோடு போய்விடுகிறான்.

பாகத்தை ஏற்றுக் கஷ்டப்பட்டு நடித்திருப்பவர் எஸ். வி. ரங்காராவ்தான். ஏழைத் தொழிலாளி ரங்கண்ணாவாக நடிக்கும் அவர் படத்தின் ஆரம்பத்தில் சில சீன்களில் மனைவி மக்களோடு மகிழ்ச்சியுடன் அளவளாவுகிறார். அவ்வளவுதான். அப்புறம் விம்மலும், வேதனையும், கண்ணீரும், தடியடியும், பிரிவும் தான் அவருக்குக் கிடைத்த வெகுமதிகள். ஆனால் அவர் பிரமாதமாக நடித்து எல்லோரையும் உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தி விடுகிறார்.

ரயிலில் பிரிந்த ராமு, பெரிய நடிகனாகி விடுகிறான். அந்தப் பாத்திரத்தை நாகேசுவரராவ் ஏற்று நன்றாய் நடித்திருக்கிறார். இந்தப் படத்தில் இன்னொரு முக்கிய பாத்திரத்தை ரேலங்கி தாங்கியிருக்கிறார். ரேலங்கி என்றாலே அவரது கோணங்கி நடிப்பும் அசட்டுக் கொக்கரிப்பும்தான் நினைவு வரும். ஆனால் இந்தப் படத்தில் அவர் அதையெல்லாம் குறைத்துக் கொண்டு நன்றாய் நடிக்கிறார். சங்கீதப் பைத்தியமான அவர் வீட்டில், நடிகன் ராமு, நாடகக் குழுவிலிருந்து தப்பியோடிச் சரணடைகிறான். அவனுக்கு அந்த வீட்டில் வேலை கிடைக்கிறது; நினைத்தபோதெல்லாம் வீட்டு எஜமானைத் திருப்தி பண்ணுவதற்குப் பாடித் தன்னைச் சந்தர்ப்பம் கிடைக்கிறது; இதெல்லாம் போதாத குறைக்கு அவர் பெண்ணின் காதலும் கிடைக்கிறது. அந்தக் காதலி சாவித்திரியாயிருப்பதனால், அபிநயமும், அழகு நடையும், ஆட்டமுமாக அக் காதல் வளர்ந்து கல்யாணத்தில் முடிவடைகிறது. சாவித்திரிக்கு இந்தப் படத்தில் நடிப்பதற்கு அதிகச் சந்தர்ப்பங்கள் கிட்டவில்லை. சாதாரணக் காதலியாகத் தோன்றி, வழக்கமான காதல் கட்டங்களில் வழக்கம்போல் நடித்திருக்கிறார்.

இந்தப் படத்தில் ஒரு விசேஷம் என்னவென்றால், புது மாதிரியான நிகழ்ச்சிப் பின்னல்களும், சந்தர்ப்பங்களும் நிறைய இருக்கின்றன. படிப்படியாகக் கஷ்டங்களை அநுபவித்துக் கொண்டே கீழே கீழே சென்றவர்கள், கடைசியில் படத்தின் முடிவில், படிப்படியாகக் கஷ்டங்கள் மறைந்து மேலே மேலே ஏறி, ஒரே கட்டத்தில் ஒன்று சேருகின்றனர். மறைந்த கஷ்டங்கள் அனைத்தும் நிமிஷரென்று மறந்தும் போய் விடுகின்றன.

நமது படங்களில் பொதுவாக உள்ள குறைகள் இந்தப் படத்திலும் இருக்கின்றன. இந்த நல்ல கதையைப் படமாக்கியவர்கள் திரைப்பட உத்திகள் விஷயத்தில் இன்னும் கவனம் செலுத்தியிருந்தால் படத்தின் தீவகாடி யான 'டெம்போ' ஒரே மாதிரியமைந்து படத்துக்கு, இன்னும் ஜீவ களையைத் தந்திருக்கும். பழையகாலத்து நாடகமேடையை நினைவூட்டும் பல காட்சிகள் நல்ல படத்திலும் எப்படியோ புகுந்து விடுகின்றன.


ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு எல்லாம் எவ்வளவோ வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த நாளில் சில தமிழ்ப் படங்களில் மட்டும் எப்படியோ இந்தக் குறையும் வந்து சேர்ந்து விடுகின்றது. ஒரு படத்தின் சிறப்புக்கு நல்ல கதை, வசனம், பாடல் முதலியவைகள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் அந்தப் படத்தில் நடிக்கும் நடிகர்களின் நடிப்புத் திறமை. அதைவிட அவசியமானது அவர்கள் வரும் காட்சிகளின் ஒளிப்பதிவும், அவர்கள் பேசும்-பாடும் இடங்களின் ஒலிப்பதிவும். இந்தப் படத்தில் சில இடங்களில் இவை இரண்டும் தட்டுப்படுகின்றன.

நம்முடையபடாதிபதிகள் கலைவளர்ச்சியிலும் கொஞ்சம் ஆர்வம் கொண்டு அக்கறை காட்டுவார்களானால், மேற்கூறிய குறைபாடுகளை நீக்குவது சிரமமான காரியம் இல்லை.

திரைக்கதை வசனம் இயல்பாக அமைந்திருக்கிறது. "குயிலன்" அமைத்திருக்கும் பாடல்கள் குறிப்பிட்டுக் கூறும்படியாயிருக்கின்றன. "நாமே வருந்தி அழைத்தாலும் வாரான்," "நித்திரை போடா தம்பியே" முதலிய பாடல்கள் நன்றாக அமைந்து விட்டன.

உணர்ச்சி வேகமும், உருக்கமான நிகழ்ச்சிகளையும் கொண்ட "சந்தானம்" ஒரு நல்ல படம். எல்லோரும் ரஸிக்கக்கூடிய படம்.





என். ஜீ. ஓ. ஏகாம்பரம்

எம். எஸ். வி.

ஏகாம்பரம் ஓர் ஏழைக் குமாஸ்தா. சர்க்கார் காரியாலயம் என்னும் மாபெரும் சமுத்திரத்தில் அவர் ஒரு சின்னஞ் சிறு மீன். கோட்டையிலுள்ள செக்ரிடேரியட் ஆபீஸுக்கு மீர்சாகிப் பேட்டையிலிருந்து தினந்தோறும் பஸ் ஏறிப் போய்ச் சேருவதற்குள் அவருக்குப் போதும் போதும் என்று ஆகிவிடும்.

பஸ் ஸ்டாண்டில் தவம் கிடப்பதற்கு முன்னால் அவர் தம் வீட்டிலிருந்து பஸ் ஸ்டாண்டுக்கு வேறு நடந்தாக வேண்டும். வீட்டுக்கும் பஸ் ஸ்டாண்டுக்கும் ஏறக்குறைய ஒரு மைல் தூரம் இருந்தது. வீட்டுக்குக் கொண்டு போகும் ஆபீஸ் 'பைல்' கட்டுகளைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு காலை வெய்யிலில் அவர் நெற்றி வியர்வை பைலில் விழ பஸ் ஸ்டாண்டுக்கு நடந்தே செல்வார்.

என். ஜி. ஓ. ஏகாம்பரம் இம்மாதிரி வருஷக்கணக்காக நடந்து கொண்டிருந்தார். பஸ் ஸ்டாண்டுக்கு அருகில் ஏதாவது வீடு கிடைத்தால் அங்கே குடி போய் விடலாம் என்றாலோ, ஒரு வீடும் கிடைக்கவில்லை. கிடைத்தாலும் ஏகாம்பரத்தால் கொடுக்க முடியாத அளவு வாடகை அதிகமாக இருக்கும்.



ஒரு நாள் அதிருஷ்டவசமாக ஏகாம்பரத்தின் காதில் ஒரு செய்தி விழுந்தது. அந்தச் செய்தி அவருடைய காதில் இன்பத் தேனாக ஒலித்தது.

ராயப் பேட்டையில் உள்ள ஒரு சின்ன வீட்டில் ஒரு 'போர்ஷன்' காலி யிருப்பதாக ஒருவர் தகவல் கூறினார். வாடகை இருபது ரூபாய் என்றும் பஸ் ஸ்டாண்டுக்கு வெகு சமீபத்திலேயே அந்த இடம் இருப்பதாகவும் சொன்னார். ஏகாம்பரம் உடனே போய் அந்த வீட்டைப் பார்வையிட்டார். ஏகாம்பரத்துக்கு ஆனந்தம் தாங்கவில்லை. அதிசயம் என்னவென்றால், பஸ் ஸ்டாண்டு அந்த வீட்டு வாசலிலேயே இருந்ததுதான்! பஸ் ஸ்டாண்டுக்குப் பைல் கட்டுகளுடன் நடக்கும் தொந்தரவு இனி விட்டது என்று நினைத்துப் பூரித்துப் போனார்.

எங்கேயோ எப்படியோ கடன் வாங்கி வாடகைக்காக இரண்டுமாத 'அட்வான்ஸ்' பணத்தை அன்றே கட்டி விட்டார்.

சாயந்திரம் காரியாலயத்திலிருந்து வீடு திரும்பியதும் புது வீடு பார்த்து அட்வான்ஸ் கொடுத்த விவரத்தைத் தம் மனைவியிடம் சொல்லி ஆனந்தப்பட்டார்.

அடுத்த முதல் தேதி யன்று புது வீட்டுக்கு மாறுவது என்று தீர்மானித்தார். முதல் நாள் முப்பதாம் தேதியன்று இரவே சாமான்களை யெல்லாம் காலி செய்து புது வீட்டுக்குக் குடி போனார்.

அன்று இரவு ஏகாம்பரத்துக்குத் தூக்கமே இல்லை. காலையில் நிதானமாக எழுந்து ஸ்நானம் செய்து சாவகாசமாகச் சாப்பிட்டு விட்டு ஆனந்தமாக வீட்டு வாசலில் 'டக்' கென்று பஸ் வந்து நின்றதும் போய் ஏறிக் கொள்ளலாம் என்பதை எண்ணி எண்ணி ஆனந்தப்பட்டார்.


பொழுது விடிந்ததும் ஏதோ காரியமாக வாசலில் வந்து பார்த்த போது என்ன ஆச்சரியம்! அங்கே இருந்த 'பஸ் ஸ்டாப்' கம்பம் மாயமாக மறைந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டார். இரவோடு இரவாக அதை யாரோ பெயர்த்துக் கொண்டு போய் விட்டார்கள்!

ஏகாம்பரம் ஓடிப் போய் பஸ் டிரான்ஸ்போர்ட்டுக்கு டெலிபோன் செய்து விசாரித்தார்.

அவர்கள் சொன்ன பதிலைக் கேட்டு ஏகாம்பரம் துள்ளிக் குதித்தார். அந்தப் பதில் என்ன தெரியுமா?

ஏகாம்பரம் வீட்டு வாசலில் இருந்த பஸ் ஸ்டாப் கம்பத்தைப் பெயர்த்து அரை மைலுக்கு அப்பால் மற்றொரு பொது இடத்தில் வைத்து விடும்படி டிரான்ஸ்போர்ட் தலைமை அதிகாரி உத்தரவு போட்டு விட்டார் என்பதுதான்.

ஏகாம்பரம் பாவம், பழையபடி மீண்டும் பஸ் ஸ்டாண்டுக்கு நடக்க ஆரம்பித்தார்.



அத்தியாயம் 23

புதிய குரல்!

நான் தந்தியடித்த ஐந்தாவது நாள் லக்ஷ்மி, அவளுடைய கணவர், சின்னம்மா எல்லோரும் வந்து விட்டனர். சின்னம்மா கண்ணீர் விட்டுப் புலம்ப ஆரம்பித்து விட்டார். அவரைச் சமாதானப்படுத்த வெகு நேரமாயிற்று.

லக்ஷ்மி என்னிடம் பிரியமாகப் பேசினாள். இந்துவின் கதியைப் பற்றி எல்லோரும் பரிதாபப் படுகிறார்கள். தங்கபாண்டியனைப் போலவே லக்ஷ்மியும், "எங்கள் குடும்பத்தில் நடந்த ஒரு விஷயத்தினால் உங்களிருவருக்கும் இவ்வளவு கஷ்டம் வந்து விட்டதே என்று வருத்தமாக இருக்கிறது" என்றாள். பிறகு இந்துமதியைப் பற்றியெல்லாம் விசாரித்தாள். ஆறுதலும் சொன்னாள். ஆனால் என் மனக் குமுறலை வார்த்தைகளினால் தணித்துவிட முடியுமா?

இரண்டு நாட்களில் வழக்கு ஆரம்பமாகிறது. நான் சென்னைக்குப் புறப்பட்டேன். தங்கபாண்டியனிடம் விடை பெற்றுக் கொள்ளக்கூட முடியவில்லை. சுய நினைவே இல்லாமல் இருக்கிறான். லக்ஷ்மி எனக்கு உற்சாகமூட்டி அனுப்பி வைத்தாள்.

ரயிலில் செல்லும்போது இந்து எழுதியிருப்பது ஞாபகம் வருகிறது. நானும் அவளும் ரயிலில் போவதாக, ஸ்டேஷனில் படுத்துக் கொண்டிருக்கும் போது கனவு கண்டதாக எழுதியிருக்கிறாள். பாவம்! இந்துவின் கனவு கனவாகவே ஆகி விடுமோ? அவளை எங்கும் என்னால் அழைத்துக் கொண்டே போக முடியாமல் போய் விடுமோ?

* * *

குங்குமத்துறையிலிருந்து சென்னை வந்து சேர்ந்ததும் முதலில் இந்துமதியைப் போய்ப் பார்த்தேன். இந்து என்னைக் கண்டதும் ஒரு மலர்ந்த புன்னகையுடன் எழுந்து நின்றாள். அதைக் கண்டதும் என் நெஞ்சில் வேதனை பரவிற்று. அவளை விடுதலை செய்து அழைத்துப் போகும்படியான சாட்சிகளோடு நான் வரவில்லை என்பது அவளுக்குத் தெரியாது. அவள் நிரபராதி என்பதை நிரூபிக்க நான் ருசு ஒன்றையும் கண்டு பிடிக்கவில்லை. இந்து தன் மனத்தில் அவளைக் காப்பாற்ற வந்த தெய்வமாக என்னை எண்ணிப் பூஜிக்கிறாள். என்னைப் பார்த்ததும் அவள் கண்களில் ஒரு அசாதாரணமான ஒளி சுடர் விடுகிறது. நீல வானிலிருந்து இரண்டு சுடர்களைப் பறித்து அவள் கண்களில் பதித்தமாதிரி தோன்றுகிறது.

எனக்கு வார்த்தைகளே ஒன்றும் வரவில்லை. அவள் கையிலிருந்த புத்தகம் என் கண்ணில் பட்டது.

"என்ன புத்தகம் படிக்கிறாய், இந்து?" என்று கேட்டேன்.

"சுந்தரகாண்டம் படிக்கிறேன். சீதை அசோகவனத்தில் சிறைப்பட்டிருந்ததைப் படிக்கும்போது, ஆறுதலாக இருக்கிறது. சீதாபிராட்டியாரின் துயரம் தீர்ந்தது போல் என் துயரமும் நிச்சயமாகத் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது."

"நீ இப்படி நம்பிக்கையுடனிருப்பது எனக்கு மகிழ்ச்சி யளிக்கிறது, இந்து!



முதலில் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யக் கூடாதென்று பிடிவாதம் பிடித்தாயே. அப்படி யெல்லாம் இனிமேல் செய்ய மாட்டாயல்லவா?"

"செய்யவே மாட்டேன். உங்கள் மனத்தை முன்பு நான் ரொம்ப நோகச் செய்து விட்டேன். இன்னமும் அப்படிச் செய்வேனா?"

"இல்லை, இந்து. நீ நோகச் செய்தாய் என்று நான் நினைத்தேன். அது எவ்வளவு தவறு என்பதும், நீ எப்படிப்பட்ட தியாகத்துக்குத் தயாராக இருந்தாய் என்பதும், உன் அன்பின் அற்புதமான வடிவமும் உன்னுடைய கதையைப் படித்தபோது தெரிந்தன. உன் மீது நான் ஆத்திரப் பட்டதை யெல்லாம் இப்போது நினைத்தால்கூட வெட்கமாக இருக்கிறது."

"ஏதாவது புதிதாக விஷயம் கிடைத்ததா?"

"இந்து! ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது. அது என்னவென்று நீ கண்டுபிடி, பார்ப்போம்" என்றேன்.

"நம்முடைய கல்யாணத்துக்கு நான் குறித்து ஏற்பாடுகள் செய்து விட்டீர்களா?" என்று விஷமப் புன்னகையுடன் கேட்டாள் இந்துமதி.

எனக்கு நெஞ்சை அடைத்தது. அதற்குப் பதில் சொல்லாமல், "உன் தந்தை காசிலிங்கத்தைப் பார்த்தேன்" என்று கூறினேன்.

இந்து திடீரென்று எழுந்து நின்றாள். அவளுடைய முகத்தில் தோன்றிய மாறுதல், என்ன உணர்ச்சியினால் ஏற்பட்டது என்று எனக்கு விளங்கவில்லை. அவளுடைய உடல் முழுவதும் படபடப்பினால் நடுங்கியது.

"உண்மையாகவா?" என்று கேட்டாள். அவளுடைய குரலிலும் நடுக்கம் தெரிந்தது.

"நீ அமைதியாகக் கேள், இந்து!" என்று கூறிவிட்டுக் காசிலிங்கத்தை நான் சந்தித்துப் பேசியவைகளை யெல்லாம் விவரமாகக் கூறினேன்.

அமைதியாக எல்லாவற்றையும் இந்து கேட்டாள். நான் கூறிய பிறகு, "எனக்கு அவரைப் பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. நீங்கள் அவரை எப்படியாவது இங்கே அழைத்து வந்திருக்கக் கூடாதா? என் அம்மா இறக்கும் வரையில் அவருடைய நினைவாகவே இருந்தாள் என்பதை நான் அவரிடம் கூறவேண்டும். அம்மாவுக்கு நான் அதைச் சொல்வதாக வாக்கு அளித்திருக்கிறேன்" என்றாள்.

"அதைச் சொல்ல முடியாமல் போய் விடாது, இந்து! உன்னை விடுதலை செய்து நான் அழைத்துச் சென்ற பிறகு அவரை நீ பார்த்துப் பேச எத்தனை தடவை வேண்டுமானாலும் சந்தர்ப்பம் கிடைக்கும்" என்றேன்.

இந்துவின் உடல் இரண்டாம் முறையாக நடுங்கிற்று. "என்ன இந்து! ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? நீ ரொம்பத் தைரியமாக இருந்தாயே?" என்று கவலையுடன் கேட்டேன்.

"விடுதலை என்ற சொல்லைக் கேட்டாலே எனக்குப் பயமாக இருக்கிறது" என்றாள் இந்து.

"ஏன் அம்மா அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டேன்.

இந்துவின் நிர்மலமான கண்களிலிருந்து கண்ணீர் உதிர்ந்தது.

"ஒரு வாரத்துக்கு முன்னால் இங்கு ஈசுவரமூர்த்தி வந்திருந்தார். அவர் பேசியதைக் கேட்ட பிறகு இங்கேயே இருந்து விடலாம் என்று தோன்றுகிறது. விடுதலையை விடச் சிறைவாசமே மேல். அவருடைய பயமுறுத்தல்கள் சிறையில் பலிக்காதல்லவா?"

ஈசுவரமூர்த்தியைப் பற்றி நன்றாக அறிந்திருந்த நான்கூட அதைக் கேட்டுத் திகைத்தேன். லாக் அப்பில் இந்துவை வந்து பார்த்துப் பயமுறுத்துவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை.


"அவர் என்ன சொன்னார்?" என்று கேட்டேன்.


"என்னத்தைச் சொல்வார்? படுபாவி அவர் சொன்னபடி நான் கேட்பதாக எழுதிக் கொடுத்தால் என்னை எப்படியாவது இதிலிருந்து விடுதலை செய்வதாகக் கூறினார். 'நான் முடியவே முடியாது' என்றேன்.

அதற்கு அவர், 'இந்து! ரங்கதுரையால் உன்னை விடுதலை செய்ய முடியவே முடியாது. நான் சொன்னபடி கேட்டால் உனக்கு ரொம்ப நல்லது. அல்லது ரங்கதுரை உன்னை விடுதலை செய்து விட்டாலும் உன்னை நான் சும்மா விட மாட்டேன்' என்றார். எனக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. நீங்களே என்னைப் போலீஸிலும் காட்டிக் கொடுத்து விட்டுப் பயமுறுத்த வேறு செய்கிறீர்களா?' என்று கேட்டேன். துயரத்தினாலும், கோபத்தினாலும், அவமானத்தாலும் என் உடல் முழுதும் நடுங்கிற்று.

அதற்கு அவர் சிரித்து விட்டு, 'இந்து, உன்னைக் காட்டிக் கொடுத்தது நான் அல்ல. உன்னை இந்தக் கதிக்கு உள்ளாக்கியதும் நான் அல்ல. உன் அருமைத் தந்தையே சொக்கையாவைக் கொன்று விட்டு உனக்கு இந்தக் கதி வரும்படி செய்திருக்கிறான். நீ இப்படிச் சிறையில் கிடப்பது தெரிந்தும் தான் முன் வந்து குற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லை. இப்படிப்பட்ட அழகான தந்தை உன்னை என்றென்றும் காப்பாற்றுவானென்று நீ நம்புகிறாய். ரங்கதுரையைப்பற்றியோ சொல்ல வேண்டியதே இல்லை. சுலோசனாவோடு அவன் கல்கத்தாவில் காதல் நாடகம் ஆடியதெல்லாம் எல்லோரும் அறிந்த விஷயம் — அவனுடைய பெயரையே கெடுத்து விட்டது. அவனைப்பற்றி எத்தனையோ புகார்கள் மேலிடத்துக்குச் சென்றதால்தான் அவனை அவ்வளவு அவசரமாக ஊர்மாற்றி விட்டார்கள். இப்படிப்பட்டவர்களைத்தான் நீ நம்புகிறாய்!' என்றார்.

என் புத்திகூடக் கொஞ்சம் தடுமாறிப் போய் விட்டது. உண்மையிலேயே குற்றம் செய்தது என் தந்தையாக இருக்கலாமோ என்ற சந்தேகம்கூட ஏற்பட்டது. ஆனால் ஈசுவரமூர்த்தியிடம் நான் அதையெல்லாம் காட்டிக்கொள்ள





கல்கத்தா லிப்டன் லிமிடெட்டின் விளம்பர மானேஜர் ஸ்ரீ எஸ். விஸ்வநாதன் அவர்கள் புதல்வி குமாரி வி. விஜயா, B.A.க்கும் ஹைதராபாத் ஸ்ரீ ஆர். பரமேஸ்வர் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி பி. ராம கிருஷ்ணன், B.Sc. அவர்களுக்கும் 1-6-56 அன்று சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க, மணமக்கள்!

வில்லை. அவர் தொடர்ந்து கூறினார். 'இந்து! உனக்காக நான் பத்மநாபனிடம் சண்டை பிடித்துக் கொண்டேன். அவர்தான் உன்னைப்பற்றிப் போலீஸுக்குத் தகவல் கொடுத்தார். ரங்கதுரை தன் பெண்ணின் பெயரைக் கெடுத்து விட்டானென்று அவருக்கு ரொம்பக் கோபம். அவர் இப்படிச் செய்ததற்காக நான் அவரை மிகவும் கோபித்துக் கொண்டேன். இப்போது நாங்கள் முகாலோபனமே செய்வதில்லை. உனக்காக நான் எதை வேண்டுமானாலும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன். இந்து! நான் சொன்னபடி கேட்டால் உனக்கும் நல்லது; ரங்கதுரைக்கும் நல்லது' என்று கூறினார்.

'நான் உங்களுடன் பேசத் தயாராக இல்லை. நீங்கள் தயவு செய்து போய் விடுங்கள்!' என்றேன்.

'இந்து! உன்னுடைய கர்வம் எப்படிப்பட்டதென்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆயினும் இந்தச் சிறையில் அடைபட்டுக் கிடக்கும் போது கூட நீ இவ்வளவு திமிருடன் பேசுவாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் உன்னை நான் சும்மா விடப் போவதில்லை. அது மட்டும் நிச்சயம்' என்று கூறி விட்டுப் போனார்" என்று கூறி, விம்மி விம்மி அழுதாள் இந்து.

சிறையில் தன்னந்தனியாக அகப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு அபலைப் பெண்ணை இவ்வாறு பயமுறுத்தத் துணிந்த சகுவரமூர்த்தி மீது எனக்கு ஆத்திரம் பொங்கி யெழுந்தது. இதயத்தில் திகுதிகு வென்று தீ எரிவது போல் இருந்தது. சகுவரமூர்த்தியை என்ன செய்வதென்று தீவிரமாக யோசித்தேன்.

இந்துவின் விம்மல்கள் என் கோபத்துக்கு எண்ணெய் ஊற்றிய மாதிரி இருந்தன.

"இந்து! நீ இந்தக் கயவனுடைய பேச்சுக்காகக் கண்ணீர் விடாதே. அவனை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றேன்.

இந்து என்னை நீர் நிறைந்த கண்களால் ஏறிட்டுப் பார்த்தாள். தண்ணீர் நிறைந்த வாவியில் மூழ்கி யிருக்கும் நீலோத்பல மொட்டு மாதிரி அவளுடைய விழிகள் கண்ணீரின் வழியாகப் புலப்பட்டன. அந்தக் கணத்தில் எனக்கு சகுவரமூர்த்தியின் மீது இருந்த கோபங்களெல்லாம் மறைந்து விட்டன. வாழ்க்கையின் கசப்பு அழிந்து விட்டது. கஷ்டங்களெல்லாம் தொலைந்து விட்டன. இந்துவின் மீது உள்ள அன்பு என்னும் சாகரத்தில் அமிழ்ந்து விட்டேன். ஆகா! என்ன மனோகரமான அனுபவம் அது. அதனால்தான் ஒருவர் மீது உண்மையான அன்பு இருந்தால் அது எல்லாக் கஷ்டங்களையும் போக்கடித்து விடும் என்று சொல்லுகிறார்கள் போலிருக்கிறது. இதனால்தான் அன்பினால் மனிதர்கள் தெய்வத் தன்மையை அடைவதாகக் கூறுகிறார்கள் போலும். என்னுடைய குரோதமும், கசப்பும், துயரமும் அடியோடு மறைந்து விட்டனவே. புனிதமானதொரு உணர்ச்சி இந்துவின் கண்களைச் சந்தித்த போது என் உடலெங்கும் பரவியது.

தெய்வீகம் பொருந்திய நதிகளின் நிர்மலமான நீரில், பகலவன் உதயமாகும் புனிதமான நேரத்தில் ஸ்நானம் செய்தால் ஏற்படுவது போன்ற தூய உணர்ச்சி எனக்கு உண்டாயிற்று. கண்களின் மூலம் எங்கள் இதயங்கள் கலக்கும் போதெல்லாம் என் உள்ளம் தூய்மையடைந்து விடுகிறது.

எங்களுடைய எண்ணங்களின் போக்கு வேறாக இருக்கலாம். எங்களிருவருடைய ஆசாபாசங்கள் வேறாக இருக்கலாம். வாழ்க்கையின் இலட்சியங்களே ஒரு வேளை வெவ்வேறாக இருக்கலாம். ஆயினும் எங்கள் இதயங்கள் இரண்டும் ஒரு இடத்தில் சங்கமம் ஆகி விடுகின்றன. அந்தச் சங்கமத்தில் மூழ்கிய நாங்கள் இருவரும் புனிதத் தன்மை அடைகிறோம்.

இந்து இரண்டு தரம் ஏதோ கூறினாள். எனக்குக் காதில் விழவில்லை. அவளு

திருட இயலாத குடும்ப சைஸ் பாக்கில்

'அனஸின்'

வாங்குங்கள்



'அனஸின்' 32 வில்லைகள் கொண்ட டப்பா ஒவ்வொரு முறையும் நீங்கள் வாங்கும்பொழுது 4 அணாக்கள் மிச்சமாகின்றன. அனஸினை எப்பொழுதும் கையோடு வைத்துக்கொள்ளும் குடும்பங்களுக்காகவே இந்த டப்பாவை பிரத்தியேகமான முறையில் அமைத்திருக்கிறோம். அனஸினை அவர்கள் சதா வைத்திருப்பதற்கு காரணம் அதில் வலி நிவாரணத்தை விரைவில் அளிக்கும் 4 மருந்துகள் அடங்கியிருப்பதே:

1. **கொயினா:** ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. **காப்பின்:** பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. **பினஸிடின்:** ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.

டைய சிவந்த அதரங்களின் அசைவு தான் தெரிந்தது.

இந்துவின் கரங்களிரண்டையும் என் கைகளில் வைத்து மூடிக் கொண்டே, "இந்து! உன்னால்தான் நான் மனித னாக வாழ்கிறேன். உன்னுடைய நினைவு தான், என்னை என்றும் தடுமாறாமல் காத்து வந்திருக்கிறது. உனக்கு நான் அதற்காக என்றென்றும் நன்றியுடைய வனாக இருக்க வேண்டும்" என்றேன்.

"இரண்டு நிமிஷங்களுக்கு முன்னால் ஈசுவரமூர்த்தியிடம் ஆத்திரப் பட்டீர்கள். அதற்குள் நன்றியைப் பற்றிப் பேசுகிறீர்களே?" என்றாள் இந்து.

"ஆமாம் இந்து! என்னைக் குரோதம், கோபம், மதமாற்சரியம் முதலியவற்றி லிருந்து உன் அன்பு காத்து வருகிறது. அதனால்தான் அப்படிக் கூறினேன்."

"என்னுடைய அன்பினால் உங்களுக்கு ஈசுவரமூர்த்தியிடம் கோபம் வராம லிருந்தால் எனக்கு உங்களிடம் தான் கோபம் வரும்" என்றாள் இந்து. அவள் வதனத்தில் துயரச்சாயை மறைந்து, புன்னகையின் ரேகை ஓடியது. அந்த மாறுதலைப் பார்த்து நான் வியப்படைந் தேன். உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சி கள் தான் முகத்தில் எத்தனை விதமான மாறுதல்களை உண்டாக்குகின்றன? ஒரே முகம்தான். அதில் கோபமும், மகிழ்ச்சி யும், நாணமும், துயரமும் எப்படிப் பின்னிப் படர்ந்து விளையாடுகின்றன? சினிமாவில் நடிப்பதைப் பார்த்து வியக் கிறோமே! வாழ்க்கையில் நம் முன்னே எப்போதும் தோன்றிக் கொண்டேயிருக் கும் இந்த அதிசயங்களை நாம் பார்க்க வும், ரஸிக்கவும், இவற்றை உண்டாக் கிய மகா கலைஞனை வாழ்த்தவும் தவறி விடுகிறோமே! என்று நினைத்தேன். என் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களை இந்துவிடமும் கூறினேன்.

"உன் முகத்தில் தோன்றி மறையும் உணர்ச்சி அலைகளைப் பார்க்கும்போது எனக்கு இறைவனுடைய அற்புதமான கலையைப் பற்றி வியப்பாக இருக்கிறது, இந்து. அந்தச் சமயங்களில் எனக்குக் கடவுள் மாதா பிதாவாகவோ அல்லது குருவாகவோ, கருணைக் கடலாகவோ தென்படுவதில்லை. அவர் ஒரு மகா கலைஞ ராகவே தோன்றுகிறார்" என்றேன்.

"அந்த அற்புதக் கலைஞரைப்பற்றி எண்ணி நான்கூட வியந்திருக்கிறேன், மிஸ்டர் ராய்!" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். சுலோசனா சிறைக் கதவின் அருகில் நின்று கொண்டிருந்தாள்.

அத்தியாயம் 24

மனம் நெகிழ்ந்தது

*சுலோசனாவைக் கண்டதும் இந்து பாய்ந்து சென்று அன்புடன் அவளைத் தழுவிக் கொண்டாள்.

சுலோவைப் போல என்னால் இந்து விடம் சுதந்திரமாக நடந்து கொள்ள முடியவில்லையே என்று எனக்கு ஆதங்க மாக இருந்தது.

இரண்டு பேரும் சற்று நேரம் கண் ணீர் விட்டார்கள். கொஞ்சம் சிரித் தார்கள். இருவரும் சேர்ந்தாற் போலப் பேசத் தொடங்கினார்கள். உடனே நிறுத்தினார்கள். இந்த வேடிக்கையை நான் அனுபவித்துக் கொண்டிருந் தேன். இருவரும் பேசாமலிருக்கவே, "பேஷ்! இரண்டு பேரும் இப்படி ஸ்திரீ தர்மத்துக்கே விரோதமாக மௌனம் சாதிக்கிறீர்களே!" என்றேன்.

சுலோசனா என்னைப் பார்த்து, "எத் தனையோ விஷயங்கள் பேச வேண்டி யிருப்பதால் எதை முதலில் பேசுவது, எதைப் பின்னால் பேசுவது என்று எங்களுக்குத் தெரியவில்லை" என்றாள்.

"ஆமாம்! நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்?" என்று கேட்டேன்.

"நீங்கள் வந்த அதே வழியாகத் தான் வந்தேன். இந்துவைப் பார்க்க வேண்டுமென்று எனக்கு மட்டும் ஆசையிருக்காதா என்ன?" என்று கேட்டாள் சுலோ.

"நீங்கள் எதற்காக இங்கு வந்து வீணாகத் தொந்தரவுகளை வரவழைத் துக் கொள்ள வேண்டும்? அப்பாவுக்குத் தெரிந்தால் என்ன ஆகுமென்று நீங்கள் யோசிக்க வேண்டாமா?" என்று கேட்டேன்.

இந்துவும், "ஆம் சுலோசனா! நீ இங்கு வந்திருக்கவே கூடாது. உன் னுடைய மனம் எனக்குத் தெரியாதா? என்னை வந்து பார்த்தால்தான் உன் னுடைய அன்பு எனக்குத் தெரியுமா, என்ன?" என்றாள்.

"இந்து! நான் உண்மையில் உனக் காக இங்கு வரவில்லை. என்னுடைய கடமையைச் செய்ய வந்திருக்கிறேன்.

---

* இந்த அற்புதக் காட்சியைத்தான் ஓவியர் மணியம் இந்த இதழ் அட்டையில் வண்ண ஓவியமாக வழங்கி யிருக்கிறார்.

ஒரு நிரபராதி மீது அக்கிரமமாகச் சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்களை நினைத்து என் நெஞ்சம் கொதிக்கிறது. அதற்கு என்னால் முடிந்த நிவர்த்தியைச் செய்யலாமென்றுதான் வந்திருக்கிறேன்."

"சுலோ! நீங்கள் இப்போது என்ன செய்தும் பயனில்லை. விஷயம் நம் கையை மீறிப் போய்விட்டது. குற்றவாளியைக் கண்டு பிடித்தாலொழிய இந்துவை விடுவிக்க யாராலும் முடியாது. ஆகவே நீங்கள் செய்வது வீணாகத்தான் போகும். அப்படியிருக்கும்போது கஷ்டங்களை விலைக்கு வாங்கிக் கொள்வானேன்? உங்கள் தந்தையின் மனக்கசப்புக்கு நீங்கள் ஆளாவானேன்?" என்றேன்.

"மிஸ்டர் ராய்! நான் இனிமேல் சுதந்திரமான பெண். அவருடைய வீட்டில் இனி நான் இருக்கப் போவதில்லை. நான் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று என் தந்தை சொன்ன சாட்சியம் அத்தனையும் பொய் என்றும், இந்து எங்கள் வீட்டிலிருந்து வைரங்களைத் திருடிக்கொண்டு ஓடவில்லை என்றும், இவர்தான் புதுச்சேரியிலிருந்து வைரங்களை வரவழைத்து வியாபாரம்செய்தார் என்றும் கூறப்போகிறேன். தாங்கள் தயவு செய்து இதைச் செய்ய எனக்கு உதவி செய்ய வேண்டும்" என்றாள்.



"என்ன சொல்கிறாய், சுலோ? இதனால் என்ன ஆகுமென்று உனக்குத் தெரியாதா?" என்று கேட்டான் இந்து.

"நன்றாகத் தெரியும்."

"வேண்டாம், சுலோசனா! எனக்கு இந்துமதியைக் காப்பாற்ற வேண்டுமென்பதுதான் நோக்கமே தவிர உங்கள் குடும்பத்தை நாசம் செய்வது என் எண்ணமல்ல. மேலும் இந்து இதற்கு ஒருநாளும் சம்மதிக்க மாட்டான்."

"ஆமாம்! நிச்சயமாக இப்படிச் செய்யவே கூடாது."

"இந்து! உங்கள் இருவராலும் எப்படி எங்கள் வாழ்க்கை குலைவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாதோ, அதே மாதிரி உங்களுடைய வாழ்க்கை என் தந்தையால் குலைவதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது."

சுலோசனா! உங்களுடைய தியாக உணர்ச்சி என்னைப் பிரமிக்கச் செய்கிறது. அதிலும் உங்களுடைய நிலைமையிலுள்ளவர்கள், எங்களைச் சேர்த்து வைக்க இப்படிப்பட்ட மகத்தான தியாகம் செய்ய முடியுமென்று நான் கருதியதே இல்லை. ஆனால் இப்படி நீங்கள் செய்து உங்கள் தந்தையைக் காட்டிக் கொடுப்பதால் பலன் ஏற்பட வேண்டுமே. இதனால் உங்கள் வீட்டில் இந்து திருடவில்லை என்பது ருசுவாகிறது என்றே வைத்துக்கொள்வோம். ஆனால் அவன் மீது சுமத்தப்பட்டிருப்பது திருட்டுக் குற்றம் அல்லவே. அவன் சொக்கையாவைக் கொலை செய்யவில்லை என்பதை உங்களால் ஒருநாளும் நிரூபிக்க முடியாதே?"

"அது எனக்கும் தெரிகிறது. ஆனாலும் ஒரு சாட்சி கூறியதில் பாதி பொய் என்று நிரூபித்து விட்டால் இன்னொரு பாதிக்குப் பலமில்லாமல் போய்விடுமல்லவா? இவர்கள் பொய்ச் சாட்சி கூறுகிறார்கள் என்பது மட்டுமாவது நிரூபணமாகி விடுமல்லவா?"

"சுலோ! நீங்கள் நினைப்பது போல் இது அவ்வளவு சுலபமல்ல. ஒரு வேளை செஷன்ஸ் கோர்ட்டில் நீங்கள் டிபென்ஸ் தரப்பில் சாட்சி கூறியிருந்தால் பிராஸிக்யூஷன் சாட்சிகள் கலகலத்துப் போயிருக்கும். இப்போது வழக்கு ஹைக்கோர்ட்டுக்குப் போய்விட்டது. இருக்கிற சாட்சியங்களை வைத்துக் கொண்டுதான் வழக்கைப் பரிசீலனை செய்வார்கள். புதிதாகச் சாட்சிகளை அழைக்க முடியாது. நீங்கள் போலீஸில் இப்படிச் சொன்னால் உங்கள் தந்தை சும்மா இருக்க மாட்டார். நாங்கள் தூண்டி விட்டிருக்கிறோம் என்பார். போலீஸிலும் தங்களுடைய வழக்கு பொய் என்றும், தங்களுடைய சாட்சிகள் பொய்ச் சாட்சிகள் என்றும் இலேசில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அந்த மாதிரி விசித்திரமான சம்பவங்களெல்லாம் கதைகளில்தான் நேரும். உண்மைக்கு அவை சிறிதும் ஒத்து வராது."

"அப்படியானால் நான் ஒன்றுமே செய்ய முடியாதா?"

"முடியாதென்று நான் நினைக்கிறேன். இந்து தான் குற்றவாளி என்று

ஒப்புக் கொள்ளவில்லையே தவிர, அவள் தான் குற்றவாளி என்று ஜூரிகளும் நீதிபதிகளும் தீர்மானிக்க வேண்டிய அளவு விஷயங்களைக் கூறி விட்டாள். குற்றம் நடந்ததைக் கண்ணால் பார்த்ததாகக் கூறினாள். அதைப் பற்றி வெளியே தெரிந்தால் தன் மீது சந்தேகம் ஏற்படும் என்று பயந்து போலீஸில் தகவல் கொடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறாள். தந்தப் பின்னை யார் தன்னுடையது என்றாள். குற்றம் செய்தவர் யாரென்று தனக்குச் சந்தேகம்கூட இல்லை என்று கூறியிருக்கிறாள். விஷயங்கள் இப்படி இருக்கும்போது நீங்கள் செய்யும் தியாகத்தினால் என்ன பயன்? உங்கள் தந்தையை ஒருவேளை பிடித்துச் சிறையில் அடைத்தாலும், அதனால் இந்துவுக்கு ஒரு பயனும் இல்லை" என்றேன்.

இந்து புன்னகையுடன், "எனக்குப் பயனுள்ளதாக நீ ஒரு காரியம் கட்டாயம் செய்ய வேண்டும் சுலோ. எனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால்..." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தபோது, சுலோசனா குறுக்கிட்டாள்.

"நான் எதுவும் செய்வதாக ஒப்புக் கொள்ள முடியாது, இந்துமதி!" என்றாள் சுலோ மிகவும் அழுத்தமாக.

இந்து ஒருகணம் இமை



கூடத் தெரிந்து கொள்ளாமல் மறுத்து விட்டாயே?'' என்றான்.

"நீ ஏதாவது அசட்டுப் பிசட்டென்று வாக்குறுதி கேட்டால் நான் கொடுக்கத் தயாராக இல்லை. உனக்கு ஒன்றும் நேரப் போவதில்லை. தயவு செய்து அப்படிப் பேசாதே. மிஸ்டர் ராய்! நான் போய் வருகிறேன். என் உதவி எப்போது உங்களுக்குத் தேவையோ அப்போது டெலிபோனில் கூப்பிட்டு ஒரு வார்த்தை சொல்லுங்கள். உடனே உங்கள் அறையில் வந்து சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சுலோ சட்டென்று வெளியே போய் விட்டாள்.

"ஏன் இந்து! சுலோவிடம் என்ன வாக்குறுதி கேட்பதாக இருந்தாய்?'' என்று கேட்டேன்.

"சுலோசனா ரொம்பக் கெட்டிக்காரி. நான் என்ன கேட்பேனென்று ஊகித்து விட்டாள். அதனால்தான் மழுப்பி விட்டாள். எனக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டு விட்டால் உங்களை அவள் மணந்து கொள்ள வேண்டுமென்று கேட்பதாக இருந்தேன்.''

நான் இந்துவின் முகத்தைக் கோபமாகப் பார்த்தேன்.

"ஏன் கோபம் வருகிறது உங்களுக்கு? நான் நினைப்பது நியாயம் தானே?'' என்றாள் இந்து.

"இந்து! நீ இன்னும் என்னைப் புரிந்து கொள்ளவில்லையே என்று எனக்கு வருத்தமாக இருக்கிறது. நீ தண்டனை அடைவதைப் பார்த்துக் கொண்டு நான் இருப்பேனா?''

"ரொம்ப அழகாக இருக்கிறது. இப்படியெல்லாம் நீங்கள் பேசவே கூடாது.''

"இல்லை, இந்து! நீ அவசியம் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். உனக்கு இயற்கையாக மரணம் சம்பவித்ததென்றால் நான் பொறுத்துக் கொள்வேன். அது இறைவன் பொறுப்பு என்று சமாதானப் படுத்திக் கொள்வேன். உன் பிரிவு என்றால் தாங்க முடியாமலிருந்தாலும் நம்முடைய அன்பின் இனிமை அந்தத் துயரத்தில் கலந்தே இருக்கும். உன்னுடைய அன்பு என் வேதனையைக் கூட இனிமையான துயரமாகச் செய்து விடும். ஆனால் உனக்குத் தண்டனை கிடைத்தால் அதை என்னால் தாங்கவே முடியாது. உனக்கு ஒரு ஆபத்தும் வராமல் பாதுகாப்பேன் என்று உன் அன்னையிடம் வாக்குறுதி யளித்தேன். அதை நான் காப்பாற்றாமல் இருந்தால் என் மனச்சாட்சி என்னைப் பிழிந்தெடுத்து விடும். உனக்கு அப்படியே தண்டனை நிறைவேறுவதாக இருந்தாலும் அதற்கு முன்னால் உன்னை மணந்து கொள்ள அனுமதி கேட்பேன். பிறகு...''

"போதும்! போதும்! என்னால் தாங்க முடியவில்லை'' என்று என் வாயைப் பொத்தினாள் இந்து. அவளுடைய கன்னங்களில் கண்ணீர் முத்துக்கள் உருண்டு உருண்டு ஓடி வந்து புடவைமீது சொட்டி மறைந்தன.

"ஏன் அழுகிறாய் இந்து?'' என்று பதற்றத்துடன் கேட்டேன்.

"இது அழுகை அல்ல, ஆனந்தக் கண்ணீர்'' என்றாள் இந்து.

இந்துவிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினேன். காரில் சற்றுத் தூரம் சென்றதும் சுலோசனா பஸ் ஸ்டாண்டில் நிற்பதைப் பார்த்தேன். அவளெதிரில் காரை நிறுத்தினேன். சுலோசனா ஒன்றுமே பேசாமல் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

"ஏன் சுலோ? நீங்கள் காரில் வரவில்லை என்று என்னிடம் சொல்லியிருக்கக் கூடாதா?'' என்று கேட்டேன்.

"இது என்ன பிரமாதம் மிஸ்டர் ராய்? நான் ஒருவருக்கும் தெரியாமல் வந்தேன். அதனால்தான் காரை எடுத்துக் கொண்டு வரவில்லை'' என்றாள் சுலோசனா.

பிறகு அவள் சற்றுப் பொறுத்து, "மிஸ்டர் ராய்! நீங்கள் எல்லா விஷயங்களையும் இந்துவிடம் கூறி விட்டீர்களா?'' என்று கேட்டாள்.

"ஆமாம்! இந்துவுக்கு நான் என் வாழ்க்கை முழுவதையும் எழுதிக் கொடுத்தேன். அதில் கல்கத்தாவில் நடந்த சம்பவங்களையும் எழுதினேன். அவளிடம் எதையும் மறைக்க நான் விரும்பவில்லை'' என்றேன்.

"உங்கள் வரைக்கும் அது உண்மை தான். ஆனால் என்னைப்பற்றி நீங்கள் சொல்லியிருக்க வேண்டாம். அது அவளுடைய மனத்திலிருந்து அகலவே அகலாது. இந்துவின் தங்கமான குணத்தினால் எனக்கு ஏதோ தவறு இழைப்பதாக அவளுக்குத் தோன்றும்.''

"இருந்தாலும் ஒளிக்காமல் கூற வேண்டியது என் கடமையல்லவா? ஏதாவது சிறிய விஷயத்தை இந்துவிடமிருந்து மறைத்தாலும் எங்களுடைய இதயங்களின் ஐக்கிய உணர்ச்சி சிதைந்து போய்விடும்.''

"அது எப்படி? நீங்கள் உங்களுடைய விஷயம் எதையும் மறைக்க வேண்டாமே. நான் கூறியவற்றை மட்டும் அடியோடு மறந்திருக்கலாமே?''

"அப்படி முடியுமா சுலோசனா? இந்துவிடமிருந்து எதையேனும் மறைத்தால் எங்களுடைய உள்ளங்கள் விலகிப் போய்விடும். நான் அப்படிச் செய்ய மாட்டேன். இருவருடைய இதயங்கள்


HAZELINE SNOW
முக்கியமாக நான் கவனிப்பது...
..."'ஹாஸலீன்' ஸ்னோ" வாங்கும்பொழுது,
அதைச் சுற்றியிருக்கும் வெள்ளி நிற
அலுமினியத் தகடு, மற்றும் மேற்பாகத்தில்
காணப்படும் நீல நிற யூனிகார்ன் சின்னம், இவை
ஒழுங்காக இருக்கின்றனவா என்று சோதித்தே
வாங்குகிறேன். இதுவே நேர்த்தியான
சுத்தத்தன்மைக்கு உத்திரவாதம்
அளிக்கும் அசல் "'ஹாஸலீன்' ஸ்னோ"
என நான் தீர்மானிக்கிறேன்.
"'HAZELINE' SNOW"
(TRADE MARK)
"'ஹாஸலீன்' ஸ்னோ" (டிரேட் மார்க்)
பர்ரோஸ் வெல்கம் & கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட்.
பி. ஓ. பாக்ஸ், 290, பம்பாய்

ஒன்றுபட்டிருக்கிறது என்றால் என்ன பொருள்? தங்களுடைய இதயத்தில் எழும் எண்ணங்களையும், ஆசாபாசங்களையும் அவரவர்கள் தெரிந்து கொள்வது போலவே மற்றவருடையதையும் கண்ணாடியின் மூலம் பார்ப்பது போல் தெரிந்து கொள்ள வேண்டும். அன்புக்கு அடிப்படையானது உண்மை. அப்படி இருக்கும் போது நான் ஒரு முக்கியமான சம்பவத்தை இந்துவிடமிருந்து மறைக்கலாமா?'' என்றேன்.

சுலோசனா சற்று நேரம் யோசனையுடன் இருந்தாள். பிறகு, "நீங்கள் கூறியதும் ஒரு விதத்தில் நல்லதுதான். இல்லாவிட்டால் வேறு விதமாக அவள் சந்தேகப்பட்டு மனம் வருந்திக் கொண்டிருப்பாள்'' என்றாள்.

சுலோசனாவை அவளுடைய வீட்டின் அருகில் இறக்கி விட்டு விட்டு நான் வக்கீலைப் பார்க்கச் சென்றேன். மறுநாள் வழக்கு ஆரம்பமாக விருந்தது. சுலோசனா சொன்னதையெல்லாம் அவரிடம் கூறி யோசனை கேட்கலாமென்று எண்ணிக்கொண்டேபோனேன். அவரும் சுலோசனா என்ன சொன்னாலும் இனிமேல் பயன்படாது என்று கூறி விட்டார். எனக்கு மனம் ஒடிந்து போய் விட்டது.

ஈசுவரமூர்த்தி இந்துவைப் பயமுறுத்தியதை நினைத்தபோது எனக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. பழைய நினைவுகளை மனத்தில் ஓடவிட்டுக் கொண்டே காரை வேகமாக ஓட்டிச் சென்றேன்.

எதிரில் ஒரு நெடிய மனிதர் நடந்து வந்து கொண்டிருந்தார். அவருடைய காவி நிறத் தலைப்பாகை கண்களைக் கவர்ந்தது. தலைப்பாகையின் உயரம் அந்த மனிதருடைய உயரத்தை மிகைப்படுத்திக் காட்டிற்று.

கார் அவரைக் கடந்து மேலே சென்று விட்டது. பிறகுதான் எனக்கு அவரை எங்கோ பார்த்திருப்பது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. காரை நிறுத்தி விட்டுத் தேடிப் பார்த்தேன். அவரைக் காணவில்லை. நான்கு பக்கமும் சாலைகளுள்ள நெருக்கமான இடம் அது. அவர் எங்கே போனாரென்று கண்டு பிடிப்பது அசாத்தியம் என்று தீர்மானித்துக் கொண்டு கிளம்பிச் சென்றேன்.

திடீரென்று ஈசுவர மூர்த்தியின் வீட்டுக்குப் போய் அவரை மிரட்டினால் என்ன என்று தோன்றியது. நான்தான் கந்தசாமியின் பிள்ளை என்பதை அவரிடம் சொல்லும்போது அவருக்கு ஒரே அதிர்ச்சியாக இருக்காதா என்று எண்ணிக் கொண்டே போனேன்.



முதலாளி:— உமக்குப் போட்டிப் பந்தயத்தில் லட்ச ரூபாய் வந்திருக்காமே! இனிமேல் இது மாதிரி காரியமெல்லாம் வைத்துக் கொள்ளாதீர்கள். ஜாக்கிரதை! உம்மை வேலையை விட்டு நீக்கி விடுவேன்!

காரை ஈசுவரமூர்த்தி வீட்டு வாசலில் நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்தேன். அங்கு முதலில் என் கவனத்தைக் கவர்ந்தது, கீழே கிடந்த ஒரு கவர்தான். அதன் மீது ஈசுவரமூர்த்தியின் விலாஸம் எழுதப் பட்டிருந்தது. அந்தக் கையெழுத்து எனக்கு ரொம்பத் தெரிந்த எழுத்துப் போல இருந்தது. ஆனால் யாருடையதென்று உடனே ஞாபகம் வரவில்லை. 'இன்று என்ன வந்து விட்டது எனக்கு? சற்று முன்னால் யாரையோ பார்த்த மாதிரி இருந்தது. ஆனால் ஞாபகம் வரவில்லை. இந்தக் கையெழுத்தும் தெரிந்த மாதிரி இருக்கிறது. ஆனால் நினைவு வரவில்லை' என்று எண்ணிக் கொண்டே அந்தக் கவரைக் கையில் எடுத்துப் பார்த்தேன். ஒரு பக்கம் கிழிக்கப்பட்டுக் கடிதம் எடுக்கப்பட்டிருந்தது. அதன் முத்திரையில் அன்றையத் தேதி குறிக்கப்பட்டிருந்தது. எந்த ஊரிலிருந்து வந்திருக்கிறதென்று பார்த்தேன். ஒன்றும் தெரியவில்லை. ஒரே கறுப்பாக இருந்தது.

அந்தச் சமயத்தில் பக்கத்து அறையிலிருந்து மணியடிக்கும் சத்தம் கேட்டது. உடனே அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தேன். ஈசுவரமூர்த்தி ஒரு கடிதத்தைப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

(அடுத்த இதழில் முடியும்)

தேவியின் கடிதம்

முயற்சி திருவினையாக்கும்

வசுமதி ராமசாமி

அன்புமிக்க சுஜாதா,

பெண்களுக்குக் கோபம் வந்தால் தவறா? சாதுவாக இருந்தால் எல்லோரும்மேய்த்துக் கட்டி விடுகிறார்களே யெனக் கேட்கிறாய். பெண்களானாலும், — ஆண்களானாலும் கோபப்படுவது விரும்பத் தக்கதல்ல.

கன்னிமாதிரி பெண்களுடைய கோபம் இன்னும் உக்கிரமானதுதான். எல்லா வசதிகளும் இருந்தால் எனக்கும்தான் கோபம் வராது. இவ்வளவு இடைஞ்சல் இருந்தால் கோபம்கூட வராமலிருக்குமா என்று ஒரு சகோதரி கேட்கிறாள். ஒரே பதில்தான். இடைஞ்சல்களும், கஷ்டங்களும் இருக்கும்போதுதான் கோபத்தை அடக்க வேண்டும்.

பெரிய மகரிஷிகள் கோபத்தால் தங்கள் தவ வலிமையை இழந்திருக்கிறார்கள். சீதையே கோபத்தில் லக்ஷ்மணனைத் தகாத வார்த்தைகள் சொன்னதால் மகத்தான கஷ்டத்தை அனுபவிக்க நேர்ந்தது.

'குழந்தைகளின் விஷமம் சகிக்கவில்லை. வேலைக்காரர்கள் அடம் பொறுக்கவில்லை.



உடம்பு பலஹீனம் சொல்லி முடியாது. அதனாலெல்லாம் கோபம் வருகிறது' என்று சொல்வதில் பயனில்லை. கோபப்படுவதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கின்றன. தன் கோபத்தை அடக்குவதுதான் அதிசயம். கோபத்தில் இரு வகை. காரியங்கள் சரிவர நடக்கவும், குழந்தைகள் நல்ல முறையில் வளரவும், மற்றுமுள்ள நிர்வாகங்களுக்கும் அமைதியாக இருந்தால், நன்றாக நடைபெறுதுதான். அதற்காக ஓரளவு குரலில் அழுத்தமாக, அதட்டலாக வார்த்தைகள் தவறின்றிக் கோபப்படுவது ஒரு வகை. அது உடல் நலனைப் பாதிக்காது. ஆனால் உணர்ச்சி வசப்பட்டுத் தன் நினைவு மறந்த கோபத்தால் ஆரோக்கியம்கெடும். அதற்குப் பலன் இல்லை என்பது மட்டுமல்ல, விபரீத பலனும் ஏற்படுகிறது. கோபப்படுவது நமக்கே கெடுதல் செய்து கொள்வதுதான். ஆனால் வாழ்க்கையில் கோபமின்றி இருப்பது சாத்தியமாகிறதா யெனக் கேட்கலாம். ஒரு நாளைக்குப் பத்து தடவைகள் வரும் கோபத்தைப் பெரு முயற்சியால் ஐந்து தடவைகளுக்குக் கொண்டு வரலாம். முயற்சி திருவினையாக்கும் அல்லவா?

ஒரு சகோதரி தன் குழந்தையை அடிக்கும்போது அவள் தோற்றத்தைப் பார்த்தேன். தலைமயிர் அவிழ்ந்து தொங்குகிறது. கண் சிவந்து போய் விட்டது. என்ன பரிதாபம்! நம் குழந்தையை அடிக்கும்போது நம்முடைய தோற்றமும் இப்படித்தானே இருக்கும் என்று நினைக்கும் போது வெட்கமாக இருந்தது.

"ஆறுவது சினம்" என்று சிலருடைய கோபம் வெகு சீக்கிரத்தில் ஆறிவிடும். அவர்கள் இதயம் மென்மையானது. சிலருடைய கோபம் யானை போல் மனத்தில் வேரூன்றிச் செயலில் பரிணமிக்கிறது. அது மனிதத்தன்மையை மாற்றி விடும். அந்தப் பகைமை உணர்ச்சியை உதறித் தள்ளத்தான் வேண்டும்.

* * *

சென்ற வாரம் சென்னையில் ஒரு பிரபல திருமணம் நடைபெற்றது. அந்தத் திருமணத்தின் கோலாகல வைபவத்தைச் சென்னை நகரவாசிகள் ஆனந்தித்து அநுபவித்தார்கள். எல்லோரும் பந்தல் அழகையும், உபசரணையும், கூட்டத்தையும், பாலைவனமாக இருந்த இடம் சோலைவனமாக மாறி யிருப்பதையும் வியந்து பேசினார்கள். எங்களில் சிலர் அவைகளையெல்லாம் விட இவ்வளவு ஏற்பாடுகள் செய்து, சலியாமல், சிரித்த முகத்துடன், சாந்தமாக இருந்த மணமகனுடைய பெற்றோர்களைத்தான் வியந்தோம். அவர்கள்பட படப்பும் கோபமுமின்றி அமைதியாக இருந்ததை மறக்க முடியாது. — பூமாதேவி



டுமெக்ஸ்

பால் உணவு



குழந்தைகளால் அவர்கள் ஏன் டுமெக்ஸ் பால் உணவை விரும்புகிறார்கள் என்று சொல்லமுடியாது. ஆனால் அது கிடைத்ததும் அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறார்கள் என்பதைக் கவனியுங்கள். இதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை, ஏனென்றால் டுமெக்ஸ் தான் தாய்ப்பாலுக்கு அடுத்த சிறந்த பால் உணவாக விளங்குகிறது.

உங்கள் குழந்தைகளுக்கு டுமெக்ஸ் பால் உணவைக் கொடுத்து அவர்களின் வளர்ச்சியைக் கவனியுங்கள்

நவபாரத தரிசனம்



பாட்டாளிக்கு விமோசனம்

ஜெயமணி

4

கிராம முன்னேற்ற வேலைகளில் பயிற்சி பெறுவோருக்காக அமைக்கப்பட்டிருக்கும் பக்ஷி கா தாலாப், லக்ஷ்மணபுரியி லிருந்து பன்னிரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. அதைச் சேர்ந்த கட்டடங்கள் யாவும் ஒரு சுத்தமான மாந்தோப்பில் நிர்மாணிக்கப் பட்டிருப்பது பக்ஷி கா தாலாபின் தனிப் பெருமையாகும். அங்கு பயிற்சி பெறுவோர் முதன் முதலாகவும் கடைசியாகவும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் உழைப்பின் உயர்வுதான். கிராம முன்னேற்றத்துக்காக உற்சாகத்துடன் தொண்டு செய்வதே அங்கு பயிற்சி பெறுவோரின் முக்கிய கொள்கையாக இருக்கிறது.

இதையெல்லாம் பக்ஷி கா தாலாப் நிர்வாக அதிகாரி விவரித்துக் கூறியபோதுதான், அப்பயிற்சி ஸ்தாபனத்தின் அவசியத்தை நாங்கள் உணர முடிந்தது.

1955-ம் வருஷத்தில் மாத்திரம் பக்ஷி - கா தாலாப் மேற்பார்வையில் உள்ள கிராம மக்களுக்குச் சுமார் 8000 மணங்கு உயர்ந்த ரக நெல், கரும்பு, உருளைக் கிழங்கு விதைகள் விநியோகித்திருக்கிறார்கள். இதிலிருந்து அவர்கள் செய்து வரும் சமுதாயத் தொண்டின் சிறப்பைத் தெரிந்து கொள்ளலாம்.


பாரத நாட்டின் எதிர்கால க்ஷேமம் இங்குள்ள லட்சக்கணக்கான கிராமங்களின் முன்னேற்றத்தையே பொறுத்திருக்கிறது. எனவே, அத்தகைய முன்னேற்றத்துக்கு அஸ்திவாரம் அமைக்கும் தொண்டில் ஈடுபட்டுள்ள பக்ஷி கா தாலாப் 'நீடூழி வாழ்க!' என்று கோஷம் செய்துவிட்டுத் திரும்பினோம்.

இத்துடன் லக்ஷ்மணபுரியில் எங்கள் அலுவல்கள் முடிவடைந்தன.

* * *

லக்ஷ்மணபுரியிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு புறப்படுமுன் அந் நகரிலுள்ள சரித்திரப் புகழ் பெற்ற பல கட்டடங்களைப் பார்க்க வேண்டியது அவசியம் அல்லவா!

அதோ மொட்டைச் சுவர்களுடன் ஒரு கட்டடம் நிற்கிறதே, அதுதான் ரெஸிடென்ஸி. எல்லாம் வல்ல பிரிட்டிஷ் ரெஸிடெண்டுகள் வசித்த இடம்! ஆனால், 1857-ல் நடந்த முதலாவது இந்திய சுதந்திரத்தின் போது தேச பக்தர்கள் அதைத் தகர்த்தெறிந்து விட்டார்கள். அன்றிலிருந்து இன்று வரையில் அது யாதொரு மாறுதலுமின்றி மொட்டைக் கட்டடமாகவே காட்சியளித்து வருகிறது.



இந்தியக் 'கலகக்காரர்கள்' செய்த அக்கிரமங்களை எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே, தகர்க்கப்பட்ட அந்தக் கட்டடத்தைப் பிரிட்டிஷார் அப்படியே விட்டு வைத்திருந்தார்கள். ஆனால் இன்றோ வெனில், அதே கட்டடம் இந்தியாவின் சுதந்திரத்துக்காக நூறு ஆண்டுகளுக்கு முன் உதிரம் சிந்திய வீர தீர பராக்கிரமசாலிகளான உத்தம தேசபக்தர்களின் புனித ஞாபகச்சின்னமாக விளங்கி வருகிறது!

1857-ம் வருஷத்திலே பாரத அன்னையின் புதல்வர்கள் புரிந்த வீர சாகசச் செயல்களைக் கதை கதையாகக் கூறும் மற்றும் சில கட்டடங்களையும் பார்த்த பின், நாங்கள் 1784-ம் ஆண்டில் கட்டப்பட்ட மகோன்னதமான இமாம்பாராவுக்குச் சென்றோம்.

அற்புதமான வேலைப்பாடுகளும், சித்திரங்களும், இருபது அடி உயரமுள்ள கிலேக்கண்ணாடிகளும் நிறைந்த இமாம்பாராவின் மத்திய மண்டபம் 163 அடி நீளமும் 53 அடி அகலமும் 50 அடி உயரமும் உள்ள அற்புத சிருஷ்டியாகும். மரமே இல்லாமல் கட்டப்பட்டுள்ள இவ்வளவு பெரிய மண்டபமும் கட்டடமும் உலகிலேயே வேறு எங்கும் இல்லை. அவ்வளவு மாபெரும் மண்டபத்தின் ஒரு மூலையிலிருந்து ஒருவர் பேசினால் அது ஒலிபெருக்கியின் உதவியின்றியே மற்றொரு மூலையில் இருப்பவர்களுக்குக் கணீரென்று கேட்கிறது!

அந்தக் கட்டடத்தை நிர்மாணித்த சிற்ப நிபுணர்களின் மேதைக்கு இதைக் காட்டிலும் சிறந்த சான்று என்ன வேண்டும்!

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட அந்த அற்புத சிருஷ்டியைப் பார்க்கத் தினந்தோறும் நூற்றுக்கணக்கானவர்கள் அங்கு செல்லுவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது!

* * *


லக்ஷ்மணபுரியில் கண்ட காட்சிகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே ரயில் வண்டியில் ஏறிய ஒரு சில மணி நேரத்துக்குள் எல்லோரும் கான்பூர் வந்து சேர்ந்தோம்.

கான்பூர் பலவிதத்திலும் சிறப்பு வாய்ந்த நகரமாகும்.

கான்பூர் புனித கங்கை நதிக் கரையில் இருக்கும் பாக்கியம்பெற்றுள்ள நகரங்களில் ஒன்று. உத்தரப் பிரதேசத்தில் அது தான்மிகப் பெரிய பட்டணம் என்பதுடன், இந்தியாவில் தொழிற்சாலைகள் அதிகம் உள்ள நகரங்களின் ஜாபிதாவிலும் அது இடம் பெற்றிருக்கிறது. இவற்றைத் தவிர, முதலாவது சுதந்திர யுத்தத்தில் கான்பூர் கேந்திர ஸ்தானமாக விளங்கியது. அக்காலத்தில் அங்கு தேசபக்தர்கள் புரிந்த தியாகமும் அடைந்த மகத்தான வெற்றியும் பொன் ஏடுகளில் நவரத்தினக் கற்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

அவ்வாறு ஏற்கனவே பல விதத்திலும் பெருமை வாய்ந்த கான்பூர் நகரம் இன்று சுதந்திர பாரதத்திலே மற்றொரு துறையில் சிறந்து விளங்குவது பற்றிக் குறிப்பாக உத்தரப் பிரதேச சர்க்காரும் மக்களும் பெருமிதம் அடையலாம்.

இந்தியாவில் உள்ள பெரிய நகரங்களின் பெருமைக்கும் நற்பெயருக்கும் இழுக்காக இருப்பது அவற்றில் இருக்கும் சேரிகள்தான். அத்தகைய சேரிகளை ஒழிப்பதில் கான்பூர் ஓரளவு வெற்றி பெற்று வருகிறது. அம்




உங்கள் பணவசதிக்குத் தகுந்தபடி ஒரு நேர்த்தியான காமிராவை சொந்தத்திற்கு வாங்கி வைத்துக்கொள்ளுங்கள்

இங்கு குறிப்பிட்டுள்ள நேர்த்தியானவகைகளைச் சேர்ந்த 'கோடக்' காமிராக்களில் ஒன்றை சொந்தத்திற்கு வைத்துக்கொள்ள பேரானந்தமாயிருக்கும். நீங்கள் தேர்ந்தெடுக்க விரும்பும் ரகங்களைப் பாருங்கள்.

* மிகச் சுலபமாய் உபயோகிக்கக்கூடிய ஒரு காமிரா தேவையா? அப்படியானால் கோடக் 'ஜூனியர்' I காமிராவே உங்களுக்குகந்தது. பெரிய லென்ஸும், ஷட்டர்ஸ்பீடுகளின் வசதிகளுக்கும் 'ஜூனியர்' II எடுத்துக் கொள்ளுங்கள்.
* ஒரு உயர்ந்த ரக காமிரா உங்கள் விருப்பமானால் கோடக் 'ஸ்டர்லிங்' II வைத்துக் கொள்வதில் ஒரு தனிப் பெருமை உங்களுக்கு ஏற்படும்.
* அல்லது நீங்கள் குறைந்த விலையில் அதிகப் பெருமானமுள்ள காமிரா வாங்க நினைத்தால் நீங்கள் தேர்ந்தெடுக்க இரு மினியேச்சர் காமிராக்கள் கோடக் 'ரெடினெட்' மற்றும் கோடக் 'ரெடினா' Ib இருக்கின்றன.

உங்கள் கோடக் வியாபாரியை, இந்தக் காமிராக்களைத் தவிர வேறு பற்பல ரகங்களையும் காண்பிக்கச் சொல்லுங்கள். உங்களுக்குத் தேவையான ஒரு காமிராவைத் தேர்ந்தெடுக்க அவர் உதவி செய்வார்.



ஸிக்ஸ்-20 கோடக் 'ஜூனியர்' II காமிரா
இந்த மடக்கக் கூடிய காமிராவில் எப்/6.3 லென்ஸ் மற்றும் மங்கிய வெளிச்சத்திற்கும் ப்ளாஷ் படங்களுக்கும் 1/25 செகண்டு மற்றும் பிரகாசமான திறந்த வெளி ஸ்னாப்புகளுக்கு 1/50 செகண்டு முறையே இரண்டு ஷட்டர் ஸ்பீடுகள் உண்டு. 'கோடக்' 620 பிலிம்மில் 8 பிரமாதமான படங்கள் எடுக்கலாம். ரூ. 115/-
தோல் கேஸ் .. .. ரூ. 9/8
ப்ளாஷ்ஹோல்டர் .. .. ரூ. 29/-

கோடக் 'ஸ்டர்லிங்' II காமிரா
இது எல்லாவிதத்திலும் சிறந்த ஒரு காமிராவாகும். இதில் எப்/4.5 லென்ஸ் மற்றும் 1/200 செகண்டுவரை ஷட்டர் ஸ்பீடும் உள்ளன. 'கோடக்' 620 பிலிம்மில் 8 ஸ்னாப்புகள் எடுக்க முடியும். ஷோக்கான க்ரோமியமும் கருப்பு வர்ணப் பெட்டியில் சாம்பல் நிறத்தில் பொருத்தங்களுடன் கூடியது. .. .. ரூ. 157/8
தோல் கேஸ் .. .. ரூ. 9/8
ப்ளாஷ்ஹோல்டர் .. .. ரூ. 29/-

கோடக் லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது : கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்

தெளிவான நல்ல படங்கள் எடுக்க 'கோடக்'

பிலிமையே எப்பொழுதும் உபயோகியுங்கள் !

முயற்சியில் கான்பூர் மற்ற நகரங்களுக்கு வழி காட்டியாகவும் அமைந்திருக்கிறது !

கான்பூரில் ஏராளமான தொழிற்சாலைகள் இருப்பதால், அந்த நகரில் மொத்தம் உள்ள எட்டு லட்சம் ஜனங்களில் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் மோசமான குடிசைகளில் வசித்து வருகிறார்கள். ஒரு சிறிய குடிசையில் நாலு அல்லது ஐந்து குடும்பங்களும் வசிப்பது உண்டு என்றால் பார்த்துக் கொள்ளுங்கள் !

அத்தகைய விபரீதத்தை ஒழித்துக்கட்டுவதற்காக உத்தரப் பிரதேச சர்க்கார் தொழிலாளர் வீடு நிர்மாணத் திட்டம் ஒன்றைக் கைக் கொண்டார்கள். அத்திட்டத்துக்கு உதவியாக இந்திய சர்க்காரும் பெரும் தொகை மான்யம் அளித்தனர். அதன் பலனை இப்பொழுது தொழிலாளர்கள் வசிப்பதற்குற்ற பதினாயிரம் வீடுகள் நிர்மாணமாகி விட்டன. மேலும் மேலும் புதிதாக வீடுகள் கட்டிக் கொண்டே வருகிறார்கள், ஜன நெருக்கடி ஏற்படாமல் தவிர்ப்பதற்காக, ஒரு ஏக்கரில் அதிக பட்சம் 40 வீடுகளுக்கு மேல் நிர்மாணிப்பதில்லை.

அழுக்கும் அசுத்தமும் நிறைந்த அலங்கோலமான சேரிகளிலிருந்து ஏழை மக்களை வெளியேற்றி, நவீன வீடுகளில் கொண்டு போய்ச் சேர்க்கக் கான்பூர் அதிகாரிகள் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

"ஐயா ! இது நாங்கள் பரம்பரையாக வாழும் குடிசை. நீங்கள் எங்களைக் கண்ட துண்டமாக வெட்டினாலும் இங்கிருந்து கிளம்ப மாட்டோம்" என்று அடம் பிடித்தனர் சில தொழிலாளிகள்.

"இந்த இடத்தில் எங்கள் மாரியாத்தா இருக்கிறாள். ஆகையால் நாங்கள் எங்கள் ஆயுள் வரையில் இங்கேதான் இருப்போம்" என்று பிடிவாதம் செய்தனர் மற்றும் சிலர் !

"குளிர்ந்த இந்தக் குடிசையை விட்டுவிட்டு, கன்னாம்பு வீட்டுக்கு வரமாட்டோம்" என்று வேறு சிலர் சொல்லி விட்டார்கள் !

அவர்கள் எல்லோரையும் சமாதானப்படுத்தி அங்கிருந்து அவர்களை வெளியேற்ற அதிகாரிகள் படாதபாடு படவேண்டியிருந்தது.

ஓர் அதிகாரி, ஆவேசம் வந்தவர் போல் நடித்து, "இந்த இடத்தில் இருப்பவர்களை நான் பலி வாங்கப் போகிறேன். ஆகையால் எனக்கு விரோதமாகப் பலிகளைத் தடுக்கும் அதிகாரிகளை நாசம் செய்துவிடுவேன்...ஹாஹ்ஹா" என்று ஆர்ப்பாட்டம் செய்து சேரிவாசிகளின் மனத்தை மாற்றிய கதையை ஒருவர் வெகு உற்சாகத்துடன் விவரித்துக் கூறினார் !

* * *

கான்பூரில் ஏழைப் பாட்டாளிகளுக்காகக் கட்டப்பட்டுள்ள ஒவ்வொரு வீடும் சகல வசதிகளுடனும் திகழ்கின்றது. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பெரிய அறை, வராந்தா, சமையல் அறை, முற்றம், நவீன கக்கூஸ், ஸ்நான அறை, குழாய், மின்சார விளக்குகள் முதலியவை இருக்கின்றன.

இவற்றைத் தவிர ஆங்காங்கு ஆஸ்பத்திரிகள், கல்வி சாலைகள், விளையாடும் இடங்கள், நந்தவனங்கள், கோவில்கள், வாசகசாலைகள், சங்கீத மேடைகள், பிரசங்க மண்டபங்கள் முதலியன அமைத்திருக்கிறார்கள்.

பெண்களுக்குத் தையல் முதலிய வேலைகள் கற்றுக் கொடுக்கவும் தகுந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

மொத்தமாகக் கட்டுவதால் ஒற்றை மாடி வீடு ஒவ்வொன்றும் கட்டி முடிய ரூ. 2700 தான் செலவாகியிருக்கிறது.

76 அல்லது 80 ரூபாய் மாதச் சம்பளம் பெறும் தொழிலாளர்களுக்கு 7 அல்லது 8 ரூபாய் வாடகைக்கு மேற்படாமல் அவ் வீடுகள் கிடைக்கின்றன.

அத்தகைய வீடுகள் சென்னையில் இருக்கும் பட்சத்தில் மத்தியதர வகுப்பினர் அதற்கு ரூபாய் 40 வாடகை கொடுப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. எல்லா நவீன வசதிகளுடன் அவை தனி வீடுகளாக இருக்கின்றன அல்லவா!

இவற்றைத் தவிர ரூ. 7000 செலவில் மத்தியதர வகுப்பினர் வசிப்பதற்குற்ற பெரிய வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் மேற்படி வீடுகளை வருஷா வருஷம் சிறு தொகை கொடுத்து முப்பது வருஷங்களில் தங்கள் சொந்தத்துக்கு வாங்கி விடுவதற்கும் வசதி அளித்திருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டும் கான்பூர் தொழிலாளர்களுக்கு அடித்துள்ள அதிர்ஷ்டத்தைக் குறித்து வியந்து கொண்டும் நானும் என் சகாக்களும் அன்றே அங்கிருந்து ஹஸாரிபாக்கிற்குப் புறப்பட்டோம்.

பாரத நாடு சுதந்திரம் பெறும் வரையில், அடிக்கடி ஏராளமான உயிர்ப் பலிகள் வாங்கிக் கொண்டும், மக்களுக்குச் சொல்லொணாக் கஷ்ட நஷ்டங்களை விளைவித்துக் கொண்டும் வந்த சோக நதி, சுபிட்சத்தைக் கொடுத்து சந்தோஷ வாழ்வு அளிக்கும் ஜீவ நதியாக உரு மாறியுள்ள அதிசயத்தை பீஹாரில் கண்டேன். ஜனங்களுக்குப் பரம வைரியாக இருந்த அந்த ராக்ஷச நதியை, டி. வி. ஸி. என்ற மந்திரத்தின் சக்தியால் மக்களுக்கு வரன் கொடுத்து நலன் அளிக்கும் தேவநதியாக மாற்றி விட்டார்கள் நமது பொறி இயல் நிபுணர்கள்!

இந்த டி. வி. ஸி. அற்புதத்தைக் கண்ட போது எனக்கு அமெரிக்காவில் பொறி இயல் நிபுணர்களின் உலகப் பிரசித்தி பெற்ற சாதனை ஒன்று ஞாபகத்துக்கு வந்தது. அதுதான் டி. வி. ஏ. (Tennessee Valley Authority) என்பது.

அமெரிக்கர்கள் தாங்கள் சுதந்திரம் பெற்ற உற்சாகத்தில் கண் மூடித்தனமாகக் காடுகளை யெல்லாம் வெட்டத் தொடங்கினார்கள். விவசாயத்துக்கும் சுரங்கச் செல்வங்களைக் கண்டு பிடிப்பதற்கும் காடுகள் தடையாக இருப்பதாக அவர்களுக்குத் தோன்றியது. காடுகள் மனித வர்க்கத்துக்கு இயற்கை அளித்துள்ள பெரும் பாதுகாப்பு என்ற உண்மையை அவர்கள் உணரவில்லை.

காடுகளை அழித்ததால், காற்றும் மழையும் சேர்ந்து மண்ணை அடித்துக் கொண்டு போய் விட்டன. அதனால் பூமியின் செழுமை பூஜ்யமாகியது. ஆறுகளில் வெள்ளம் அதிகமாகும் போது, அதைத் தடுக்கக் காடுகள் இராததால், நிலைமை மேலும் மோசமாகியது. உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் மிகவும் அதிகமாயின. அமெரிக்காவைச் சேர்ந்த டென்னஸ்ஸி நதிப் பிரதேசத்தில் மேற்படி சேதம் மற்றவிடங்களைக் காட்டிலும் மிகவும் அதிகமாக இருந்தது. அந்தச் சேதத்தைத் தடுக்கவே டி. வி. ஏ. என்ற டென்னஸ்ஸி பள்ளத்தாக்கு நிர்வாக ஸ்தாபனம் ஏற்பட்டது.

வெள்ளத்தைத் தடுக்க அணைகள் கட்டுதல், கப்பல்கள் போக்குவரத்துக்கு வசதியாக ஆறுகளை ஆழமாகத் தோண்டுதல், தண்ணீரைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மின்சார சக்தியை உற்பத்தி செய்தல், இவைதான் டி. வி. ஏ. ஸ்தாபனத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

டென்னஸ்ஸி நதியைச்சேர்ந்த பலவிடங்களில் ஏராளமான அணைக்கட்டுகள் கட்டி, தண்ணீரைத் தேக்கி, டென்னஸ்ஸி நதியில் ஏற்படும் வெள்ளத்தால் ஆபத்து ஏற்படாமல் கட்டுப் படுத்தியிருக்கிறார்கள். இதைத் தவிர, வெள்ளத்தினாலும், காற்றினாலும் ஏற்படும் மணல் அரிப்பைத் தடுப்பதற்காகப் பதினைந்து கோடி செடிகளை நட்டிருக்கிறார்கள். அவை யாவும் மரங்களாக வளர்ந்து வருகின்றன!

அந்த அணைக்கட்டுகள் உலகத்திலேயே மகத்தான சாதனைகளில் ஒன்றாகத் திகழ்கின்றன. அவற்றால் 73,000 சதுர மைல்களில் வாழும் மக்கள் பயன் பெற்றிருப்பதுடன், வீடுகள், பண்ணைகள், பண்டகசாலைகள், சுரங்கங்கள், தொழிற்சாலைகள் முதலியவற்றிற்கும் மகத்தான வசதிகள் கிடைத்திருக்கின்றன.

தாமோதர் நதியின் வரலாறும் சற்றேறக் குறைய அவ்விதமேதான்!

* * *

பீஹார் ராஜ்யத்தில் உள்ள பலாமாவ் மலைப் பிராந்தியத்தில் உற்பத்தியாகும் தாமோதர் நதி பீஹாரையும் மேற்கு வங்காளத்தையும் கடந்து, கல்கத்தாவுக்கு அருகில் ஹூக்ளி நதியில் போய்ச் சேருகிறது. கோடைகாலத்தில் சிறிய ஓடையாகக் காட்சியளிக்கும் அந்த நதி மழைக் காலத்தில் விசுவரூபம் எடுத்து அடிக்கடி கிராமங்களையும் வயல்களையும் சூறையாடிச் சொல்லொணாக் கஷ்டநஷ்டங்களை உண்டாக்கி வந்தது. அதனால்தான் தாமோதர் நதிக்குச் 'சோக நதி' என்ற பெயர் உண்டாயிற்று. சென்ற பல நூற்றாண்டுகளாக அதன் ஆர்ப்பாட்டத்துக்கு மக்கள் பலியாகி வந்தும் கூட, அத்தகைய அலங்கோல நிலைக்குப் பரிகாரம் என்ன என்பது பற்றி அதிகாரிகள் சிந்திக்கவில்லை.

குறிப்பாக, 1943-ம் வருஷம் தாமோதர் நதி உடைத்துக் கொண்டதால், பல கிராமங்களும் ரஸ்தாக்களும் பாலங்களும் ரயில் பாதைகளும் அழிந்தன. அந்தக் கோர வெள்ளத்தால் கல்கத்தா நகருக்குக் கூட ஆபத்து ஏற்படும் போல் இருந்தது. அதன் பிறகுதான் தாமோதர் நதியைக் கட்டுப்படுத்த ஏதாவது செய்து தீர வேண்டுமென்று அதிகாரிகளும் மக்களும் உறுதி கொண்டனர்.

அதன் பலனாகவே டி. வி. ஸி. என்ற தாமோதரப் பள்ளத்தாக்கு கார்ப்பொரேஷன் (Damodar Valley Corporation) ஏற்பட்டது. மக்களைப் பலி கொண்டு வந்த இயற்கையின் சக்தியை மனிதருக்குத் தொண்டு புரியும் சக்தியாக மாற்றிய பெருமை டி. வி. ஸி.க்கே உரியது. தென் கிழக்கு ஆசியாவிலேயே பெரிய அணைக்கட்டுகளும் மின்சார உற்பத்தி நிலையங்களும் அடங்கியதே டி. வி. ஸி. ஆகும். மேற்படி அணைக்கட்டுகள் ஒன்றுக்கொன்று பல மைல்கள் தூரத்தில் பரவி இருக்கின்றன.

பாரதநாடு சுதந்திரம் பெற்றபின் 1948-ல் தான் டி. வி. ஸி. ஸ்தாபிக்கப்பட்டது:

1. நாசகரமான வெள்ளத்தைக் கட்டுப் படுத்துவது; 2. விவசாயத்துக்கு இன்றியமையாத நீர்ப்பாசனம்; 3. மலிவாக மின்சார சக்தி உற்பத்தி செய்வது; 4. வருஷம் முழுதும் தோணிகள் போக்குவரத்துக்கு வசதி செய்தல்; 5. காடுகளை அபிவிருத்தி செய்வதுடன், நில அரிப்பைத் தடுத்தல். — இவைதான் தாமோதர் திட்டத்தின் நோக்கமாகும்.

96 கோடி ரூபாய் செலவில் நிர்மாணமாகியுள்ள டி. வி. ஸி. அணைக்கட்டுகளின் பலனாக வருஷந்தோறும் 21 கோடி ரூபாய் பெறுமானமுள்ள உணவுப் பொருள்களும், 3½ கோடி ரூபாய் பெறுமானமுள்ள சணலும், 4 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட மின்சார சக்தியும் உற்பத்தியாகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

டி. வி. ஸி. திட்டத்தால் பதினாயிரம் சதுர மைல்களில் வாழும் ஐம்பது லட்சம் ஜனங்கள் பலனடையப் போகிறார்கள் எனில், அத் திட்டத்தின் சிறப்பைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. (தொடரும்)

ஆசிரமத் தலைவி

ஜயலக்ஷ்மி

"வா, அம்மா! இப்படி வந்து உட்கார். உன் பெயர் என்னவென்று சொன்னாய்!"

"கனகா!"

"உன் வீட்டை விட்டுக் கிளம்பி நேரே இங்குதான் வந்திருக்கிறாயா!"

"ஆமாம்."

"எதற்காக நீ உன் வீட்டை விட்டுக் கிளம்பினாய்!"

"......"மௌனம்.

"சொல்லு, கனகா! என்னிடம் சொல்வதில் தவறென்ன!" இனிமை பொருந்திய குரலில் ஆதரவோடு கேட்டாள் 'கஸ்தூரிபா அனாதை' விடுதியின் தலைவியான மரகதத்தம்மாள்.

"ஹ்ம்..." என்று ஆழ்ந்த ஏக்கத்தின் எதிரொலியைப் போல் நீண்ட பெருமூச்சு விட்டாள் கனகா.

"உனக்கு இன்னும் மணமாகவில்லை போல் இருக்கிறதே!"

அவள் சங்கோசத்தைப் போக்க முயற்சித்தாள் மரகதத்தம்மாள்.

"ஆமாம். அதனால் ஏற்பட்ட விரக்திதான் என்னை இப்படி வீட்டை விட்டுப் புறப்படச் செய்து விட்டது!" என்றாள் கனகா மிகவும் கம்மிய குரலில்.

"மணமாகத் தாமதமானால் வீட்டை விட்டு வெளிக் கிளம்பி விடுவதா!" என்று வியப்புடன் கேட்டாள் விடுதியின் தலைவி.

"விவரமாகச் சொன்னால்தான் உங்களுக்குப் புரியும்..."என்று கூற ஆரம்பித்தாள் கனகா.

"என் தகப்பனார் சப்-ரிஜிஸ்திரார் ஆபிஸில் குமாஸ்தாவாகப் பணி புரிபவர். வறுமை தான் எங்களுடைய குடும்பத்தின் பூர்வீகம். நாங்கள் ஏழு குழந்தைகள். முதலில் பிறந்த நால்வரும் பெண்கள். கடைசியில் பிறந்த மூவரும் ஆண் குழந்தைகள். அவர்கள் எல்லோரிலும் நானே மூத்த பெண்.

என் தங்கைகள் மூவரும் பார்க்க லட்சணமாக என் தாயாரைப் போல் இருந்தார்கள். நான் மட்டும் இப்படி என் தகப்பனாரைக் கொண்டு பிறந்து விட்டேன்.

என் பெற்றோர்கள் எனக்காக எடுத்துக் கொண்ட சிரமத்துக்கும் கவலைக்கும் ஓர் அளவே கிடையாது. இரண்டாந்தார வரன் களைக் கூடப் பார்த்துவிட்டார் என் தந்தை. அவர்களில் சிலர் என்னை விடுத்து என் தங்கைகளைக் கொடுக்கும்படி கேட்டார்கள். இதற்குப் பிறகுதான் என் மனம் ரொம்பவும் உடைந்து விட்டது. இரண்டாந்தாரக் கிழவர்கள் கூட ஏற்க மறுக்கும்படி என்னைப் படைத்து விட்ட ஆண்டவனை நிந்தித்தேன். என்னால் என் பெற்றோர்கள் படும் அவஸ்தையைக் காண என் மனம் பொறுக்கவில்லை. கடைசியில் வேறு வழியொன்றும் தோன்றாததால் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டேன்.

உங்களுடைய விடுதியைப் பற்றிக் கேள்விப் பட்டேன். ஆதரவு தேடி வந்து விட்டேன் உங்களிடம். என் பெயரை மாற்றி வைத்துக் கொண்டு விடுகிறேன். இங்கே எனக்கு எந்த வேலை கொடுத்தாலும் செய்யச் சித்தமாக இருக்கிறேன்" என்றாள் கனகா. அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.

"உன் பெற்றோர்களுக்கும் சகோதரிகளுக்கும் நன்மை செய்வதாகக் கருதி நீ வீட்டைவிட்டுப் புறப்பட்டு விட்டாய். ஆனால் இதனால் அவர்களுக்கு உண்மையில் நன்மை ஏற்படுமா! இதைப்பற்றிச் சிந்திக்கத் தவறி விட்டாயே!" என்றாள் மரகதத்தம்மாள் அனுதாபத்தோடு.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்! எனக்குப் புரியவில்லையே!" என்றாள் கனகா.

"புரியாதுதான். எனக்குப் புரிந்ததா முதலில்............எனக்குக் கொஞ்சம் வெளியே போகவேண்டியிருக்கிறது. வருவதற்குக் குறைந்தது ஒரு மணி நேரம் ஆகும். அது வரை இதைப் படித்துக் கொண்டிரு!" என்று கூறி ஒரு கவரைக் கனகாவிடம் கொடுத்தாள் மரகதத்தம்மாள்.

கனகாவின் உள்ளம் குழம்பித் தவித்தது. ஒன்றைப் படித்துப் பார்க்கும் நிலையிலா அவள் அப்பொழுது இருந்தாள்......! இருந்தாலும் ஒரு மணி நேரத்தைப் போக்கியாக வேண்டுமே! படித்தால் தலைவி சொன்னதைக் கேட்டு நடந்ததாக இருக்கும் அல்லவா! இப்படிப்பட்ட மன நிலையோடுதான் கனகா அந்தக் கையெழுத்துப் பிரதியைப் படிக்க ஆரம்பித்தாள்.

* * *

"கலியாணம் நடந்து விட்ட பிறகுதான் விஷயம் தெரிந்தது. இனிமேல் என்ன செய்ய முடியும்...! நான், ஆணாக இருந்தால் பெண் மீது குற்றம் சாட்டி அவளை வாழாவெட்டியாக ஒதுக்கித் தள்ளி விட்டு, வேறொரு பெண்ணை மணந்து வாழலாம். நான் ஆணாகப் பிறக்கவில்லையே! பெண்ணாகவன்றோ பிறந்து விட்டேன்! அதுவும் பாரத தேசத்தில், தமிழ்க் குலத்தில், நான் எப்படி அவரை நிராகரிக்க முடியும்! அவ்வளவு துணிவு எனக்கு ஏது! அடித்தாலும், அணைத்தாலும், அன்பு காட்டினாலும், துன்பப்படுத்தினாலும் கணவன்தானே கண் கண்ட தெய்வம்!

என் கணவரின் உடல் எனக்குச் சொந்தம். ஆனால் உள்ளம்! அது வேறொருத்தியின் தனியரசு. அவள் பெயர் ஞானகியாம். நல்ல அழகி என்றே சொல்லிக் கொண்டார்கள், ஊரில் உள்ளவர்கள்.

நாங்கள் இருந்த அதே ஊரில், அதே தெருவில்தான் அவளும் தன் தாயாருடன் தனி வாசம் செய்து கொண்டிருந்தாள். வயதில் என்னைவிடப் பெரியவள்தான். ஆனால் கலியாணம் ஆகவில்லை. சிறுவயது முதலாகவே இவருக்கும் அவளுக்கும் நெருங்கிய நேசம் உண்டாம். இவர் அவளைத்தான் மணந்து கொள்வேன் என்றாராம். இவருடைய தகப்பனார் அதற்கு இஷ்டப்படவில்லையாம்.



யாரோ ஒரு பணக்காரர் வீட்டில் சமையல் வேலை செய்து கொண்டிருந்தவளின் பெண்ணைத் தம் பிள்ளையின் மனைவியாக ஏற்றுக் கொள்ள அவர் கொஞ்சமும் விரும்பாமற் போகவே, இவருடைய மனைவியாக ஆகும் பாக்கியம் எனக்கே கிடைத்தது.

கலியாணத்தின்போது நான் அனுபவித்த ஆனந்தமும் பெருமிதமும் வேறு எந்தப் பெண்ணுமே அனுபவித்திருக்க மாட்டார்கள். ஏனென்றால் அவர் அவ்வளவு அழகாக இருந்தார். நான் மட்டற்ற மகிழ்ச்சியில் ஊறித் திளைத்தேன். 'அவர் உள்ளத்து மாளிகையில் வாழ்பவள் நான் அல்ல; வேறொரு பெண்!' என்கிற விஷயம் கலியாண தினத்தன்று மாலையே தெரிந்து விட்டது. அந்த க்ஷணம் முதல் உள்ளம் குமுறத் தொடங்கிவிட்டது. ஆனால் என்ன பயன்......!

கலியாணம் நடந்து ஏழுவருஷங்கள் சென்று விட்டன. என் மாமனார் இந்த உலகத்தை விட்டுச் சென்று நான்கு ஆண்டுகளாயின. இன்று என் கையில் மூன்று வயதுள்ள ஒரு பெண் குழந்தை இருந்தது. பார்க்கிறவர் கண்களுக்கு அழகாகவும், பாங்காகவும் குடும்பம் நடத்துகிற தம்பதிகள்தான் நாங்கள். அதற்கு அத்தாட்சி இதோ என் மகள் மாலா. அவர் என் கணவர். நான் அவருடைய மனைவி. உலகம் அப்படித்தான் சொல்லுகிறது. 'நாங்களும் அதை மெய்யாக்கிக் காட்டிக் கொண்டிருந்தோம், ஒரே வீட்டில் வசிப்பதன் மூலம்.

அவராக எதுவும் பேசமாட்டார், நானாகப் பேசினாலும் சரியாகப் பதில் சொல்லமாட்டார். நான் பேச ஆரம்பித்தால் அவரை உடனே வாசல் திண்ணையில்தான் காணலாம். இல்லாவிட்டால் விடு விடு வென்று 'அவள்' வீட்டுக்குப் போய் விடுவார். வீட்டிலேயாகிலும் இருக்கட்டுமே என்பதற்காக நான் அவருடன் பேச முயலுவதில்லை.

பேசும் பொற் சித்திரமாகக் குழந்தை மாலா வீட்டில் வளைய வளைய வருகிறாளே, அவளை ஒரு நாள், ஒரு தடவையாகிலும் எடுத்துக் கொஞ்சி இருப்பாரா! பேசி மகிழ்ந்திருப்பாரா! கிடையாது. கிடையவே கிடையாது.

எவ்வளவு நாட்கள்தான் இப்படி உப்புச் சப்பற்ற வாழ்க்கை நடத்துவது! வாழ்க்கை கசந்து விட்டது; வீடு நெருஞ்சில் காடாகி விட்டது. அது இன்பம் கொழிக்கும் இல்லறச் சோலையாக மாற வேண்டும் என்றால் அதற்கு வழி...! ஒன்று அவள் இங்கே வந்து அவருடன் வாழ வேண்டும். அல்லது அவள் இவரை மறந்து எங்கேனும் சென்றுவிட வேண்டும். இரண்டிலொன்று நடக்க வேண்டும். அப்படி நடைபெற வேண்டுமானால் நான் ஞானகியை ஒரு முறை பார்க்க வேண்டும். இந்த முடிவுக்கு நான் சுலபத்தில் வந்து விடவில்லை. உள்ளத்தினுள் ஆயிரமாயிரம் போராட்டங்கள் நிகழ்ந்தபின்னரேதான் வந்தேன்.

அன்று மாலை, காரியாலயத்திலிருந்து வந்ததும் வராததுமாக 'அவர் ஞானகியின் வீட்டை நோக்கிப் பறக்கப் பறக்கச் சென்றதைப் பார்த்தேன். நான் முதலில் அவள் வீட்டில் இவர் இல்லாத சமயம் போவது என்று தீர்மானித்திருந்தேன். ஆனால் இப்பொழுது திடீரென்று என் தீர்மானத்தை மாற்றிக்கொண்டு, அவரைப் பின் தொடர்ந்து சென்றேன்.

நாங்கள் இப்படிச் சென்றநேரம்,கைபொழுத்து மறையும் நேரம். நல்ல வேளையாக என்னை யாரும் கவனிக்கவில்லை.

அவள் வீடு வந்ததும் அவர் விடுவிடுவென்று வீட்டினுள் நுழைந்து விட்டார். நான் சற்றுப் பின் தங்கி இடைகழியின் கதவிடுக்கில் மறைந்து கொண்டேன். தாழ்ப்பாளின் இடைவெளி வழியாக அங்கே கூடத்திலுள்ளவர்களை நன்றாகப் பார்க்க முடிந்தது. பேசுவதையும் கேட்க முடிந்தது.

இவர் கூடத்திலிருந்தபடியே, "ஞானகி!" என்று குரல் கொடுத்தார்.



"வந்து விட்டேன்" என்று இனிமையான குரலை யடுத்து ஜானகி வெளியே வந்தாள். அவளை நன்றாகக் கவனித்துப் பார்த்தேன் நான். வண்டினம் மூசாத புத்தம் புது மலரைப் போல் காட்சியளித்தாள் அவள். வயதில் அவள் என்னை விட மூத்தவளாக இருந்தும், பார்வைக்கு என்னைவிட மிகவும் இளமையாகக் காணப்பட்டாள்.

"காரியாலயத்திலிருந்து நேரே இங்கேயே வந்து விட்டீர்களா! வீட்டுக்குப் போக வில்லையா!" என்று அவள் கேட்டாள்.

"அவ்வளவுக்கு எனக்குத் துணிவு ஏது, ஜானகி! வீட்டுக்குப் போய் விட்டுத்தான் வருகிறேன்!" என்றார் அவர்.

"என்ன அவசரமோ, இங்கே ஓடி வர!"

"மத்தியானம் நீ கொடுத்ததாக ராமு ஐம்பது ரூபாய் கொண்டுவந்து கொடுத்தானே, 'ஏது உன்னிடம் இப்போது பணம்!' என்று கேட்டு விட்டுப் போகத்தான் வந்தேன்!"

"ஏதாக இருந்தால் உங்களுக்கு என்ன! உங்களுக்கு இப்பொழுது பணம் தேவையாயிருக்கிறது. என்னிடம் இருந்தது. கொடுத்தனுப்பினேன். இதில்..."

"அது சரி, இப்போது உனக்குப் பணம் எப்படிக் கிடைத்தது!"

இதைக் கேட்ட என் கணவர் அவளைக் காலோடு தலைவரை உற்றுப் பார்த்தார்.

அவள் சிரித்தாள்.

"ஜானகி! என்ன காரியம் செய்தாய்!" என்று பதற்றத்துடன் கேட்டவர் பாய்ந்து அவள் கையைப் பற்றினார். அவள் சடக்கென்று இவர் கையை உதறி விட்டுத் தன் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள்.

"கொடுத்த வாக்கை மீறவும் நீங்கள் துணிந்து விட்டீர்களா!"

ஆத்திரத்துடன் கேட்டாள் ஜானகி.

"மன்னித்து விடு, ஜானகி! ஏதோ உணர்ச்சி வேகத்தில்..." என்று இவர் ஏதோ செய்யக் கூடாததைச் செய்து விட்ட பதற்றத்துடன் கூறினார்.

"எனக்குத் தெரியுமே! இந்த உணர்ச்சி வேகம் என்றைக்கு நம் உறுதியைக் குலைக்கக் காத்திருக்கிறதோ! இதற்காகத் தான் உங்களை இங்கே வருவதை நிறுத்திக் கொள்ளுங்கள் என்கிறேன்!" என்றாள் ஜானகி பதை பதைக்கும் குரலில்.

"இந்த ஒரு தடவை என்னை மன்னித்து விடு, ஜானகி! இனி இத்தகைய தவறுகளுக்கு இடம் வைத்துக் கொள்ள மாட்டேன்!"

"சரி, நீங்கள் வீட்டுக்குப் போய்வாருங்கள்!" என்று கூறினாள் ஜானகி.

"போகிறேன், ஜானகி! இனிமேல் நீ இது போல் உன் உடம்பில் அணிந்துள்ள நகைகளை விற்று எனக்குப் பணம் கொடுத்தனுப்பக் கூடாது. தெரிந்ததா! பவுன் வளையை விற்று விட்டுக் கண்ணாடி வளையல்களை வாங்கி அடுக்கிக் கொண்டிருக்கிறாயே!" என்று வேதனை கலந்த குரலில் கேட்டார் இவர்.

"எனக்குப் பணம் வேண்டியிருந்தது; விற்றேன். அதில் உங்களுக்கும் கொஞ்சம் தேவையாக இருக்கிறதே என்று கொடுத்தனுப்பினேன்."

"சரி, நான் வருகிறேன்..." என்று கூறிவிட்டு இவர் திரும்பி விட்டார். நான் கதவோடு கதவாக ஒட்டிக் கொண்டேன். அவர் வாசற்படியிறங்கிப் போய் விட்டார். எனக்கு அவர்கள் இருவரும் பேசியதைக் கேட்டதும் ஏற்பட்ட ஆச்சரியம் சொல்லி முடியாது. ஊரார் இவர்களைப் பற்றி ஏதேதோ பேசக் கூடாததெல்லாம் பேசுகிறார்கள். நான்கூடத் தான் எவ்வளவோ பேசியும் நிந்தித்தும் இருக்கிறேன். ஆனால் அவ்வளவுக்கும் காரணமான இவர்கள் உறவோ! என்னால் ஜானகியை ஒரு மானிடப் பெண்ணாகவே நினைக்க முடியவில்லை. அவளைப் பற்றி இவ்வளவு காலமாக எண்ணிய துர் எண்ணங்களுக்காக அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் ஒழிய எனக்குச் சாந்தி கிடையாது.

கதவின் மறைவிலிருந்துவிடுபட்டு, "ஜானகி" என்று அழைத்துக் கொண்டே வீட்டின் உட்புறத்துக்கு ஓடினேன்.

"யாரது!" என்று கேட்டவண்ணம் ஜானகி வெளியே வந்தாள். என்னைக் கண்டதும் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. விழிகள் வியப்பினால் விரிந்தன. "நீ...நீ...அவருடைய மனைவி......... மங்களம் இல்லையா!"

ஜானகிக்கு வாய் குழறியது.

"ஜானகி! என் இன்ப வாழ்வைப் பறித்துக் கொண்டவள் என்று உன்னைத் தவறாகக் கருதி உன்னுடன் வாதாட வந்தேன். ஆனால் நான் இங்கே கண்ட உண்மை என்னைத் திடுக்கிட வைத்து விட்டது. நீ செய்து வரும் தியாகம் என்னை வியப்பில் ஆழ்த்துகிறது. உன்னைத் தவறாக எண்ணி விட்டதற்காக ரொம்பவும் வருத்தப்படுகிறேன். ஜானகி! போனதெல்லாம் போகட்டும். இனி நீ இங்கே தனி வாசம் செய்ய வேண்டாம். எங்களுடன் எங்கள் வீட்டுக்கே வந்து விடு. நான் அவருக்கு உரிமை அளிக்கிறேன். அவர் உன்னை மணந்து கொள்ளட்டும். இருவரும் உடன்பிறந்த சகோதரிகளைப் போல் வாழ்வோம். வா, ஜானகி!" என்று அவள் கையைப் பற்றி இழுத்தேன் நான்.

"மங்களம்! உன் உயர்ந்த உள்ளத்தைப் போற்றுகிறேன். ஆனால் நான் இனிமேல் அவருடைய மனைவியாவதை விரும்பவில்லை. அந்த ஸ்தானம் உனக்கே இருக்கட்டும். எனக்குத் தேவையில்லை. கலியாணத்துக்காக நான் ஆசைப்பட்ட காலமும்உண்டு. அதைத் தடுத்து விட்டார்கள் அவருடைய பெற்றோர்கள். அதற்காக நான் வருந்தவில்லை. கலியாணம் என்கிற பந்தத்தினால்தான் காதலை வளர்க்க முடியும் என்று நான் எண்ணவில்லை. அவர் வாழ வேண்டும் என்பதற்காகவே, உன்னை மணந்து கொள்ளும்படி, நான் அவரை வேண்டிக் கொண்டேன். முதலில் அவர் மறுத்தார். 'உன்னை மறந்து என்னால் வாழ முடியாது' என்றார். 'என்னை யார் மறக்கச் சொன்னார்கள்! இந்த உள்ளத்தில் ஒரே ஒருவருக்குத் தான் இடம் உண்டு. அது உங்களுக்குத்தான். ஆனால் ஒரு நிபந்தனை!' என்றேன்.

'என்ன!' என்று கேட்டார் அவர். 'என்னைத் தாங்கள் என்ன காரணத்துக்காகவும் தீண்டக் கூடாது' என்றேன்.

இருவரும் அன்னையின் திருவுருவப் படத்தின் முன்பு நின்று பிரமாணம் எடுத்துக் கொண்டோம், 'எக்காரணம் பற்றியும் ஒருவரை யொருவர் தீண்டுவதில்லை' என்று.



''எங்கே சார்! அண்டா நிறைய ஜலத்தை எடுத்துண்டு கிளம்பி விட்டீர்கள்?''
''மதுரைக்குப் போய் நாலு நாள் இருக்க வேண்டி இருக்கு. அங்கே ஒரே தண்ணீர்ப் பஞ்சமாமே!''

மங்களம்! அந்த நிமிஷம் முதல் இந்த நிமிஷம் வரையில் அவர் என்னைத் தீண்டியவரில்லை. இன்றுதான்......'' ஜானகியால் மேலே பேச முடியவில்லை. உணர்ச்சி மிகுதியால் அவள் குரல் தழுதழுத்தது.

* * *

அன்று இரவு முழுவதும் எனக்கு உறக்கமே வரவில்லை. நான் ஜானகியின் வீட்டுக்குப் போகும்போது எந்த எண்ணத்துடன் போனேன்! திரும்பி எந்த எண்ணத்துடன் வந்தேன்! இதில் உள்ள விசித்திரத்தை என்னால் சிந்தித்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. ஜானகியின் ஒப்பற்ற குணத்தைக் கண்டு என்னால் ஆச்சரியப்படாமலிருக்க முடியவில்லை. நான்தான் மணமான காலம் முதல் இந்த ஏழு வருஷங்களாக ஏதோ பெரிய தியாகம் செய்து வருவதாக எண்ணியிருந்தேன். உள்ளபடி இதிலே தியாகம் செய்து வருபவள் யார்! ஜானகியல்லவா! இன்று நான் வாழும் வாழ்வு அவளுடைய தல்லவா! இவர்கள் ஒன்றுபட்டு வாழ முடியாமற் போனது யாரால்! என்னால்தானே! இவர்களின் நடுவில் குறுக்கிட்டு இவர்களை வாழ விடாமல் தடுத்துவிட்ட பாவத்துக்குப் பிராயச்சித்தமாக...பிராயச்சித்தமாக...நான்...நான்... என்ன செய்யலாம்...!

வெகு நேரம் யோசித்த பிறகு ஒரு முடிவுக்கு வந்தேன், ஆம். நான் வீட்டை விட்டு வெளியேறி விட வேண்டும் என்று. இப்படி எண்ணியவள் 'உங்களுடன் போலி வாழ்வு வாழ எனக்கு விருப்பமில்லை. நான் போகிறேன்' என்று இரண்டு வரிகள் எழுதி வைத்து விட்டுக் கிளம்பி விட்டேன்.

வீட்டை விட்டுக் கிளம்பி நான் எங்கேயும் சென்று அலையவில்லை. நேராக ஒரு அநாதை விடுதியைச் சரணடைந்தேன். அங்கே அந்த விடுதியில் எனக்கு ஒரு சிறு வேலை கிடைத்தது. என் இருப்பிடம் யாருக்கும் தெரியாமல் இருப்பதற்காக என் பெயரையும் மாற்றி வைத்துக் கொண்டேன்.

பதினைந்து ஆண்டுகள் பஞ்சாகப் பறந்தன. இப்பொழுது நான் அந்த அனாதை ஆசிரமத்தின் தலைவி. என் சேவை என்னை இவ்வளவு தூரம் உயர்த்தி விட்டது.

இந்தச் சமயத்தில்தான் ஒரு நாள் ஒரு இளம் பெண் என்னைப் பார்க்க வந்தாள். வயது பதினெட்டு இருக்கும். பார்க்க மிகவும் லட்சணமாக இருந்தாள்.

ஆதரவு வேண்டி எங்கள் விடுதிக்கு வந்திருந்தாள். என் கடமையின் பிரகாரம் நான் அவளுடைய பூர்வோத்திரங்களை விசாரித்தேன். அவள் கணவன் அவளை வேண்டாமென்று நிராகரித்து விட்டதாகச் சொன்னாள் அந்தப் பெண். காரணம் அவளுடைய தாயார் ஓடிப்போனவளாம். ஓடிப் போனவளின் பெண்ணுடன் வாழ அவன் விரும்பவில்லையாம். 'பெற்றோர்களற்ற அனாதை நான். தாங்கள் தான் என்னை ஆதரிக்க வேண்டும்' என்றாள், அந்த இளம் பெண் கண்ணீர் மல்க.

நான் குடும்பத்தைப் பற்றி விசாரித்தேன். அவள் கூறியதைக் கேட்டதும் நான் ஆச்சரியத்தினால் வாயடைத்துப் போய் உட்கார்ந்து விட்டேன். அந்தப்பெண் வேறு யாருமல்ல; என் கண்மணி மாலாவேதான்.

நான் வீட்டை விட்டுக் கிளம்பியதும் என் குழந்தை மாலாவையும், நான் எழுதி வைத்திருந்த துண்டுக் கடிதத்தையும் எடுத்துக் கொண்டு நான் நினைத்தபடியே என் கணவர் ஜானகியிடம் தான் போனாராம். கடிதத்தை அவளிடம் காட்டி 'மங்களம் இப்படிப் பட்டவளா!' என்று உள்ளம் குமுறினார்.

அதற்கு ஜானகி, 'அவளைப் பற்றித் தவறாக எண்ணுகிறீர்கள். அவள் உங்களைப் பிடிக்காமல் ஓடவில்லை. எனக்கு வாழ்வளிப்பதற்காகத் தான் வீட்டை விட்டு வெளியேறி விட்டாள்!' என்று ஆரம்பித்து முதல் நாள் அவளிடம் நான் போயிருந்ததையும் பேசியதையும் சொன்னாளாம். அதைக் கேட்டு விட்டு என் கணவர் ரொம்பவும் ஆச்சரியமடைந்தாராம்.

அவர்கள் இருவருக்கும் மட்டும் நான் மாசற்றவள் என்று தெரிந்தால் போதுமா! ஊராரின் ஏளனப் பேச்சினால் மிக்க அவமானமடைந்த என் கணவர் நாளடைவில் மன வெறுப்பு அதிகரிக்கவே படுத்த படுக்கையாகி விட்டார். என்ன முயன்றும் ஜானகியால் அவரை யமன் வாயிலிருந்து மீட்க முடியவில்லை. அவர் இறந்த பிறகு குழந்தை மாலாவுடன் ஜானகி அந்த ஊரில் வசிக்க விரும்பாமல் அந்த ஊரை விட்டுக் கிளம்பி விட்டாள்.

சொல்லமுடியாத கஷ்டங்களுக்கெல்லாம் தன்னை உட்படுத்திக் கொண்டு மாலாவை வளர்த்து ஆளாக்கியிருக்கிறாள். கடைசி வரை

எண்ணெய்களில் மிகச் சிறந்தது



கார் உற்பத்தியாளர்கள் **காஸ்ட்ரால்** எண்ணெயை சிபார்சு செய்யும்பொழுது — ஏன் உலகெங்கிலுமுள்ள மோட்டார் ஓட்டுபவர்களில் பெரும்பாலோர் **காஸ்ட்ராலை** நம்பும்பொழுது — உங்களது இஞ்ஜினுக்கும் காஸ்ட்ரால் பாதுகாப்பு அளிக்கவேண்டிய நேரம் இது இல்லையா?

காஸ்ட்ரால் எண்ணெயில் உள்ள பிரத்யேக பேடண்ட் அடிட்டிவ்கள் அதை எண்ணெய்களிலே மிகச் சிறந்ததாகச் செய்கிறது.


CASTROL

காஸ்ட்ரால்

ஸி. ஸி. வேக்பீல்ட் & கம்பெனி, லிமிடெட்

இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது

Q-42



கிழக்கிந்திய ரயில்வே ஜெனரல் மானேஜர் ஸ்ரீ எஸ். சாரங்கபாணி அவர்கள் குமாரன் ஸ்ரீ ஜெகந்நாதன் I. R. A. S க்கும் ஒரிஸ்ஸா ஹைகோர்ட் சீப் ஜஸ்டிஸ் ஸ்ரீ ஆர். எல். நரசிம்ஹன் I. C. S அவர்கள் குமாரி சௌ மைதிலிக்கும் திருமணம் சிறப்பாக நடை பெற்றது.

வாழ்க மணமக்கள் !

யில் மாலாவுக்குத் தான் அவளுடைய வளர்ப்புத் தாய் என்பதைத் தெரிவிக்கவில்லை. மாலாவுக்கு வயது வந்ததும் அவளை ஒருவனுக்கு மணம் செய்து கொடுத்தாள். மணமான மறு வாரமே மாலாவை அழைத்துச் செல்வதாகக் கணவனிடமிருந்து வெகு நாட்களுக்குப் பிறகு ஒரு கடிதம் வந்தது. அதில் 'இப்பொழுது தான் நான் கேள்விப் பட்டேன். ஜானகியம்மாள் உன் சொந்தத் தாயார் அல்லவாமே! வளர்ப்புத் தாயாராமே! உன் தாயார் நீ சிறு வயதாக இருந்த போதே வீட்டை விட்டு ஓடிப்போய் விட்டாளாமே! இது உண்மை தானா? உண்மை யென்றால் ஓடிப் போனவளின் பெண்ணான உன்னை நான் ஏற்றுக் கொள்ள இயலாது' என்று எழுதியிருந்தது. மாலா 'ஓ' வென்று கதறினாள். இந்த அதிர்ச்சி தாங்காத ஜானகி வெகு சுலபத்தில் இந்த உலகத்தை விட்டு மறைந்து விட்டாள்.

சிறகொடிந்த பட்சியானாள் மாலா. அநாதையான அவளுக்கு இரண்டு சத்துருக்கள். ஒன்று அவள் அழகு; இன்னொன்று அவள் இளமை. இந்த நிலையில் இன்றைய உலகில் அவள் தனித்து வாழ்வதெப்படி? இந்த அநாதை விடுதியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாள். ஆதரவைத் தேடி வந்து விட்டாள்.

இப்பொழுது சொல்லுங்கள். இந்த நிலை அவளுக்கு ஏற்பட்டது என்னால்தானே! நான் செய்த தியாகம் எத்தகைய விபரீதங்களை விளைவித்து விட்டது! என் கணவர் தம் மனத்துக்குப் பிடித்தமானவளை மணந்து சுகப்படுவார் என்று நம்பினேன். ஆனால் அவர் சுகமாக வாழ்ந்தாரா? நானே அவருக்கு யமனாக மாறி விட்டேன். 'உன் மனைவி ஓடிப் போய் விட்டாள்' என்ற அவமானச் சொல்லை எந்த ஆண் மகனால்தான் தாங்கிக் கொள்ள முடியும்! தாங்க முடியவில்லை, அவர் போய் விட்டார்.

இன்று என் உயிரின் உயிர், உதிரத்தின் உதிரம், புத்தம் புது மலர் மாலா வாழ்விழந்து அநாதையாக நிற்கிறாள். இதற்குப் பொறுப்பாளி யார்......? நான்! என் செய்கை! நான் தியாகம் செய்வதாக எண்ணிச் செய்த குடும்பத் துரோகம். என்னால் என் குடும்பமே பாழாகியது. தியாகம்! அது பெண்களுக்குப் புரியாத ஒரு புதிர். பெண்களின் தியாகத்துக்கு ஒரு வரம்பு. ஒரு எல்லை, ஒரு நியதி இருக்கிறது. 'இதைத்தான் செய்யலாம், இதைச் செய்யக் கூடாது' என்கிற கட்டுப்பாடுகள் நிறைய இருக்கின்றன. இவற்றை மீறிப் பெண்கள் தியாகம் செய்ய முற்பட்டால், ஆணுடன் போட்டியிட முற்பட்டால் அதன் பலன் விபரீதம்தான்......

பிறகுதான், என்னுடைய கதையை ஆதியோடந்தமாகப் பலகாகிதங்களில் வடித்தேன். அதில் நான் ஓடிப்போனது எதற்காக என்பதை உள்ளத்தை உருக்குகிற விதத்தில் விஸ்தரித்தேன். அதை அப்படியே மாலாவின் கணவனுக்கு அனுப்பி வைத்தேன்.

"உண்மை இது! மாலாவின் தாய் நானே. என் கடந்ததைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பினால் இந்த விடுதியில் வந்து விசாரித்துப் பார்த்துக் கொள்ளலாம்" என்று அதில் குறிப்பிட்டிருந்தேன்.

என் செய்கை நற்பலனையே கொடுத்தது. மாலாவைத் தன்னுடன் அழைத்துச் சென்றான். என் கவலை தீர்ந்தது அத்துடன்.

பெண்கள் தங்களுக்கு என்ன கஷ்டம் வந்தாலும் அவற்றை அவர்கள் அவர்களுடைய இருப்பிடத்தில் இருந்தபடியே எதிர்த்துப் போராடி, வெற்றி பெற வேண்டுமே தவிர எந்தக் காரணத்துக்காகவும் அவர்கள் வீட்டை விட்டுக் கிளம்பக் கூடாது. தியாகத்தை விடப் பெண்களுக்குப் பொறுமைதான் பூஷணம்."

• • •

இந்த நீண்ட சிறுகதையைப் படித்து முடித்து விட்டு, அதை மடித்துக் கவருக்குள் போட்டுவிட்டுத் தலையை நிமிர்த்தினாள் கனகா.

எதிரே புன்னகை பூத்த முகத்துடன் உட்கார்ந்திருந்தாள் மரகதத்தம்மாள்.


"நீங்கள் வந்து விட்டீர்களா! நான் கவனிக்கவில்லை!" என்று வியப்புடன் கூறிய கனகா, அந்தக் கையெழுத்துப் பிரதியை மரகதத்தம்மாளிடம் கொடுத்தாள்.


"இப்போது உனக்கு என்ன தோன்றுகிறது? உன் வீட்டுக்குத் திரும்பிப் போய் விடலாமென்று எண்ணுகிறாயா? அல்லது இங்கேயே தங்கிவிட விரும்புகிறாயா?" என்று வினவினாள் விடுதியின் தலைவி.

"நான் என் வீட்டை விட்டுக் கிளம்பி வந்த போது, என் பெற்றோர்களுக்கும், சகோதரிகளுக்கும் பெரிய நன்மை செய்வதாகத் தான் எண்ணி வந்தேன். இப்பொழுது தங்களுடைய கதையின் கருத்து அப்படியே என் மனத்தை மாற்றி விட்டது. ஆனால் வீட்டுக்குப் போவதென்றாலும்..." என்றாள் கனகா பீதி மிகுந்த குரலில்.

"உன் தயக்கம் எனக்குப் புரிகிறது. அந்தக் கவலை உனக்கு வேண்டாம். உன்னுடன் நானும் வருகிறேன். உன் பெற்றோர்களைச் சமாதானப்படுத்தி உன்னை அவர்களிடம் சேர்ப்பிக்கிறேன். அதோடு உனக்கு ஒரு வரனும் தேடித் தருகிறேன்" என்றாள் தலைவி.

கனகா மகிழ்ச்சியில் தலைகுனிந்து விட்டாள்.


எல்லோருக்கும் தெரியும் —
ப்ரூக் பாண்ட் தேயிலை காற்றுப்புகாமல் பாக் செய்யப்படுவதால் அதுகலப்பற்று, களங்கமற்று சுத்தமாகக் கிடைக்கிறது
ஒவ்வொரு ப்ரூக் பாண்ட் தேயிலை பாக்கெட்டிலிருந்தும் உங்களுக்கு அதிகப்படியான, ருசியான தேநீர் கிடைக்கிறது
மற்றெந்த தேயிலையை விட ப்ரூக் பாண்ட் தேயிலையே அதிகமாக விற்பனையாகிறது
ஆகையால்தான் மற்றெந்தத் தேயிலையையும் விட அதிகப்படியான ஜனங்கள்
ப்ரூக் பாண்ட் தேயிலையையே
அருந்துகிறார்கள்!
Blend
Brooke Bond Tea



பூச்சியும் புழுவும்

வண்ணத்துப்பூச்சி ஒன்று நந்தவனத்தில் செடியிலிருந்து செடிக்குப் பறந்து பூக்களில் உட்கார்ந்து தேன் குடித்துக் கொண்டு சந்தோஷமாக காலம் கழித்தது. ஒரு செடியில் இலைமேலிருந்த புழு ஒன்றை அது பார்த்தது. பார்த்துச் சிரித்தது.

"ஏய் புழுவே! நீயும் ஒரு பிராணியாக இருக்கிறாயே. உனக்கு வெட்கமில்லையா?" என்று அதை ஏளனம் செய்தது.

"என்பாட்டுக்கு நான் இருக்கிறேன். எனக்கு என்ன குறை?" என்றது புழு.

"உனக்கு ஒன்றும் தெரியவில்லை. நான் எப்படிப் பறக்கிறேன் பார். சிறகு இல்லாமல் இலையில் ஒட்டிக்கொண்டு நீ ஊர்ந்து ஊர்ந்துசெல்கிறாயே. உன் இழிவானவாழ்க்கையில நீ திருப்தியாக இருக்கிறாயே! உன்னைப் போன்ற மடப் பிராணியை நான் பார்த்ததில்லை!" என்றது பட்டுப்பூச்சி.

"அண்ணே! நீயும் கொஞ்ச நாளுக்கு முன் புழுவாகத்தான் இருந்தாய். அது உனக்கு ஞாபகமில்லையா?" என்றது ஒரு குருவி வண்ணப் பூச்சியைப் பார்த்து.

"பொய் சொல்லாதே! நாளுவது புழுவாவது. நான் எப்போதும் இப்படித்தான் இருந்தேன். இப்படித்தான் இருப்பேன்" என்றது பூச்சி.

இப்படிச் சொல்லி விட்டுத் தன் காதலன் ஆண் பூச்சியுடன் பறந்து போயிற்று. சிலகாலம் கழித்துப் பூச்சிக்குப் புத்திரப் பேறு உண்டாயிற்று. இடம் பார்த்து முட்டைகள் இட்டது. ரொம்ப மகிழ்ச்சியுடன் பூச்சியானது முட்டைகள் இட்டு அவை பொரிவதற்குக் காத்திருந்தது.

ஒருநாள் முட்டைகள் பொரிந்தன. "ஐயோ! இதுவென்ன அநியாயம்? எல்லாம் புழுக்களாயிருக்கின்றனவே? என் குழந்தைகள் என்னைப் போல் அல்லவா இருக்க வேண்டும். இது என்ன சாபம்" என்று அழுதது.

"நீ புழுவை அவமதித்துப் பேசினாயே. அது ஒரு வேளை சாபமிட்டிருக்கலாம்" என்றது ஆண் பூச்சி.

"இல்லை இல்லை. அந்தப் புழு நல்ல புழு. அது சாபம் இட்டிருக்க முடியாது" என்றது பெண் பூச்சி.

கொஞ்ச நேரம் கழித்து. "எனக்கு

ராஜாஜி

ஏனோ இந்தப் புழுக்களைக் கண்டால் இப்போது அன்பாகவே இருக்கிறது. முன் போல் இல்லை!'' என்றது பூச்சி.

"ஆச்சரியமதான். எனக்கும் அப்படியே இருக்கிறது" என்றது அதன் புருஷன்.

சில நாள் கழித்துப் புழுக்கள் எல்லாம் பூச்சிகளாய்ச் சிறகு கொண்டு பறந்தன.

"இதோ பார் உன் குழந்தைகள்?'' என்றது குருவி.

"புழுவெலலாம் பூச்சியாய்ப் போச்சே. இப்படியும் உண்டா!'' என்றது பூச்சி.

தாய்ப் பூச்சி சின்னப் பூச்சிகளைப் பார்த்து. "குழந்தைகளே! நீங்கள் புழுக்களாக இருந்தீர்களே, ஞாபக மிருக்கிறதா? என் குழந்தைகளாகப் பிறந்தீர்களே?'' என்றது.

இதைக் கேட்ட சின்னப் பூச்சிகளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. தாயைக் கவனிக்காமல் பறந்து போயின. அவையும் பூக்களில் தேன் குடிக்க ஆரம்பித்தன. தாயையும் தகப்பனையும் கவனிக்கவே யில்லை.

"இந்த உலகம் கெட்ட உலகம். பெற்ற தாயைக் குழந்தைகள் கவனிப்ப





தில்லை'' என்றது கிழப் பூச்சி துக்கத்துடன்.

"ஆமாம், கண்ணே! தூக்கம் வருகிறது. நாம் கண்ணை மூடிக் கொண்டு இனி சும்மா இருப்போம்'' என்றது பெரிய பூச்சி.

இரண்டும் இருந்த இடத்தில் அப்படியே தூங்கிப் போயின. சுகமாகத் தூங்கிப் போயின.

மறுபடியும் விழித்து எழுந்திருக்கவே யில்லை. ஒரே உறக்கம்.

ராஜா ராணி வேஷம் போட்டு விளையாடுகிறார்களே நாடகத்தில், அந்த மாதிரி புழுக்கள் கொஞ்ச நாள் பறக்கும் பூச்சிகளாக விளையாடுகின்றன. பிறகு சுகமாகத் தூங்கிப் போகின்றன. தூங்கி எழுந்திருப்பதே இல்லை. அவை ஒரு பாவமும் செய்யாத பிராணிகள். நேராக ஆண்டவனிடம் போய்ச் சேர்ந்து விடுகின்றன.

* * *

சில ஏழைகள் அதிர்ஷ்டம் அடைந்து பணக்காரர்கள் ஆகிறார்கள். அவர்களில் சிலர் தங்களுடைய முந்திய நிலைமையை மறந்து விட்டுக் கர்வமாக நடந்து கொள்கிறார்கள். அதற்கு, புழுக்கள் பூச்சிகளாகித் தம் பூர்வ வடிவத்தை முற்றிலும் மறந்து விடுவதை உபமானமாகச் சொல்லுவதுண்டு. ஆனால் அப்படிக் கர்வப்படும் மனிதர்கள் பூச்சிகளைப் போல் ஒரு பாவமும் அறியாத அப்பாவிகளல்ல. தவிர அவர்கள் பூச்சிகளைப் போல் பழைய ஜென்மத்தை முற்றிலும் மறந்து போவதில்லை. நினைவு இருந்து கொண்டே கர்வப்படுகிறார்கள். புழு பூச்சிகளைப் போல் அவர்களுக்குச் சுகமான உறக்கமும் இல்லை. அந்த மனிதர்களைப் பார்த்து நாம் பரிதாபப் படவேண்டும்.

ஒப்பற்ற ஸில்க் வேஷ்டிகள் மற்றும் அங்கவஸ்திரங்கள்

தூய ஸில்க், மிக நேர்த்தியான நெசவு

— இவைகள் பின்னியின்

தயாரிப்புகள்!



கஞ்சியோ, பசையோ போடப்படாததால் இவைகள் சுத்தம் செய்தபின் சிறிதளவும் நலிந்துபோவதில்லை

இந்த ஸில்க் வேஷ்டிகள், மற்றும் அங்க வஸ்திரங்களைச் சற்றுத் தொட்டுப் பாருங்கள். என்ன மென்மை! என்ன சுகமான தரம்! உங்கள் அபிமானத்திற்குரிய பின்னியின் புகழ்பெற்ற பெயர் கொண்ட சரக்குகளின் ஒப்பற்ற தரம் இவைகளும் கொண்டுள்ளன.

இவைகளை ஜோராக அணிந்து வைபவங்களுக்குச் செல்லுங்கள். அல்லது திருமணங்களில் பெருமையுடன் அன்பளிப்பாக வழங்குங்கள். நீங்கள் செலவழிக்கும் பணத்திற்கு முழு மதிப்பையும் அளிக்கும் இவைகளை உங்களுக்கு அருகாமையிலுள்ள பின்னி வியாபாரியிடம் காணலாம்.

தங்கஜரி பார்டரைக் கவனியுங்கள். நவநாகரீக மோஸ்தர்களுக்கேற்ப அது குறுகியதாக இருக்கிறது

தி பங்களூர் உல்லன், காட்டன் அண்ட் ஸில்க் மில்ஸ் கோ., லிட்.
ஏஜெண்டுகள், செக்ரடரீஸ் அண்ட் ட்ரஷரேர்ஸ்:
பின்னி அண்ட் கோ. (மெட்ராஸ்) லிட்.

BY, 3166

பாலர் மலர்

குறவன் வளர்க்கும் குரங்கு



குறவன் வளர்க்கும் குரங்குக் குட்டி
குதித்துக் குதித்து ஆடும்
குட்டிக் கரணம் போடும்
குச்சியைக் காட்டி லங்கா புரின்னு
'குர்ன்னு' உறுமித் தாண்டும்.

கும்பிட்டுக் கையில் இருப்பதைக் கேட்கும்
கொடுக்கா விட்டால் கடிக்கும்
கோபமாய்ப் பல்லை இளிக்கும்
குடுகுடு வென்று தூணில் ஏறிக்
கோணங்கி வித்தைகள் காட்டும்.


அடிக்கக் குச்சி எடுத்தால் போதும்
அடங்கி வாயை மூடும்
அசடு போல் தடுமாறும்
அடுத்த கணத்தில் நம்மைப் பார்த்து
அழகு காட்டிப் பழிக்கும்.

காவடி தூக்கும் கரகமும் ஆடும்
காதோடு ரகசியம் கூறும்
களிப்புடன் மடியில் உட்காரும்
காசு கொடுத்தால் வாங்கிக் குறவன்
கையில் கொடுத்து ஏமாறும்.

இத்தனை செய்யும் குரங்கிற் கேனோ
இறைவன் வாலை வைத்தார்?
இருவகைப் பிரிவினை செய்தார்?
மற்ற மனிதர்க்கும் குரங்கிற்கும் சிறிது
மாறுதல் இருக்கட்டும் என்றோ?


காட்டூர் கண்ணன்






எனக்கு பயந்தவன்


பெரிய நாய் தன் குட்டியிடம், "சாப்பிட்டாச்சோ இல்லையோ, கொஞ்ச நாழி தூங்கு; நானும் கொஞ்சம் தூங்குகிறேன்" என்றது.




"தூங்குகிறதாவது? வெளியிலே போய் எல்லாவற்றையும் பயமுறுத்தி விட்டு வருகிறேன். பார்!" என்று புறப்பட்டது.



முதலில் ஒரு பூனையைச் சந்தித்தது. 'சபாஷ்! இதோ ஒரு பூனை தூங்குகிறது. அதை மிரட்டுகிறேன்' என்று பூனையைப் பார்த்து 'வள் வள்' என்று குரைத்தது.




குட்டி நாய்க்குப் பூனையா பயப்படும்? 'கொர்... ...ர்...ர்' என்று சீறியது பூனை. நாய்க் குட்டி "இந்தப் பூனை பயப்படவில்லையே! சரி; வேறு எதையாவது பயமுறுத்திப் பார்க்கலாம்" என்று நினைத்தது.



ஒரு சேவலிடம் போய் 'வள் வள்' என்றது. "மரியாதையாய்ப் போய் விடு. கோபம் வந்தால் கொத்தி விடுவேன்" என்று கண்டித்தது சேவல். "கோழியும் எனக்குப் பயப்படாது போலிருக்கிறது" என்று அங்கிருந்து புறப்பட்டது.



எதிரில் வந்த எலியைப் பார்த்து, "என்ன தைரியம் உனக்கு? என்னைக் கண்டு பயந்து ஓடாமல் சும்மா இருக்கிறயே!" என்று கேட்டது.




எங்கே இருக்கிறான்?


எலி கேலியாக, "என்ன சொன்னாய்! நான் நான்கு நாட்களாகப் பட்டினி கிடக்கிறேன். என் உடம்பில் ஓடுவதற்குச் சக்தி ஏது?" என்றது.

"நான் உன் பசிக்கு நிறைய பிஸ்கட்டு கொண்டு வந்து தருகிறேன். சாப்பிட்டுப் பசி தீர்ந்ததும் எனக்குப் பயந்து ஓடுகிறாயா?" என்று கேட்டது நாய்க்குட்டி. 'சரி' என்றது எலி.

நாய்க்குட்டி ஓடிப் போய்த் தனக்காக வைத்திருந்த பிஸ்கட்டுகளைக் கொண்டு வந்து எலியிடம் கொடுத்தது. இதைச் சாப்பிட்டதும் 'எலி





... தனக்குப் பயந்து ஓடும்; வேடிக்கை பார்க்கலாம்' என்று நாய்க்குட்டி ஆவலாக இருந்தது. எலி பிஸ்கட்டுகளை வயிறு புடைக்கத் தின்றுவிட்டு 'அம்மாடி' என்று படுத்து விட்டது. "ஏன் படுத்து விட்டாய்? ஓடமாட்டாயா? கொஞ்சம் பயப்படேன்?" என்று கெஞ்சியது நாய்க்குட்டி. "சீச்சீ! ஓடறதாவது! பேசாமல் இரு. உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு! நான் இப்போது தூங்கப் போகிறேன்" என்றது எலி.




"அப்படியா! சாப்பிட்டதும் தூங்க வேண்டும் என்று அப்பா சொன்னது சரிதான் போலிருக்கிறது. இதோ நானும் தூங்கப் போகிறேன்" என்று நாய்க்குட்டி அங்கிருந்து கிளம்பிச் சென்று படுத்துக் கொண்டது.


நாய்க்குட்டியின் அப்பா "அட! சமர்த்தாக நான் சொன்னதைக் கேட்டுத் தூங்குகிறதே!" என்று சந்தோஷப்பட்டது.







மேஜையிலிருந்து ஒட்டைச் சிவிங்கி எழுத முடியுமா? முடியும். கீழே பாருங்கள்.



ஒரு நத்தை இருபது அடி கிணற்றுக்குள்ளிருந்து தினமும் நாலு அடி வீதம் மேலே ஏறி வருகிறது. ஆனால், ஒவ்வொரு நாளும் நாலடி ஏறினால் மூன்றடி கீழே சறுக்கி விடுகிறது. அப்படியானால் அந்த நத்தை கரை ஏறுவதற்கு எத்தனை நாள் ஆகும்?

(விடை அடுத்த இதழில்)




புள்ளிக் கோடுகளுக்கு மேல் உங்கள் மூக்கைக் கொண்டு போய் வைத்தால், பந்து, ஆட்டக்காரன் கைக்குப் போவதைப் பார்க்கலாம்.



படத்தில் ஆடிக் கொண்டிருக்கும் நடன பொம்மைகளை நீங்களே செய்யலாம். முதலில் சோடாமூடியை கார்க்குகளில் ஒட்ட வையுங்கள். பிறகு கம்பிகளை வளைத்துப் படத்தில் உள்ளது போல் செருகி விடுங்கள். கண், மூக்கு, வாய் எழுதுங்கள். பெண் உருவத்துக்குக் கலர் பேப்பரை எடுத்து விசிறி போல் மடித்து ஒட்டி விடுங்கள்.






அப்பா
விஷயம் தெரிந்தவர்
அவர் அப்பா விஷயம் தெரிந்தவர். அவர் எப்பொழுதும் ஜான்ஸனின் பேபி பவுடர் வாங்கி வருகிறார். என்ன குளுமை! என்ன மென்மை! அந்த குழந்தையின் சருமத்திற்கு எவ்வளவு இனிமையானது!
Johnson's
ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்
Johnson's
BABY
POWDER
இலவசம்
குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் இலவச பிரதிக்கு எழுதுங்கள். பெற்றோர்களுக்கு வேண்டிய அநேக விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. சுலபமாகப் படித்து புரிந்து கொள்ளும்படியான இங்கிலீஷ் பாஷையில் எழுதப்பட்டுள்ளது.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்
பி.ஓ. பாக்ஸ் 1976, டிபார்ட்மெண்ட் 30 C
பம்பாய்



தலையைக் குனிந்தவாறு மெள்ள நடந்து வந்து கூண்டில் ஏறி நின்றாள் ஒரு யுவதி. அவளுக்குச் சுமார் இருபத்து மூன்று வயது இருக்கலாம். கொடி போன்ற மெல்லிய சரீரம். கூடியிருந்த அனைவருடைய திருஷ்டியையும் ஆகர்ஷித்தது அவளது திவ்ய செளந்தர்யம்.

"தங்கள் பெயர்!" என்ற கேள்வியுடன் வழக்கை ஆரம்பித்து வைத்தார் வாதியின் வக்கீல். அவள்தான் வாதி.

"மாதங்கி!" என்றாள் மெல்லிய குரலில்.

"தயவுசெய்து தங்கள் வழக்கின் விவரத்தை எதையும் ஒளிக்காமல் கோர்ட்டார் அவர்களுக்குத் தெரிவியுங்கள்..."

மாதங்கி ஒரு நிமிஷம் மெளனமாக நின்றாள். அகன்ற அவளது விழிகள் நாலா பக்கமும் ஒரு முறை சுழன்றன. ஒரு ஓரத்தில் போடப்பட்டிருந்த பெஞ்சியின் மத்தியிலே உட்கார்ந்திருந்த ஒரு இளைஞனிடம் வந்ததும், அவை அப்படியே நிலைத்து நின்றுவிட்டன. அப்பொழுது அவள் பார்த்த பார்வை — அப்பப்பா! ஆயிரம் கதைகள் எடுத்துக் கூறியது!

மாதங்கி சொன்னாள்:

எங்கள் குடும்பம் மிகவும் சாதாரணமான நிலையில் உள்ளது. ஐந்து வருஷங்களுக்கு முன்பு திடீரென்று என் தந்தை காலமாகிவிட்டார். அப்பொழுது நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். மேற்கொண்டு படிக்க முடியாமல் போனதுடன் உழைத்துச் சாப்பிடும்படியான நிலைமை ஏற்பட்டது...

பல இடங்களில் வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருந்தேன். தினப் பத்திரிகைகளில் அன்றாடம் வெளியாகும் 'தேவை' விளம்பரப் பகுதியையும் பார்ப்பது வழக்கம்.

ஒரு நாள், சூரியன் மோட்டார் கம்பெனியின் விளம்பரம் ஒன்று என் கண்ணில்பட்டது. 'ஒரு பெண் குமாஸ்தா தேவை' என்று அறிவித்திருந்தார்கள். முதலில், எனக்குக் கிடைக்குமென்ற நம்பிக்கை இல்லை. என்றாலும், முயன்று பார்க்கலாமென்று நினைத்து ஒரு மனு எழுதி அனுப்பினேன். ஒரு வாரம் கழித்து, நேரில் வந்து பார்க்கும்படி பதில் எழுதியிருந்தார்கள். போனேன். என்னைப் போலவே இன்னும் ஏழெட்டுப் பெண்கள் வந்திருந்தார்கள். அதோ, பெஞ்சியில் உட்கார்ந்திருக்கிறாரே, மிஸ்டர் செல்வம்!... அவர்தான் எங்களையெல்லாம் பரீட்சை செய்தது. அதிர்ஷ்ட வசத்தாலோ அல்லது துரதிருஷ்ட வசத்தாலோ அந்த வேலை எனக்கே கிடைத்தது!

செல்வம், அந்தக் கம்பெனியின் உதவி மானேஜர். நான் அவருக்கு உதவிக் குமாஸ்தாவாக நியமிக்கப்பட்டேன்.

செல்வம் மிகவும் கண்ணியமான மனிதர்; நேர்மை தவறி நடக்காதவர்; நல்ல அறிவாளி; இனிய சுபாவமுடையவர். இது என் சொந்த அபிப்பிராயம் மட்டு மல்ல; காரியாலயத்திலும் வெளியிலும் அவரைப் பற்றி யாவரும் மிகவும் உயர்வாகவேதான் பேசுவார்கள்.

செல்வம் ஒரு நாள், தமது உள்ளத்தை என்னிடம் திறந்து காட்டினார். என்னைக் காதலிப்பதாகவும், நான் இல்லாமல் தம்மால் உயிர் வாழ முடியாதென்றும் இன்னும் என்னவெல்லாமோ பேசினார்.

அவரிடத்தில் நான் அளவு கடந்த மதிப்பும் பிரியமும் வைத்திருந்தேன். ஆனால் காதலிக்கவில்லை! இல்லை; காதலிக்க முடியவில்லை. 'அந்தஸ்து' என்ற அகழி குறுக்கே நின்றது. அவரோ பெரிய தனவந்தர். கிராமத்தில் அவருக்கு நிறைய நிலபுலன்கள் இருந்தன. அவர் உத்தியோகம் பார்ப்பதே வெறும் பொழுது போக்குக்குத்தான். நானோ, உழைத்துச் சாப்பிடவேண்டிய ஓர் ஏழை. இந்த எண்ணம் ஆரம்பத்திலிருந்தே என் மனத்தில் நன்றாகப் பதிந்திருந்தது. எனவேதான் தகாத காதலுக்கு நான் துளியும் மனத்தில் இடம் அளிக்கக் கூடாதென்ற வைராக்கியத்துடன் இருந்தேன். அன்று அவர் தம் அந்தரங்கத்தை வெளியிட்டதும் என் உள்ளத்தில் புயல் வீசிற்று.

மறுநாள் முதல் ஒரு வாரத்துக்கு நான் வேலைக்கே போகவில்லை. எப்படி அவர் முகத்தில் விழிப்பது! அவருக்கு என்ன பதில் சொல்வது! 'என்னால் தங்களைக் காதலிக்க முடியாது' என்று சொல்லி விடக்கூடிய மனோதிடம் எனக்கில்லை. அப்பொழுது அவர் முகம் அடையும் மாறுதலை, அவர் மனம் அனுபவிக்கும் வேதனையைக் கண்டு சகிக்கும் சக்தி எனக்கில்லை. எனவே, 'உடம்பு சரியில்லை' என்று காரணம் கூறி, 'ரஜா' கோரிக் கடிதம் எழுதி அனுப்பி விட்டேன்.

ஆனால், ஒரு வாரம் கழித்து ஒரு நாள், 'என்ன உடம்பு!' என்று கேட்கும் சாக்கில் செல்வம் என் வீட்டைத் தேடியே வந்து விட்டார். அப்பொழுது வீட்டில் நான் மட்டும் தான் இருந்தேன். அவரைக் கண்டதும் என் உள்ளம் திக் திக்கென்று அடித்துக் கொண்டது. அழுகையும் ஆத்திரமுமாக வந்தன. எதையும் காட்டிக் கொள்ளாமல் "வாருங்கள்!" என்று வரவேற்றேன்.

"மாதங்கி! ஏன் இந்தக் கண்ணீர்!...உன்னை வாட்டும் துக்கம் என்ன!" என்று கேட்டார்.

"என்னை மன்னியுங்கள்! தயவுசெய்து என்னை மறந்து விடுங்கள்..." என்று கைகளைக் கூப்பி நமஸ்கரித்தேன். ஒன்றும் புரியாத வகையில் என்னைப் பார்த்தார். விஷயத்தை விளக்கிச் சொன்னேன். ஒரு விநாடி மௌனமாக எதையோ ஆலோசித்தபடி இருந்தார். பிறகு "அந்தஸ்துதானே குறுக்கே நிற்கிறது! நீ, என் நிலையை அடைவதானால் ஒருவேளை நீண்ட காலமாகலாம். அல்லது முடியாமலே போகலாம். நான் உன்னுடைய நிலைமையை அடைவதற்கு எத்தனை நாழிகை ஆகும்! என்னுடைய சொத்து முழுவதையும் தான தர்மத்துக்கு எழுதி வைத்து விடுகிறேன்! ஆனால், உன்னை மட்டும் என்னால் மறக்க முடியாது!" என்று கூறி வெறிகொண்டவர் போல எழுந்து வந்து என் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். நான் செயலிழந்து நின்றேன்.

அதன் பிறகு ஆறு மாதங்கள் ஓடி விட்டன. அவரும் நானும் உயிருக்கு உயிராகப் பழகி வந்தோம். எக்காரணத்தை முன்னிட்டும் என்னையன்றி வேறு யாரையும் மணப்பதில்லையென்று தினம் ஒரு முறை சொல்லிக் கொண்டிருந்தார். நானும் நம்பினேன். அதனால், கொஞ்சம் அளவுக்கு மீறியே பழகினோம். இதனாலெல்லாம் ஊரில் எங்கள் பெயர் மிகவும் கெட்டிருந்தது. எங்கள் காது படவே பல வதந்திகள் பரவலாயிற்று.

"நம் திருமணத்தை முடித்து விட்டால், யாரும் எதுவும் சொல்ல முடியாதல்லவா! இப்பொழுதே அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்!" என்று கூறி விட்டு அவர் ஊருக்குப் போனார்.

அவர் வரவில்லை; அவருடைய ராஜினாமாக் கடிதம் மட்டும் எங்கள் காரியாலயத்துக்கு வந்து சேர்ந்தது.

அப்பொழுதே என் மனத்தில் பலவிதமான சந்தேகங்கள் எழுந்தன. 'ஏமாந்து விட்டோமா!' என்று நினைக்கும் போது என் உடல், உள்ளமெல்லாம் பதறின. அவருக்கு இரண்டு கடிதங்கள் எழுதினேன். பதிலில்லை. எனவே, நேரிலேயே புறப்பட்டுப் போனேன். அது ஒரு சின்னஞ் சிறிய கிராமம். ராஜமங்கலம் என்று பெயர்.

என்னிடம் மிகவும் பிரியமாகவே பேசினார். "மாதங்கி!......நான் உன்னை ஒரு நாளும் மோசம் செய்ய மாட்டேன்! கல்யாணத்துக்கான ஏற்பாடுகள்தான் செய்து கொண்டிருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் உனக்குத் தெரியப் படுத்துகிறேன்......" என்று எனக்குத் தைரியம் சொல்லி அனுப்பினார்.

மேலும் மூன்று மாதங்கள் பொறுத்திருந்தேன். ஒரு தகவலும் இல்லாமற் போகவே மீண்டும் ஒரு கடிதம் எழுதினேன். அதற்கு அவரிடமிருந்து வந்த பதில் இதுதான்!..."


இவ்வாறு மாதங்கி கூறிவிட்டு, ஒரு 'உள்நாட்டு'த் தபால் கவரைக் கோர்ட்டாரிடம் சமர்ப்பித்தாள்.

அதில் கண்டிருந்த வாசகம் வருமாறு:

" என் அன்புக்குரிய மாதங்கி!

எனக்குச் சிறு வயது முதற்கொண்டே ஒரு விசித்திரமான எண்ணம் தோன்றும். 'நாம் ஏன் பிறந்திருக்கிறோம்!' என்று என்னையே அடிக்கடி கேட்டுக் கொள்வேன். வெகு நாள் வரையில் அதற்கு விடை கிடைக்காமலே இருந்தது. படிப்பு முடிந்ததும், உத்தியோகத்தில் அமர்ந்தேன். எனக்குக் கீழே பல பேர்கள் வேலை பார்த்தனர். ஒவ்வொரு சிறு காரியத்துக்கும் என் உத்தரவுக்காகக் காத்திருப்பார்கள். அப்பொழுதெல்லாம் 'இதற்காகத்தானா பிறந்திருக்கிறோம்!' என்று நினைத்துக் கொள்வேன். மனம் திருப்தியடையாது. ஒரு நாள், மினுக்கும் தாரகைகளின் மத்தியில் அமைதியான முழு நிலவைக் கண்டாற்போல, பல பெண்களுக்கு மத்தியிலே உன்னைப் பார்த்தேன். எப்பொழுதோ, கற்பனைக்கு எட்டாத காலத்தில் இழந்துவிட்ட உன்னை, யுகயுகாந்தரமாகத் தேடிக் கொண்டிருந்த உன்னை, திடீரென்று கண்டு பிடித்து விட்டாற் போன்றதொரு பிரமை உண்டாயிற்று. கடவுளின் சிருஷ்டித் திறமையை வியந்தேன். அழகிகளையும், அறிவாளிகளையும் படைப்பது ஒரு பெரிய காரியமில்லை; ஆனால் யார் யாரை எந்தெந்தக் காலத்தில் படைக்க வேண்டுமென்பதைத் தெரிந்து படைக்கிறாரே, அது தான் பெரிய விஷயம்!

மாதங்கி! ஈசுவர சாட்சியாகச் சொல்லுகிறேன். உன்னை வஞ்சிக்க





'ஓவல்டின்'

இன்றியமையாததான குடும்ப பானம்!


பொதுவாக பேசினால், ஆனந்தமான குடும்பங்கள் ஆரோக்கியமான குடும்பங்களாக உள்ளன. ஆனாலும் தாத்திலும் தினசரி போஷாக்கு அவர்களுக்குப் போதும்? ஆரோக்கியத்திற்கு அவசியமான உணவுச் சத்துக்கள் சாதாரண சாப்பாட்டில் சிலசமயங்களில் இல்லை என்பதை அறிந்து பல புத்திசாலித்தனமான வீட்டுப் பெண்மணிகள், தங்கள் குடும்பத்தாருக்கு ஓவல்டின் கலந்து கொடுக்கிறார்கள்.

ருசி மிகுந்த ஓவல்டின் ஒவ்வொருவருக்கும் இழந்த சக்தியை தருவதோடு, ஆரோக்கிய சுகமான நித்திரையையும் அளிக்கிறது. முதிர்ந்த பார்லிமால்ட், சுத்தமான க்ரீம் பசும்பால், பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட கோக்கோ, இயற்கையான பாஸ்பேட்டுகள், வைட்டமின்கள் ஆகியவைகள் பக்குவமாகக் கலந்து தயாரிக்கப்பட்ட உணவுச்சத்து. வைட்டமின்கள் Bயும் Dயும் சேர்த்து சிறப்பிக்கின்றன. 'ஓவல்டின்' வாங்குவதின் அமிர்தமான லாபம்-அதற்கு இணை வேறு இல்லை!

விநியோகஸ்தர்கள்: கிரஹாம்ஸ் ட்ரேடிங் கோ.,(இந்தியா) பிரைவேட் லிட்


ஓவல்டின்

உலக அபிமானம் பெற்றுள்ள உணவு பானம்!




சனிக்கிழமைகளில் இரவு 8 முதல் 8-30 வரை ரேடியோ சிலோனில் ([illegible]-41.72 மீட்டர்கள்) ஓவல்டின் அமெச்சூர் நேரத்தைக் கேளுங்கள்.

IV. 444



இந்த முக க்ஷவரப் பரீக்ஷையை நீங்களே செய்து பாருங்கள்

சிறந்த பிளேட் எது என்பதை சுலபமாக நிர்ணயிக்க, எந்த பிளேட் வெகுகாலம் கூர்மையுடன் இருக்கிறது எனக் கவனியுங்கள். ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகள் மழமழப்பானது. ஒவ்வொரு பிளேடும் அதிகப்படியான சுக க்ஷவரங்களை அளிக்கின்றன என்று உங்களுக்குத் தெரியவரும். இதனால் உங்கள் பணம் மிச்சமாகிறது. வேறெந்த பிளேடுகளைக்காட்டிலும் ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகள்தான் நீங்கள் செலவழிக்கும் பணத்திற்கு அதிகப்படியான பெறுமானம் அளிக்கிறது. இன்றே அவைகளை வாங்கி பரீக்ஷியுங்கள்.



7 o'clock BLADES

ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகள்

வேண்டுமென்ற நோக்கம் எனக்கில்லை. உன்னையே அடைவது என்ற திட நம்பிக்கையுடன்தான் உன்னிடம் நான் அப்படிப் பழகினேன். உன் பரிசுத்தம் என்னால் பாழ்பட்டதென்னவோ உண்மைதான் : ஆனால், அது நான் வேண்டுமென்றே செய்த துரோகமல்ல! இதை நீ பரிபூரணமாக நம்பு. நம்புவாயென்றும் எனக்குத் தெரியும். உன்னை வரிக்கும் பாக்கியம் நான் பெறவில்லை போலிருக்கிறது. தெய்வாதீனமாகச் சில இடையூறுகள் குறுக்கிட்டிருக்கின்றன. ஆனால் இப்பொழுதும் ஒன்றும் மோசம் போகவில்லை. என்னால் முடிந்த வரையில் உன்னையே மணக்க முயற்சிக்கிறேன். துரதிருஷ்ட வசத்தால் உன்னை நான் இழக்க நேர்ந்தால், நீ கோரும் நஷ்ட ஈட்டைக் கொடுப்பதற்குச் சித்தமா யிருக்கிறேன்.

பணத்தைக்கொண்டு ஏமாற்றுவதாக நினைக்காதே. உனக்கு நான் அதுகூடச் செய்யாவிட்டால் நன்றாயிருக்குமா !

ஆனால், மாதங்கி ! உன்னை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். தயவுசெய்து நீ இந்த விஷயங்களை யாரிடமும் சொல்லாதே. எனக்கு மானம்தான் பெரிது. அதைப் போக்கி விடாதே. கடைசியாக ஒரு வார்த்தை : உன் பிரிவால் நான் படும் வேதனையை இந்த ஒரு கடிதத்தில் எழுதிச் சாத்தியமில்லை. உணர்வின்றி, உற்சாகமின்றி, ஒரு நடைப் பிணமாகத் திரிந்து கொண்டிருக்கிறேன். உன் பிரியமுள்ள,

செல்வம்.


கடிதத்தைப் படித்து முடித்த நீதிபதி அவர்களின் பார்வை பெஞ்சியில் உட்கார்ந்திருந்த செல்வத்தின் மீது சென்றது. பிறகு வக்கீலைப் பார்த்தார். வக்கீல் மாதங்கியைப் பார்த்து, "பிறகு என்ன நடந்தது !" என்று கேட்டார்.

"மூன்று மாதங்கள் பொறுத்திருக்கும்படி கேட்டுக் கொண்டிருந்தார். எட்டு மாதங்கள் காத்திருந்தேன். பயனில்லை. இன்னொரு முறை ராஜமங்கலம் சென்றேன். இந்தத் தடவை என்னிடம் அவர் மிகவும் கடுமையாக நடந்து கொண்டார். சொல்லத் தகாத வார்த்தைகளை யெல்லாம் சொல்லி அனுப்பி விட்டார் ! பித்துப் பிடித்தவன் போல் இருந்தேன். நான் இருந்த நிலைமையின் காரணத்தை என் தாயார் வேறு விதமாக அர்த்தம் செய்து கொண்டாள். என்னை விவாகம் செய்து கொள்ளும்படி தூண்டினாள். அவளுக்கு எங்கள் காதல் நாடகமெல்லாம் தெரியாது !

"எனக்கு வேறு ஒருவரை மணக்கும் உத்தேசமும் இல்லை ; இருந்தாலும், என்னை ஏற்றுக் கொள்ள யாரும் முன் வந்திருக்க மாட்டார்கள். எனக்கும் செல்வத்துக்கும் இருந்த தொடர்பு உலகறிந்த விஷயம் !" என்று மாதங்கி கூறி நிறுத்தினாள். சில வினாடிகள் கோர்ட்டில் ஓர் அசாதாரண அமைதி நிலவியது.

"நீங்கள் சொல்ல வேண்டியது இன்னும் ஏதாவது உண்டா !" என்றார் வக்கீல்.

"செல்வம் அவர்கள் என்னையே மணக்க வேண்டும் ; அல்லது ஜீவனாம்சமாக மாதம் இருநூறு ரூபாய் கொடுக்க வேண்டும் ! நான் வேறு யாரையும் மணக்கப் போவதில்லை ; வேலையையும் விட்டு விடப் போகிறேன். இரண்டில் ஒன்று நடக்கக் கோர்ட்டார் நியாயம் வழங்க வேண்டும் !" என்று மிகவும் தாழ்மையுடன் கூறி விட்டுக் கூண்டிலிருந்து இறங்கிச் சென்றாள் மாதங்கி.



இடைவேளைக்குப் பிறகு மிஸ்டர் செல்வம் கூண்டுக்கு வரவழைக்கப் பட்டார்.

"வேலைக்காக வந்த பெண்மணிகளில் மாதங்கியைத் தேர்ந்தெடுத்த செல்வம், நீங்கள்தானா !"

"ஆம் !"

"பிறகு அவளை ஆசை காட்டி மோசம் செய்தது உண்மைதானா !"

"இல்லை !"

வக்கீல், மிகவும் சாமர்த்தியமாகப் பல குறுக்குக் கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கச் செல்வம் தமது வாக்கு மூலத்தைக் கொடுத்தார் :

வேலைக்காக வந்த பெண்களைப் பரீட்சை செய்து நான்தான் மாதங்கியைத் தேர்ந்தெடுத்தேன்.

சில நாட்கள் மாதங்கி, வீட்டுக்குத் திரும்பும்போது இருட்டி நேரமாகிவிடும். அது மாதிரி சமயங்களில் நானே துணைக்குச் செல்வேன். நாளடைவில் இது சகஜமாகி விட்டது.

நாளுக்கு நாள் எங்கள் நட்பு வளர்ந்து கொண்டே போயிற்று.

ஒருநாள் மாதங்கி என்னைக் காதலிப்பதாகச் சொன்னாள் !

மாதங்கியிடம் எனக்கு எல்லையற்ற அன்பும், மதிப்பும் உண்டு. ஆனால் காதல் இல்லை ! காதலிக்க முடியவில்லை. ஏனெனில், என் விவாகம் ஏற்கனவேயே நிர்மாணிக்கப்பட்டு

விட்ட விஷயம். கிராமத்தில் என் வீட்டிலேயே எனக்காக ஒரு பெண் வளர்ந்து வந்தாள்.

மாதங்கியிடம் விஷயத்தை விளக்கினேன். என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தேன். அப்படியே இடிந்து போனாள்; கெஞ்சினாள்.

"நீங்கள் மணக்கப்போகும் பெண்ணிடம் உங்களுக்குக் காதலா!" என்றாள்.

"அப்படி யொன்றுமில்லை……" என்று கூறினேன். அத்துடன் அந்தப் பேச்சு முடிவடைந்தது.

காலைந்து மாதங்கள் சென்றன. மாதங்கியைத் திரும்பவும் அந்த வியாதி பிடித்துக் கொண்டது. தன் காதல் பாடத்தைப் படிக்கத் தொடங்கினாள். அப்புறம் அவளுக்கு இதே தொழிலாகி விட்டது. சதா என்னைத் தொந்தரவு செய்யலானாள். எனவேதான் வேறு வழியின்றி, அதிலிருந்து தப்புவதற்காக என் வேலையை ராஜினாமாச் செய்தேன்.

ஆனால் நான் நினைத்தது தவறு. அப்பொழுதும் மாதங்கி என்னை மறக்கவில்லை. ஆறு மாதங்கள் கழித்து ஒரு நாள், திடீரென்று எங்கள் கிராமத்துக்கே வந்துவிட்டாள்! அப்போது அவளிடம் என்னுடைய உண்மை நிலையை எடுத்துச் சொன்னேன்.

"மாதங்கி! 'அவளிடம் உங்களுக்குக் காதலா!' என்று முன்பு நீ கேட்டாயே; அந்தக் காதலுக்கு இப்போது நான் அடிமை. அவளை விட்டு ஒரு கணமும் என்னால் பிரிந்திருக்க முடிவதில்லை. அதனாலேயே வேலையை விட்டு விட்டேன்!" என்றேன். இதனால் அவள் மனம் மாறும் என்று எதிர்பார்த்தேன்.

"அப்படியா! சரி!" என்று கூறி விட்டு எரித்து விடுவதைப் போல என்னைப் பார்த்தாள். பிறகு திரும்பிக் கூடப் பார்க்காமல் 'விர்'ரென்று போய் விட்டாள்.

ஒரு வாரத்துக்கெல்லாம் என்னைத் தேடி வக்கீல் 'நோட்டீஸ்' வந்தது.

செல்வம் கூறி முடித்ததும் மாதங்கியின் வக்கீல் தமது ஆசனத்திலிருந்து எழுந்தார்.

"மிஸ்டர் செல்வம்! ஒரு விஷயத்தைச் சொல்ல மறந்து விட்டீர்கள் போலிருக்கிறதே! மாதங்கியின் பெயருக்கு 7-3-53 அன்று ஒரு கடிதம் எழுதினீர்களே……அது ஞாபகம் இல்லையா!" என்றார் வக்கீல்.

"அவளுக்கு இது வரையில் நான் ஒரு கடிதமும் எழுதியது கிடையாது!"

"நன்றாக நினைத்துப் பாரும்!"

"தேவையே யில்லை!" என்றதும் மாதங்கி தாக்கல் செய்த கடிதத்தை எடுத்துச் செல்வத்தினிடம் கொடுத்தார் வக்கீல். கடிதத்தை நன்றாக உள்ளும் புறமும் பார்த்தார் செல்வம். தபால் முத்திரையும் பளிச்சென்று இருந்தது.

"என்ன சொல்லுகிறீர்!" என்றார் வக்கீல்.

"முழுக்க முழுக்க என் எழுத்தைப் போல இருந்தாலும் இதை நான் எழுதவில்லை!"

"கடிதத்தையே மோசடி என்கிறீரா!"

"அப்படித்தானே இருக்க வேண்டும்!……"

இப்படிக் கூறிய செல்வத்தை வக்கீல் மேற்கொண்டு ஒன்றும் கேட்கவில்லை.

கடிதத்தைக் கையெழுத்துப் பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பி, கடிதத்தின் உண்மையை அறிவதற்காக, விசாரணையைப் பதினைந்து நாட்களுக்கு ஒத்தி வைத்தார்கள்.

அன்று தீர்ப்புச் சொல்லும் நாள்.

"யுவர் ஹானர்! கையெழுத்துப் பரிசோதனையாளர்கள் கையெழுத்தைப் பற்றி ஒருவிதமான தீர்மானமான அபிப்பிராயத்தையும் கொடுக்கவில்லை யென்பதை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்; அந்தக் கடிதம் ஒரு மோசடிக் கடிதமா யிருக்க வேண்டும்" என்று வாதாடினார் செல்வத்தின் வக்கீல்.

"உங்களால் தகுந்த ஆதாரத்துடன் நிரூபிக்க முடியுமா!" என்று கேட்டார் நீதிபதி.

"முடியும், யுவர் ஹானர்! தயவு செய்து அந்தக் கடிதத்தை எடுத்து அதன் தபால் முத்திரையை ஒரு முறை பாருங்கள். 'ராஜமங்கலம் 7. மார்ச் 53' என்று பளிச்சென்று தெரிகிறது. வெகு சாமர்த்தியமாகக் கடிதம் எழுதிக் கதையை ஜோடித்தவர்கள் ஒரு விஷயத்தை மறந்து விட்டார்கள். ராஜமங்கலத்தில் அந்தத் தேதியில் தபாலாபீஸ் இருந்ததா என்பதைத் தெரிந்து கொள்ளவில்லை!……? மே. 53-ல் தான் ராஜமங்கலத்தில் புதிதாக ஒரு தபாலாபீஸ் திறக்கப்பட்டது. அது நாள் வரையில் இரண்டு மைல் தள்ளி இருக்கும் பாண்டவபுரம் என்னும் ஊரில் உள்ள தபாலாபீஸ் தான் ராஜமங்கலத்துக்கும் பயன்பட்டு வந்தது. எனவே, அந்தத் தபால் முத்திரையே மோசடி! அரசாங்க முத்திரையையே மோசடி செய்தவர்கள், ஏன் கையெழுத்து மோசடி செய்திருக்க மாட்டார்கள்!…" என்று வக்கீல் கூறிவிட்டு, தபாலாபீஸ் புதிதாகத் திறந்ததற்கு அதிகார பூர்வமான அத்தாட்சிப் பத்திரத்தையும் கோர்ட்டில் சமர்ப்பித்தார்.

வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது!

செல்வத்தின் மகிழ்ச்சிக்கும், வியப்புக்கும் அளவேயில்லை. விசாரணைக் கூடத்திற்கு வெளியில் வந்தும் பிரமை பிடித்தாற் போல நின்று கொண்டிருந்தார்.

"கன்கிராஜுலேஷன்ஸ்!" என்ற குரல் கேட்டுப் பின்னால் திரும்பிப் பார்த்தார்.

"நீயா!"

"ஆமாம்; நானேதான்! உங்கள் அன்புக்காகப் பலவிதத்திலும் போராடித் தோல்வியுற்ற அபாக்கியவதி!"

"மாதங்கி தெரியாமல் பேசாதே. என் அன்பு உனக்கு என்றைக்கும் உண்டு!"

"நிஜமாகவா! அப்படியானால் என்னை மன்னித்து ஏற்றுக்கொள்வீர்களா! எல்லாம் உங்களிடம் நான் கொண்டிருந்த எல்லையற்ற காதலால் வந்த வினை. பொய்க் கையெழுத்திடுவதில் சூரனான ஒருவன் நம் இருவருக்கும் நிரந்தரப் பகையை உண்டு பண்ணி விட்டால், ஒருவேளை நான் அவளை அடைவேனென்று எண்ணினான். நான் என்ன எண்ணினேன், தெரியுமா! ஜீவனாம்சம் கொடுப்பதற்குப் பயந்தாவது என்னை ஏற்றுக் கொள்ள மாட்டீர்களாவென்று எண்ணினேன். அன்பால் அடையமுடியாத உங்களைப் பலாத்காரத்தால் அடைய முயற்சித்தேன். என்னிடம் நீங்கள் வைத்திருந்த மதிப்பும் அன்பும்……"

மேற்கொண்டு அவளால் பேச முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam



அது சமையல் செய்வதற்கு சிறந்ததாய் இருப்பதோடு போஷாக்கையும் தரும்!

HVM. 204-30 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

